விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 12 சனிக்கிழமை (27.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 008

# மைத்திரிபாலவுக்கு வெற்றி நிச்சயம்!

## சந்திரிகா ஆரூடம்



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன நிச்சயம் வெற்றியீட்டுவார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். கொழும்பு காக்கைதீவு பகுதியில் நடைபெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

23 ஆம் பக்கம் பார்க்க....

## பதுளையில் மண்சரிவு 19 பேர் உயிரிழப்பு



(கொழும்பு)

ஊவா மாகாணம பதுளை மாவட்டத்தில் பல இடங்களில் ஏற்பட்டுள்ள மணசரிவுகளில் சிக்கி குறைந்தது 19 பேர் உயிரிழந்துள்ளனர். 11

24 ஆம் பக்கம் பார்க்க....

## புலனாய்வுப் பிரிவினரிடம் ரணில்-மைத்திரி வாக்குமூலம்

(கொழும்பு)

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஆகியோர் புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ் மா அதிபரிடம் செய்த முறைப்பாடு தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மைத்திரிபால சிறிசேனவுடன் தாம் இரகசிய உடன்படிக்கை செய்து

24 ஆம் பக்கம் பார்க்க....

## பிரபாகரன் இருந்திருந்தால் வடக்கில் என்ன நடந்திருக்கும்!

### கேள்வி எழுப்புகிறார் மகிந்த



(கொழும்பு)

வடக்கில் தனி ராஜ்ஜியம் அமைக கப்பட்டிருந்தால் நீங்கள் எங்கு இருந்திருப்பீர்கள்? வடகிழக்கு என்று தனி இராஜ்ஜியம் ஒன்று உருவாகி அதில் பிரபாகரன் ஆட்சி செய்திருந்தால் இந்த முஸ்லிம் மக்களுக்கு நடந்திருக்கும் நிலை என்ன என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசார நிகழ்வு ஒன்றில் உரையாற்றும போதே அவர் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ரணில் விக்கிரமசிங்க கூறினாராம், மகிந்த சிந்தனையில் எதுவும் செயற்படுத்தப்பட்ட விடயங்கள் இல்லை என்று. அவருக்கு தெரியவில்லை. இதில் இருப்பது நாம் செய்த வேலைகளில் பாதி மட்டுமே.

அந்தளவுக்கு எமது அரசாங்கம் வேலைகள் செய்துள்ளது.

நீங்கள் உங்கள் நெஞ்சில் கை வைத்து உண்மையாக சொல்லுங்

24 ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்ற விசாரணைகள் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

போர்க்குற்றச் செயல் விசாரணைகள் குறித்த நிலைப்பாட்டில் மாற்றமில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

சர்வதேச ரீதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் நடத்தப்பட்டு வரும் போர்க் குற்றச் செயல் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கையிடம் அண்மையில் கோரியிருந்தார்.

சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கை ஆதரவளிக்க வேண்டியது

24 ஆம் பக்கம் பார்க்க....

## அரசுடன் இணைய பொன்சேகா விருப்பம்?

(கொழும்பு)

முன்னாள் இராணுவ தளபதியும், ஜனநாயக கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து பேச்சுக்கள் இடம் பெறுவதாகவும், அரசாங்கம் பொன்சேகா கேட்பதை ,வழங்குவதற்கு தயாராக உள்ளதாகவும் தெரிய வருகின்றது.

அரசாங்கத்தில் அவர் இணையும்பட்சத்தில் பறிக்கப்பட்ட அவ

24 ஆம் பக்கம் பார்க்க....

## படகுகளை தயார் செய்ய தேர்தல் ஆணையாளர் பணிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் 12 நாட்களே உள்ள நிலையில், அடுத்த சில நாட்களில்கடுமையான மழை பெய்யும் என்று வானிலை அறிக்கைகள் வெளியாகியிருப்பதால், படகுகளைத் தயார் செய்யும் படி தேர்தல்ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கையில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக பெய்யும் மழையால பெரும்பாலான பகுதிகளில் நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிவதால், பல இடங்கள் வெள்ளக்காடாக மாறியுள்ளன. இதனால் ஏழு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மீண்டும் கன மழை பெய்யும் வாய்ப்பு இருப்பதாக வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் பெரு வெள்ளம் ஏற்படும் ஆபத்து பெரும்பாலான பகுதிகளில் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்

24 ஆம் பக்கம் பார்க்க....

## மிக மோசமான காலநிலை சிவப்பு அறிவித்தல்

(கொழும்பு)

நாட்டில் நிலவுகின்ற மிக மோசமான காலநிலையை அடுத்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சிவப்பு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. புத்தளம் முதல் காங்கேசன்துறை ஊடாக பொத்துவில் வரை கரையோரபகுதிகளில் வாழ்கின்றவர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மலையகத்துக்கான ரயில் சேவைகள் முற்று முழுதாக இரத்து செய்யப்பட்டுள்ளன என்று ரயில்வே கட்டுப்பாட்டறை அறிவித்துள்ளது. அத்துடன், மட்டக்களப்புக்கான ரயில் சேவை

24 ஆம் பக்கம் பார்க்க....

## மோடிக்கு உதவியவர் மகிந்தவுக்கும் உதவி!

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக சமூக வலைத்தளங்களில் தேர்தல் பரப்புரைகளைச் செய்வதற்கு இந்திய தகவல் தொழிலநுட்ப நிபுணர் ஒருவர் உதவி வருவதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஆதரவாக சமூக வலைத்தளங்களில் பரப்புரைகளை மேற்கொள்வதில் முக்கிய பங்காற்றிய அரவிந்த் குப்தா என்ற தகவல் தொழில்நுட்ப நிபுணரே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு பங்காற்றி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

24 ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவம் ஆதரவு!

(கொழும்பு)

மகிந்த் ராஜபக்ஷவுக்கு ஆதரவாக இராணுவம் தேர் தல் பிரசாரத்தில் ஈடுபடுவதாக டிரான்ஸ்பரன்ஸி இண்டர்நஷனல் என்ற தன்னார்வ அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

24 ஆம் பக்கம் பார்க்க....

## பருத்தித்துறையில் கஞ்சா



(கரணவாய்)

பருத்தித்துறை இன்பருட்டிப் பகுதியில் 45 இலட்சம் ரூபா

24 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெண்காட்டில் கஜமுகாசூரன் போர்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு கஜமுகாசூரன் போர் இடம் பெறும்.

முன்னதாக இன்று அதிகாலை ஐந்து மணியளவில் திருவெம்பாவை பூசை வழிபாடுகளும் பெருங்கதைப் படிப்பும் இடம் பெற்று கஜமுகாசூரன் போர் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# நான்கு உறுப்பினர் மகிந்தவுக்கு ஆதரவு

(குருமன்காடு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் உறுப்பினர்கள் மூவர், ஐ.தே.க. உறுப்பினர் ஒருவருமாக நால்வர் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு இந்த முடிவை அறிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பிரதேச சபை உறுப்பினர்களான இராஜசேகரன், சுபாஸ்கரன், பார்த்தீபன் ஆகிய மூவரும் ஐ.தே.க.வைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் பிரசாத் ஆகியோரே இவ்வாறு கட்சி தாவியுள்ளனர். (எ-250)

# அமைச்சர்கள் சிங்கப்பூருக்கு

(கொழும்பு)

ஆளும் கட்சியின் அமைச்சர்களும் சிங்கப்பூர் நோக்கிப் படையெடுக்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இரண்டு பிரதி அமைச்சர்களும் ஒரு கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினரும் இவ்வாறு சிங்கப்பூர் சென்றுள்ளனர்.

முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா, சிறுபோக பிரதி அமைச்சர் நிசாந்த முத்துஹெட்டிகம மற்றும் வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன ஆகியோர் சிங்கப்பூர் விஜயம் செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை 12.51அளவில் ஸ்ரீலங்கா விமானச் சேவைக்கு சொந்தமான யூ.எல்306 விமானத்தில் நிசாந்த முத்துஹெட்டிகம சிங்கப்பூர் சென்றுள்ளார். (எ-11)

# ரிசாத்துக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்



வாழ்வின் எழுச்சி திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி வழங்கப்படுவதில் முறைகேடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக வவுனியா செட்டிகுளம் முதலியாகுளம் மக்கள் செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த வாழ்வின் எழுச்சி திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி வழங்குவதில் பயனாளிகள் தேர்வில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக செட்டிகுளம் பிரதேச செயலாளருக்கு முறையீடு செய்ததுடன் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் ஆதரவாளர்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமே வழங்கப்பட்டதாகவும் உண்மையாகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவில்லை எனவும் அவர்கள் கூறினர். (எ-250)

---

வலிகாமம் தெற்கு பிரதேச சபை

වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව

VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
CHUNNAKAM

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## பொது அறிவித்தல் – 2015

**1. படவரைஞராகப் பதிவு செய்தல் – 2015**

2015ம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2015ம் ஆண்டு ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும். புதுப்பித்துக் கொள்ளவும் முடியும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

**2. வியாபார அனுமதிப்பத்திரம் – 2015**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் 2015ம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தினை 2015ம் ஆண்டு ஜனவரி 15ம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி சுன்னாகம்.உடுவில்.ஏழாலை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2015ம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2015ம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**3. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு-268 பிரகாரமான அறிவித்தல்**

3.1 வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில்கள், மலசல கூடங்கள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல்/திருத்த வேலைகள் செய்தல் சட்டத்தின் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதை அறியத்தருகின்றேன்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் கட்டடவிண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன் அங்கீகாரம் பெறப்படவேண்டும். அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நட்ட ஈடும் வழங்கப்படாமலும் முன்னறிவித்தல் வழங்கப்படாமலும் சபையினால் அகற்றப்படும்.

3.2 ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்தில் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.3 அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.4 எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து தர வீதிகளின் இரு மருங்கிலும் எல்லைவேலி மற்றும் எல்லைச்சுவருக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள பூமரக்கன்றுகள், புல்பூண்டுகள், பார்த்தீனியம் மற்றும் அலங்கார சீமெந்துக்கட்டுக்கள் போன்றவற்றை அகற்றித் துப்புரவு செய்யுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன். தவறின் சபையினரால் அகற்றப்படும் என்பதையும் அன்புடன் அறியத்தருகின்றேன்.

**4. துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமம் பெறல்**

2015ம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமத்தை பங்குனி மாதம் 31ம் திகதிக்கு முன்னர் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**5. சுன்னாகம்/உடுவில்/ஏழாலை உப அலுவலக ஆதன வரி அறிவித்தல்**

1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 2015ம் ஆண்டிலிருந்து ஆதனவரி அறவீட்டு வீதம் வருடாந்த பெறுமதியின் 15% ஆக அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2015ம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2015ம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ்வருடமொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தந்த கந்தாயத்தின் முதல்மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும். வெற்றுக்காணிகளுக்கும் முறையே 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2015ம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**6. சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980 ம் ஆண்டின் 47ம் இலக்கத் தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26ம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் எனக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.25ம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01ம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரத்தை/தொழிலை நடாத்துகின்ற உரிமையாளர்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்புகொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2015ம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்தின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய வர்த்தமான அறிவித்தல்களை சுன்னாகம்/உடுவில்/ஏழாலை உப அலுவலகங்களில் பார்வையிட முடியும்.

**7. வீதி ஒழுங்கைப் பேணுதல்**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் நகர மையப்பகுதியில் அதிகரித்த வாகன போக்குவரத்து காரணமாக நெரிசல்கள் அதிகரித்துள்ளது. எனவே விபத்தை தவிர்ப்பதன் நோக்கமாக வீதி ஒழுங்கைப் பேணும் சைகை குறியீட்டுப் பலகைகள் முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவற்றை அனுசரித்து நடக்கும்படி பொதுமக்கள் தயவுடன் வேண்டப்படுகின்றனர். மீறுவோர் மீது பொலிசாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**8. விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல்**

இப்பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும்/காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2015ம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/நிறுவனங்கள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள் போன்றோரது சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.02.2015ம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**9. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருட்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச்சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**நன்றி**

தி.பிரகாஷ்
தவிசாளர்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சுவாமியே சரணம் ஐயப்பா

# ஈழத்து சபரிமலை அகில இலங்கை
# யாழ். கோண்டாவில்
# சபரீச ஐயப்ப தேவஸ்தானம்
# மகரஜோதி மண்டல பூர்த்தி பெருவிழா-2014

காலம்:- இன்று (2014.12.27) சனிக்கிழமை காலை 8.00 மணி

இடம்:- நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபம்

தலைவர்:- சிவஸ்ரீ கி.ஹரிஹரசுத சிவாச்சாரியார்

(தர்மகர்த்தா, அகில இலங்கை - இந்தியா சபரிமலை யாத்திரைக் குருசாமி)

## மகரஜோதி மண்டல விரத மகர மஹோற்சவ குருமணி

அகோரசிவம் 18 ஆம் மலை குருஸ்வாமி அருள் ஜோதி

Dr. ஸ்கந்த சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சாரியார் J.P

## மகரஜோதி பெருவிழா வர்ணனை நெறியாள்கை

வர்ணனைக் கலாநிதி மதுரகவி. காரை. எம்.பி.அருளானந்தன். J.P

(வானொலி, தொலைக்காட்சி, நேர்முக வர்ணனையாளரும் தெய்வீக சொற்பொழிவாளரும், பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம், சைவசமயத் துறைத்தலைவர், உலக சைவத் திருச்சபை, யாழ். மாவட்டம்.)





## ஐயப்பன் யானை மேல் பவனிவரும் வீதிகள்

பருத்தித்துறை வீதி → ஸ்ரான்லி வீதி → கே.கே.எஸ். வீதி → ஆஸ்பத்திரி வீதி

மின்சார நிலைய வீதி → கஸ்தூரியார் வீதி → நாவலர் வீதி → பலாலி வீதி

**ஐயப்ப சுவாமி திருவருளைப்பெற அனைவரையும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்**

(சி-9610)

இந்திய கேரள சிங்காரி மேளம் முழங்க தென்னிலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்ட யானை மேல் ஐயப்பனின் திருப்பவனி நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்திலிருந்து ஆரம்பமாகி யாழ். நகர திருவீதிகள் தோறும் பாதயாத்திரைப் பவனியாக சாமிமார்கள் இருமுடியுடன் அடியார்கள் புடைசூழ நடைபெறும். சுவாமி தேவஸ்தானத்தை வந்தடைந்ததும் 18 ஆம் படி ஏறி சாமிமார்கள் படி பூஜையை நிறைவேற்றுவார்கள்.

மகரஜோதி பெருவிழா சிறக்க வாழ்த்துவோர்:-

ஓம் சாமியோ சரணம் ஐயப்பா
சிறிநதியா நகை மாளிகை
இல. 01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நடராசா -பரமேஸ்வரி மணிமண்டபம்
இல. 56, நல்லூர்.
சிறி நதியா கலர்லாப்
108A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

ஓம் சாமியோ சரணம் ஐயப்பா
சாரங்கா நகைமாடம்
இல. 157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(வெளிநாட்டு நாணயமாற்று சேவை முகவர்கள்)
இல. 151/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 6972,
Fax:- 021 222 8869

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ
சுவிஸ்ஸோ நகைத்தொழிலகம்
Swisso Jewellery
MANUFACTURERS OF 22CT. GOLD JEWELS
Proprietor J. Krishnamurthy
No. 44/1, Yarl Road, Sirambiadi, Jaffna.
E-mail:swisso@sltnet.lk
Web:- www.swisso.weebly.com
T.P:021 222 8525, 077 791 7579
44/1, யாழ். வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணம்.

ஓம் சாமியோ சரணம் ஐயப்பா
M.K.T.TRADERS
அபிஷேகப் பொருட்கள், தர்ப்பை தொடர்பான சகல பொருட்களும் விற்பனையாளர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
புதுவீதி ஆறுகால்மடம்
T.P.077 3357 857

ஓம் சாமியோ சரணம் ஐயப்பா
மணி ஐயப்பா நகைப்பூங்கா
கந்தசுவாமி கோவில் முன்பாக
A9 வீதி, கிளிநொச்சி.
தொ.பே.இ. 021 228 0067, 077 273 5406
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

ஓம் சாமியோ சரணம் ஐயப்பா
இராஜபுரம்
இராஜேஸ்வரி றெக்ஸ்ரைல்
RAJASWARIE TEXTILE
பட்டுச்சேலைகளின் சோலை வனம் பெண்களுக்கான சாறி, சல்வார், ஆண்களுக்கான சேட், ரீசேர்ட், றெடிமேட் மற்றும் சிறுவர்களுக்கான சகல ஆடை வகைகள்.
இல. 105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இ. 021 222 6953

ஓம் சாமியோ சரணம் ஐயப்பா
நியூ ராஜ்குமார் ரேடர்ஸ்
NEW RAJKUMAR TRADERS
சகல விதமான கட்டடப் பொருட்களும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.
இல. 45, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பே.இ. 077 308 6759, 021 221 2150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு... 11



...ரஜினியே சொல்கிறார்:

கார் சுற்றி வளைத்து, ஒரு கட்டடம் முன்னால் போய் நின்றது. அங்கே கலாகேந்திரா என்ற போர்ட் இருந்தது. இந்த பேனரை படங்களில் பார்த்திருக்கிறேன்.

உள்ளே போனேன். ஹோலில் உட்காரச் சொன்னார்கள். சோபாவில் உட்கார்ந்தேன். அங்கு ஷோகேசில், அரங்கேற்றம், அவள் ஒரு தொடர் கதை, இருகோடுகள் போன்ற படங்களின் வெற்றி விழா ஷீல்டுகள் வைக்கப்பட்டிருந்தன.

உள்ளே இருந்த ரூமிலிருந்து பாலச்சந்தர் சார் சிரிக்கிற சப்தம் பேசுகிற சப்தம் அவ்வப்போது கேட்டது. காபி வேணுமா? டீ வேண்டுமா? என்று கேட்டார்கள். சாப்பிடலாம் என்று மனசுக்குள் தோன்றினாலும் வேண்டாம் என்று சொன்னேன். ஆனால் காபி கொண்டு வந்து வைத்தார்கள்.

*குழப்பம்*

அதே சமயத்தில் டைரக்டர் என்னைக் கூப்பிட்டார். காபியை தியாகம் செய்துவிட்டு உள்ளே போனேன். பாலசந்தர் சார் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். இருகை கூப்பி வணங்கினேன். அவர் கை நீட்டி என்னுடன் கைகுலுக்கினார்.

உட்காருங்கள் என்றார். நான் உட்காரா மல் நின்றுகொண்டே இருந்தேன். வற்புறுத்தி உட்காரச் சொன்னார். நாற்காலியின் விளம்பில் உட்கார்ந்தேன். அவர் என்னைக் கூர்ந்து பார்த்தார். எனக்கு அப்போது தமிழும் சரியாகத் தெரியாது. ஆங்கிலமும் சரியாகத் தெரியாது. எந்த மொழியில் பேசுவது என்று எனக்குக் குழப்பம்.

கொஞ்ச நேரம் ஓடியது. என்ன படிச்சிருக்கீங்க! என்று பாலசந்தர் கேட்டார். எஸ்.எஸ்.எல்.சி பாஸ்! என்றேன். இதுமாதிரி வேறு சில கேள்விகள் கேட்டபின் நான் இதுவரை உங்கள் நடிப்பைப் பார்த்ததில்லை. ஏதாவது நடித்துக் காட்டுங்கள்! என்றார்.

எனக்குத் தமிழ் தெரியாதே! என்றேன். பரவாயில்லை. கன்னடத்தில் பண்ணுங்க! என்றார். கிரீஷ்கர்னாட் எழுதிய துக்ளக் நாடகத்தில் இருந்து ஒரு சீனை நடித்துக் காட்டினேன். பாலசந்தர் சாருக்கு மிகுந்த சந்தோஷம். ரொம்ப நல்லா இருக்கு என்று பாராட்டினார்.

### எங்கேயோ கொண்டு போவேன்!

பிறகு பாலசந்தர் சார் சொன்னார்: இப்போது அபூர்வ ராகங்கள் என்ற படத்தை எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதில் ஒரு ரோல். இது சின்ன ரோல் என்றாலும் ரொம்ப பவர்புல் ரோல். அந்த ரோலில் உங்களை அறிமுகம் செய்யப்போகிறேன்.

அடுத்து அவள் ஒரு தொடர்கதை படத்தை தெலுங்கில் எடுத்துக்கொண்டிருக்கிறேன். தமிழில் ஜெய்கணேஷ் நடித்த ரோல் உங்களுக்கு! இவ்வாறு கூறிய பாலசந்தர், உங்களுக்கு தெலுங்கு தெரியுமா என்று கேட்டார். எனக்கு அப்போது தெலுங்கில் சில வார்த்தைகள்தான் தெரியும். என்றாலும் துணிந்து தெரியும்! என்றேன்.

பாலசந்தர் தொடர்ந்து மூன்றாவது ஒரு கதை இருக்கு. (மூன்று முடிச்சு) அதில் ஆன்டி ஹீரோ ரோலை உங்களுக்குக்கொடுக்கலாம் என்று இருக்கிறேன் என்று கூறிவிட்டு நீங்கள் மட்டும் தமிழை நன்றாகக் கற்றுக்கொண்டால் உங்களை எங்கேயோ கொண்டு போய் விட்டு விடுவேன் என்று அழுத்தம் திருத்தமாய் சொன்னார்.

## மூன்று படங்களுக்கு ஒப்பந்தம் செய்தார், பாலச்சந்தர்



வெற்றி மீது வெற்றி வந்து என்னை சேரும்

அதைக்கேட்டு மெய் சிலிர்த்துப் போனேன். ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர்ச்சி. சரி. நீங்கள் போகலாம். விலாசம், போன் நெம்பர் எல்லாம் கொடுத்து விட்டுப் போங்கள். படப்பிடிப்பின் போது உங்களுக்கு சொல்லி அனுப்புகிறேன் என்றார் பாலசந்தர்.

ரஜினிகாந்த நடித்த முதல் படமான அபூர்வ ராகங்கள் படப்பிடிப்பு, அவருடைய அதிர்ஷ்ட நாளான வியாழக்கிழமை அன்று நடந்தது.

3 படங்களில் நடிக்க வைக்கப் போவதாக டைரக்டர் கே. பாலச்சந்தர் கூறியதால் மகிழ்ச்சியின் உச்சிக்குச் சென்ற ரஜினிகாந்த், நேராக டிரைவ்-இன்.உட்லண்ட்ஸ் ஓட்டலுக்குச் சென்றார். அவரிடம் 20 ரூபாய் இருந்தது.

ஓட்டலில் இருந்த நண்பர் களிடம் விடயத்தைச் சொன்னார். அவர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள். எல்லோருக்கும் சுவீட், மசாலா தோசை,காபி வாங்கிக் கொடுத்தார். (தொடரும்)

# அதிசய உலகம்

**விண்ணைத் தொடும் உயரத்தில் கண்ணாடி மீது திரில் நடைபயணம்....**

சுமார் 6,233 அடிகள் உயரமான செங்குத்தான் மலையில் அமைந்துள்ள விகாரையினை தரிசிக்க கண்ணாடியினால் ஆன பாதையின் மீது சுற்றுலாப்



பயணிகள் பயணம் செய்கின்றனர். இம்மலையானது சீனாவின் Hebei மாகாணத்தில் அமைந்துள்ளது.

# சமைப்போம் சுவைப்போம்

## தேங்காய்ப்பால் முறுக்கு



**தேவையான பொருட்கள்**

பச்சை அரிசி- 4 கப்
பாசிப்பருப்பு - 1 கப்
திக்கான தேங்காய்ப்பால்- 1 கப்
சர்க்கரை- 1/2டீஸ்பூன்
எள் - 1 டீஸ்பூன்
வெண்ணெய்- 1 டீஸ்பூன்
பெருங்காயத்தூள்- 1/4 டீஸ்பூன்
உப்பு- தேவையான அளவு
எண்ணெய்- பொரிப்பதற்கு

**செய்முறை**

பச்சை அரிசியைக் கழுவி உலர்த்தவும். பிறகு, அரிசியையும், பாசிப் பருப்பையும் வாசனை வரும் வரை வறுக்கவும். இதை மாவாக அரைக்கவும். தேங்காய்ப்பாலில் சர்க்கரை சேர்த்துக் கலந்து வைத்துக் கொள்ளவும். மாவில் பெருங்காயத்தூள், உப்பு, எள், வெண்ணெய் சேர்த்து நன்றாகக் கலந்து, அதில் தேங்காய்ப்பாலை விட்டு முறுக்கு மாவு பதத்தில் நன்றாகப் பிசைந்து கொள்ளவும். தாச்சியில் எண்ணெய் ஊற்றி, முள் முறுக்கு அச்சில் மாவை நிரப்பி, முறுக்குகளாகப் பிழிந்து சுட்டெடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

சூரியோதய சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவும் கட்டட திறப்பு விழா, கலை நிகழ்வுகள் மற்றும் கௌரவிப்பு நிகழ்வுகள் என்பன இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சனசமூகநிலைய தலைவர் நா. பாஸ்கரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், வடமாகாண சபை உறுப்பினர் த. சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

# மீண்டும் சுனாமி வந்தால் உயிர்ச்சேதம் ஏற்படாதாம்

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கூறுகிறார்

மீண்டும் ஒரு ஆழிப்பேரலை ஏற்பட்டால், எந்த ஒரு உயிரிழப்புக்களும் ஏற்படாத வகையில் அதனை எதிர்கொள்ளும் வல்லமை அரசாங்கத்திடம் இருப்பதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று 10 வருடங்கள் நிறைவடைகின்றன. அனர்த்தத்தின் பாதிப்புகளை நினைவுகூரும் வகையில் நேற்று அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தவிர, ஆழிப்பேரலையில் உயிர் நீத்தவர்களுக்கு நேற்று முற்பகல் 9.25 முதல் 9.27 வரையான இரண்டு நிமிட காலப்பகுதியில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இதனை நினைவுகூரும் முகமாக நேற்றுஅங்கு பாரிய அளவில் பிரார்த்தனை நிகழ்வுகள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் தலைமையில் ஏற்பாடு செய்யப்படடிருந்தன. (இ)

## கவிதைப்போட்டி முடிபுகள்

புதுகவி இணையத்தின் ஆதரவுடன் கவிஞர் முருகு இரத்தினத்தின் நினைவாக இளைஞர் இலக்கிய மன்றம் நடத்திய பாடசாலைகளுக்கு இடையிலான கவிதைப்போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

முதலாம் இடம் செல்வி வானதி செங்கதிர்செல்வன். யாழ் இந்து மகளிர் கல்லூரி.

இரண்டாம் இடம்- கயாலினி விஜயகுமார். யாழ் மெதடிஸ்ட் பெண்கள் உயர்தரப் பாடசாலை.

மூன்றாம் இடம்- விதுஷா வாசுதேவன். யாழ் மகாஜனாக் கல்லூரி.

ஆறுதல் பரிசுகள் அ. நளினாஷினி, ர.ஷமிலா அபிராமி சற்குணரத்தினம.

இவர்களுக்கான பரிசில்கள் கவி நயம் 2015 நிகழ்வில் வழங்கப்படவுள்ளது. (இ-23)

# மின்கம்பங்களில் கூட மகிந்த தொங்குகிறார்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கட்டவுட்டுக்கள், பதாகைகள் மின் கம்பங்களில் தொங்குவதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தால் தம்மை மின்சார நாற்காலியில் அமர்த்தி தண்டிப் பார்கள் என ஜனாதிபதி பிரசாரம் செய்து வருகின்றார்.

எனினும், ஜனாதிபதி சகல மின்கம்பங்களிலுமே தொங்குகின்றார்.

இன்று அமைச்சுக்கள் ஜனாதிபதியின் கட்அவுட்களை மின் கம்பங்களில் எவ்வாறு தொங்கவிடுவது என்பது பற்றியே கணக்குப் பார்த்து வருகின்றன. ராஜபக்ஷ குடும்பத்திற்கு இந்த ஜனாதிபதி தேர்தல் மிகவும் முக்கியமானது.

தமது குடும்பத்தையும் சகாக்களையும் பாதுகாத்துக்கொள்ள அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

அனைத்து இன மக்களுக்கு இடையிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். ஊழல் மோசடிகளை இல்லாதொழித்து நாட்டில் நல்லாட்சியை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து ஜனாதிபதி தொடர்ந்தும் பதவியில் நீடிக்க முயற்சித்தால் 24 மணித்தியாலயத்தில் ஜே.வி.பி கட்சி ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பி வைக்கும் என அனுரகுமார திஸாநாயக்க அண்மையில் மாத்தளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். (இ-5)

## உயர் தொழில் நுட்ப நிறுவன பரீட்சை திகதி மாற்றம்

யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான 2 ஆம் பருவகால பரீட்சை நடவடிக்கைகள் பிற்போடப்பட்டுள்ளன. நாளை மறுதினம் 29 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாக இருந்த 2 ஆம் பருவகால இறுதிப் பரீட்சை நடவடிக்கைகள் அனைத்தும் நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலையினால் பிற்போடப்பட்டுள்ளன.

இப் பரீட்சைகள் அனைத்தும் எதிர்வரும் 12.01.2015 இல் இருந்து நடைபெறும். அதேவேளை மேலும் மாற்றம் செய்யப்பட்ட நேர சூசியினை 30.12.2014 தொடக்கம் நிறுவனத்தில் பார்வையிட முடியும் என நிறுவன உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

# அனர்த்தத்தில் உயிர் நீத்தவர்களுக்கு ஜனாதிபதி மகிந்த சுடரேற்றி அஞ்சலி!



(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தில் உயிர் நீத்தவர்களின் 10 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை நாடு முழுவதிலும் இடம்பெற்றன.

முற்பகல் 9.25 மணி முதல் 9.27 மணி வரை இரண்டு நிமிடம் சுனாமி அனர்த்தத்தில் உயிர் நீத்தவர்களுக்காக மௌன அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி செயலகத்திலும் இடம்பெற்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி செயலகத்தில் சுனாமி அனர்த்தத்தில் உயிர் நீத்தவர்களுக்காக மௌன அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் விமல் வீரவன்ஷ ஜனாதிபதியின் செயலக பிரதானி காமினி செனரத் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷஉட்படபாதுகாப்பு அதிகாரிகள்எனப் பலர் கலந்து கொண்டனர். (இ

# குழுக்களுக்கிடையே கைகலப்பு வல்வெட்டித்துறையில் சம்பவம்

(கரணவாய்)

இரு குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற கைகலப்பில் ஒருவர் காயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் வல் வெட்டித்துறை நவிண்டில் பகுதியில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்த தங்கராசா தயாபரன் (வயது 34) மருத்துவ சிகிச்சைக்காக ஊரணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சென்ற வருடம் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டி ஒன்றில் ஏற்பட்ட பகை காரணமாகவே இத் தாக்குதல் இடம்பெற்றதாக தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பாக இருதரப்பும் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறையிட்டதை அடுத்து மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-60)

## இராசி பலன்

27.12.2014
(மார்கழி 12, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 7.37 மணிவரை
சதயம் பிற்பகல் 1.43 மணிவரை
இராகுகாலம் 9.27-10.57 மணிவரை
சுபநேரம் 3.27-4.57 மணிவரை
திருவெம்பாவை பூசை ஆரம்பம்

வளவன்

**மேடம்:** ஆனந்தமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், குடும்பத்தில் குதுாகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், வளர்ச்சிப் பாதைக்கு உதவியவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியம் சீராகி உற்சாகப்படுவீர்கள், பகை விலகி பாசம் கூடும், தொழிலில் புதிய திட்டங்களை வகுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் கூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பயணங்களால் அனுகூலமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும் விதத்தில் அமையும்.

**கன்னி:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், உற்சாகமான நாள்.

**துலாம்:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**தனுசு:** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் பெறுவீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் முன்னேற்றம் ஏற்படலாம், காரிய அனுகூலமுண்டு, விருப்பங்கள் நிறைவேற விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும், வார்த்தைகளால் மற்றவர்களைக் கவர்வீர்கள், பணப்புழக்கம் கூடும்.

**கும்பம்:** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், வருமானங்கள் கூடும், தொழில் நலன் கருதி புதிய நபர்களை சந்திப்பீர்கள், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், போசன சுகமுண்டு.

**மீனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுவெட்டு அறிமுகவிழாவும் இசை நிகழ்வும் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

ஞானரத்தின விரதமஞ்சரி காணொளி, வைரவ கீதங்கள் இறுவெட்டு அறிமுக விழாவும் இசை நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை யாழ்.பூநாரி மரத்தடி செல்வமஹால் மண்டபத்தில் வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வணக்கத்திற்குரிய ஸ்ரீ.ஸ்ரீமதி தாணு மகாதேவக்குருக்கள் தம்பதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சிரேஷ்ட பேராசிரியருமான என்.சண்முகலிங்கன், கௌரவ விருந்தினர்களாக வயலின் வித்துவான் கலாபூஷணம் எஸ். ராதாகிருஷ்ணன், கிளிநொச்சி பூநகரி மத்திய கல்லூரி ஆசிரியர் க.கைலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் சிவஸ்ரீ சோம உமாரமணக் குருக்கள் நல்லாசிகளுடன் கலாவித்தகர் ந.செல்வச்சுந்திரனின் பின்னணி இசையில் சப்தமி ஒலியமைப்பில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திருமதி எஸ்.டிலானியின் மாணவன் ச.ஷைலேந்திரசர்மா வழங்கவுள்ள இசையமுதம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)




# தோல்வியைக்கண்டு துவண்டுவிடாது வாழ்பவர்கள்தான் ஈழத்தமிழர்கள்

## மக்கள் சந்திப்பில் சிறிதரன் எம்.பி.

(மானிப்பாய்)

தோல்வியைக்கண்டு சோர்ந்து போகாமல் தம் வாழ்வியலைக் கண்டு சோகம் கொள்ளாமல் தம்மினம் சார்ந்த சிந்தனைகளை மட்டுமே மனதளவில் தழுவிக் கொண்டு வாழகின்ற மக்கள்என்றுமே தம்இனம சார்ந்தே விடுதலைக்காக சிந்திப்பார் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை புளியங்கூடல் மக்களுடனான சந்திப்பு புளியங்கூடல் சனசமூக நிலையத்தலைவர் பூ.சிறீதரன் தலைமையில் இடம பெற்றது.

இதில் கலந்து கொண்ட பாராளுமனற உறுப்பினர் கிராம மக்களுக்கு பசுமைத்தேசம் திட்டத்தின் கீழ் விதை தானியங்களையும் வழங்கி வைத்ததோடு மக்களின் வாழ்வியல் தொடர்பான பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

போரின் வடுக்கள் மாறாத தோற்றத்தை தாங்கி நிற்கும் தீவக மண்ணின் நிலைமைகளைப்பார்க்கும் போது மிகவும் துன்பமாக இருக்கிறது.

தீவக உறவுகள் உலகெலாம் பரவி தம் மண்சார்ந்த பெருமைகளை காத்து புகழின் எல்லையை அடைந்திருக்கிறார்கள். ஆனால் இங்குள்ள நிலைமைகள் மிகவும் துன்பத்தை தருவதாக இருக்கிறது. அடிப்படை வசதிகள் எதுவுமே அற்ற நிலையிலேயே எதனையும் சுயமாக சிந்தித்து செயலாற்ற முடியாதவர்களாக இம் மண்ணுக்குரிய சுதேசிகளான தமிழர்கள் வாழ்கிறார்கள்என அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் புளியங்கூடல் சனசமூக நிலையத்தலைவர் திருவருள் கமக்கார அமைப்பின் தலைவர் ஜெகன் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-23)

# விநாயகர் சஷ்டி உற்சவம் இன்று

இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் விநாயகர் சஷ்டி உற்சவம் இன்று மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து மூலஸ்தான பூசை, விசேட வசந்த மண்டபப்பூசை, பஞ்சமுகார்ச்சனை, திருவூஞ்சல் என்பன இடம்பெற்று பஞ்சமுக விநாயகர் திருவீதியுலா வரவிருக்கின்றார்.

விசேட நிகழ்வாக பா.சாரங்கனின் நாதஸ்வரக் கச்சேரியும் இடம் பெறும். (இ)

# ஜனாதிபதி வேட்பாளர்களின் பதாகைகளை அகற்றுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து தேர்தல் விதிமுறைகளை மீறி காட்சிப்படுத்தப்படும் பதாகைகளை உடனடியாக அகற்றுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளதாக யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சியும் மாவட்ட அரசாங்க அதிபருமான சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் விதிமுறைகளை மீறி வேலணைப் பகுதியில் பதாகைகள் வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலையடுத்து, அவற்றை அகற்றும்படி பொலிஸாருக்கு கூறியுள்ளேன். தபால் மூலமான வாக்களிப்பில் எதுவிதமான முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை.

முறைப்பாடுகள் இருந்தால் உடனடியாக யாழ். மாவட்ட செயலகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, வேலணை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் அமைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டு நிலையங்களில் தெரிவிக்க முடியும்.

தபால்மூலமான வாக்களிப்பில் பொலிஸ், நீதிமன்றம் மற்றும் மாவட்டச் செயலகத்தை சேர்ந்தவர்களுக்கான வாக்களிப்புக்கள் நேற்று மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்று வருகின்றது. 3 தினங்கள் நடைபெற்ற வாக்களிப்பில், வாக்களிக்காத தபால் மூல வாக்காளர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார். (இ-4)




# இரத்ததானம்

கோண்டாவில் ஸ்ரீஅற்புத நர்த்தன சனசமூகநிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நாளை காலை 9 மணிக்கு சனசமூக நிலையத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெறும்.

இரத்ததானம் வழங்க விரும்புபவாகள் இதில் பங்கு கொள்ளமுடியுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-23)

# விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது

வருட இறுதி வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினால் ஏற்றுக் கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்படுவதாகவும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து மீளவும் வேலைகள் வழமைபோல் நடைபெறும் எனவும் யாழ்.பிரதேச செயலாளர் திருமதி எஸ். தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (இ-5)

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஈபிஆர்எல்எப்.மைத்திரிக்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது வாக்களிக்கும் உரிமையை முழுமையாக பிரயோகிக்க வேண்டும். 1995 இல் இந்த நாட்டில் சமஷ்டி முறையிலான தீர்வைப்பற்றி சிங்கள மக்கள் மத்தியில் பேச முடிந்தது. இன்று துரதிர்ஷ்டவசமாக இனப்பிரச்சினை நாட்டின் பிரதான கட்சிகளின் நிரல்களில் இல்லாமல் போய் விட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குதல், சகல இன, மத, சமூகங்களும் சமத்துவமாக வாழ்வதற்கான ஏது நிலைகள் உருவாக்குதல்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவான மாகாண சபைகளுக்கு 13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவது முழுமைப்படுத்தலுடன் அரசியல் அமைப்பின் 18 ஆவது திருத்தம் நீக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்ட 17 ஆவது திருத்தத்தை மீளக் கொண்டுவருதல் மூலம் சுதந்திரமான பொலிஸ்சேவை, நீதிச் சேவை மற்றும் தேர்தல் ஆணைக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என நாம் உணர்கிறோம்.

ஊழலற்ற பாரபட்சமில்லாத மக்களுக்கு நெருக்கமான நிர்வாகம் நாட்டின் எல்லா மட்டங்களிலும் நிலவ நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

மேற்படி எதிர்பார்ப்புக்களுடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது அணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்கு பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது என அக்கட்சியின் பொதுச்செயலாளர் தி.ஸ்ரீதரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# எப்போது அகற்றப்படும் ஜனாதிபதியின் கட்டவுட்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உடுத்துறை சுனாமி நினைவேந்தல் இடத்திற்கு அருகாமையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதாகைகள் இன்னும் அகற்றப்படாத நிலையிலுள்ளன.

சுனாமி நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் நடைபெற்ற நிலையில் அங்கு இருக்கும் பல பதாகைகள் அகற்றப்படாமல் இன்னமும் உள்ளன.

தேர்தல் விதிமுறைகளை மீறி காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதாகைகளை அகற்றுமாறு பொலிஸாருக்கு யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அறிவுறுத்தியுள்ளபோதிலும் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, உடுப்பிட்டி, உடுத்துறை போன்ற பகுதிகளில் இவ்வாறான தேர்தல் விதிமுறைகளை மீறும் பதாகைகள் அகற்றப்படாமலேயே உள்ளன.

மேலும் சுனாமி நினைவிடத்திற்கு அருகாமையில் இப்பதாகைகள் அமைக்கப்பட்டுள்ளதனால் மக்களிடையே விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டியில் மூவருக்கு டெங்கு; விழிப்பாக இருக்குமாறு கோரிக்கை

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட இமையாணன் கிராமத்தில் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளான மூவர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து அப்பகுதியில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அழிக்கும் நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இமையாணன் கலைமைகள் சனசமூக நிலைய வீதிப் பகுதியில் மூன்றுபேர் டெங்கு நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகியிருந்தமை பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்னை அடுத்து அப்பகுதிக்கு விரைந்த கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ். சுதோகுமார் தலைமையிலான குழுவினர் டெங்கு நுளம்பு பெருவதற்குரிய சூழலை இனங்கண்டு அவற்றினை அழித்தனர்.

அப்பகுதியில் உள்ள முன்பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த சிங்கம் மாதிரிச் சிலையினுள்ளும் அதன் கீழும் தேங்கியிருந்த நீரில் பெருமளவான டெங்கு நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதாகவும் அங்கு விளையாடுவதற்குச் சென்ற இளைஞர்களே டெங்கு நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. டெங்கு நுளம்பு இனங்காணப்பட்ட பகுதி உடனடியாக பொதுச் சுகாதார அலுவலர்களின் உதவியுடன் அழிக்கப்பட்டது.

இதேவேளை இப்பகுதியில் மேலும் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் இருப்பதால் இன்று சனிக்கிழமை இமையாணன் கிராமம் முழுவதும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு புகையூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்படவுள்ளது என சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சுதோகுமார் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சூழ்நிலையில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமானால் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்று இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் சுகாதார வைத்திய அதிகாரி மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-60)

# இராணுவ முகாமுக்குள் புகுந்து தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு!

## 14 பேர் பலி

எண்ணெய் வளமிக்க கொலம்பியாவில் அல்கொய்தா அமைப்புடன் தொடர்புடைய அல் சஹாப் தீவிரவாதிகள் தொடர்ந்து நாசவேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில், சோமாலிய இராணுவத்துடன் இணைந்து, ஆபிரிக்க யூனியனைச் சேர்ந்த அமைதிப்படையும் ஈடுபட்டு உள்ளது.

இதற்காக மொகடிசு நகரில் இராணுவ முகாம் அமைந்துள்ளது. நேற்று முன்தினம் 8 தீவிரவாதிகள் துப்பாக்கியுடன் இராணுவ முகாமிற்குள் நுழைந்து அங்கு இருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டு வீழ்த்தினர்.

இந்த தாக்குதலுக்கு பொறுப்பு ஏற்று உள்ள அல் சஹாப் அமைப்பு, 14 வீரர்களை கொன்று விட்டதாக தெரிவித்துள்ளது.

ஆனால் இதனை இராணுவம் மறுத்து உள்ளது. 3 வீரர்கள் மட்டுமே கொல்லப்பட்டு உள்ளனர்.

பதில் தாக்குதல் நடத்தியதில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக கூறியுள்ளது. (இ-5)

# சாயி பாபாவின் ஒன்பது நாணயங்கள் யாழில் நாளை காட்சிக்கு வைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சீரடி சாயி பாபா லட்சுமிபாய் ஷிண்டேவுக்கு பிரசாதமாக அளித்த அதிர்ஷ்டம் அளிக்கும் 9 நாணயங்கள் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை யாழ். சீரடி ஸ்ரீ சாயி சங்கரா ஆலயத்தில் பக்தர்களுக்காக காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இந்த நாணங்கள் அரபு நாடுகள், இங்கிலாந்து, ஜேர்மனி, மலேசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

தற்போது அவை இலங்கைக்கும் எடுத்து வரப்பட்டிருக்கின்றன.

நேற்று இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட இந்நாணயங்கள் இன்று கொழும்பு முகத்துவாரத்திலும் நாளைய தினம் யாழ்ப்பாணத்திலும் திங்கட்கிழமை கொழும்பு பம்பலப்பிட்டியிலும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 077 8980 609, 077 8980 605 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

### வடமாகாண போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு

# தனியார் துறைக்கு 60 வீதம் அரச துறைக்கு 40 வீதம் மட்டுமே

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திற்கிடையேயான போக்குவரத்து சேவைகளின் போது ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்க்கும் முகமாக மாவட்ட செயலகங்களினால் வழங்கப்பட்டுள்ள போக்குவரத்துத் தொடர்பான புள்ளி விபரங்களின் அடிப்படையில் தனியார் துறைக்கு 60 வீதமும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 40 வீதமும் என்ற அடிப்படையில் நேர அட்டவணையைத் தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். தூர சேவைப் பேருந்து உரிமையாளர்களின் கம்பனி அறிவித்துள்ளது.

இந்நேர அட்டவணை தயாரிக்கும் பொறுப்பு கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம கணக்காளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக எதிர்வரும் ஜனவரி 12 ஆம் திகதி இடம்பெறவுள்ள கூட்டத்தில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் கம்பனியின் தலைவர் சி.சிவபரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த 9 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நியமிக்கப்பட்ட குழுவின் தொடர் நடவடிக்கைக்கான கூட்டம் கடந்த 22 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

இக்குழுவில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் பிரதிநிதி, ஐந்து மாவட்ட செயலக பிரதம கணக்காளர்கள், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாணத்தினைச் சேர்ந்த 7 சாலைகளின் முகாமையாளர்கள் மற்றும் வடமாகாண பேருந்து உரிமையாளர் சங்கத்தின் ஐந்து தலைவர்கள் உள்ளடங்குகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-5)

# கணனி தொழில்நுட்ப பயிற்சிநெறிகள்

யாழ்.கரவெட்டி பிரதேச செயலக விதாதாவள நிலையத்தால் எதிர்வரும் ஜனவரி மாதம் கணனி MS Office, கணனி வன்பொருள் (Computer Hardware), கணனி வலையமைப்பு தொழில்நுட்பம் (Computer Networking Technology) ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எனவே இப் பயிற்சி நெறிகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் 31/12/2014 இற்கு முன் கரவெட்டி பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென பிரதேச செயலாளர் அறியத் தந்துள்ளார்.

இப் பயிற்சி நெறிகளுக்கான பதிவுகளை 021 226 4958 என்ற தொலை பேசி இலக்கத்தினூடாகவும் மேற்கொள்ள முடியும்.

இப்பயிற்சி நெறிகளுள் MS Office பயிற்சிநெறி கரவெட்டி பிரதேச செயலக விதாதாவள நிலைய கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 02/01/2015 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(C-9351)

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776


## ஈழத்து சிதம்பர தரிசனம்

**தில்லைக் கூத்தனின் திருநடனம் காண வாரீர்**

காரூரும் சோலைகளும் கவினூறும் காட்சிகளும்
நீரூறும் குளமும் நிதமுயரும் புதுவாழ்வும்
ஆறூரும் பேரழகும் அகங் கவர மிக்குயர்ந்த
தேரூரும் அகலத் தெருக்கள் நிறைந்திருக்கும்
பேரூரின் சிதம்பரப் பெருமைகளை ஆரறியார்
பிறந்து வளர்ந்தோர் மகத்துவம் சேர்க்கும் காரையூர்
பாரூர்ந்து பணியும் திருவாதிரைப் பெருவிழா காண
வாரீர் வந்து பாரீர் தில்லைக் கூத்தனின் திருக்கூத்தை.

-மதுரகவி. காரை. எம்.பி.அருளானந்தன்-

இன்று (2014.12.27) ஈழத்து சிதம்பரத்தின் (காரைநகர் சிவன்கோயில்) திருவெம்பாவை ஆரம்பம்


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 15 சூரிசெவ்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L , QS (ஓமான்)<br>தொ.இ: B/3918 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 17 1/4 சூரிசெவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: IT/ உதவிகணக்காளர்<br>தொ.இ: G/3924 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 40<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L/ உதவி முகாமையாளர் (கனடா PR)<br>தொ.இ: B/3920 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 33 செவ் 2 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3927 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 22 3/4 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ (ஜேர்மனி NOT PR)<br>தொ.இ: B/3921 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 32 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3930 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 35 1/4 செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L அரச தொழில்<br>தொ.இ: B/3922 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 28 3/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA/ அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/3935 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திஸ்ஸவிடம் 2500 மில். நட்டஈடு கோரி மைத்திரி சட்டத்தரணி மூலம் கடிதம்

(கொழும்பு)

**தனது கையொப்பத்தினை தவறாக பயன்படுத்திய குற்றத்திற்காக பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் ரூபாய் 2 ஆயிரத்து 500 மில்லியன் நட்டஈடு கோரியுள்ளார். மேலும் திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு அமைச்சுப் பதவி வழங்கியமை தேர்தல் சட்டத்தினை மீறும் செயல் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

தமது தரப்பு சட்டத்தரணிகளின் மூலம் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு அனுப்பி வைத்துள்ள நட்டஈடுகோரிய கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் இரகசிய உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதாக தெரிவித்து சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க ஆவணமொன்றினை வெளியிட்டிருப்பது எமது வெளிப்படையான உடன்படிக்கையினை அவமதிக்கும் செயற்பாடாகும். அதேபோல் பொய்யான ஆவணமொன்றினை தயாரித்து அதில் எமது கையொப்பம் என தவறான இரு கையொப்பங்களை இட்டு ஊடகங்களிடம் வெளிப்படுத்தியிருப்பது சட்ட முறைப்படி குற்றமாகும். ஊடகங்களை பயன்படுத்தி நானும் பொது எதிரணியும் சட்டவிரோத பிரசாரத்தினையும் தேசத்துரோக செயலையும் செய்வதாக குறிப்பிட்டு ஊடகங்களின் மூலம் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நான் 1989 ஆம் ஆண்டில் இருந்து பாராளுமன்றத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். இதன் போது பல முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்து நாட்டிற்கு சேவை செய்துள்ளதுடன் எனது கையொப்பத்தினை பயன்படுத்தி பல நல்ல உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளேன்.

இதுவரை காலமும் எனது கையொப்பத்துடன் எவ்வித சட்டவிரோத ஆவணங்களும் தயாரிக்கப்படவில்லை. எனவே இவ்வாறான நிலையில் நவம்பர் மாதம் முதலாம் திகதி நானும் ரணில் விக்ரமசிங்கவும் இரகசிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதாக போலியான ஆவணமொன்றினை தயாரித்து எங்களை அவமதித்துள்ளனர்.

எனவே இதற்கு எதிராகவும் திஸ்ஸ அத்தநாயகவிற்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதுடன் 2500 மில்லியன் ரூபா நட்டஈடு கோரப்பட்டுள்ளது.

மேலும் திஸ்ஸ அத்தநாயக்க தற்போது ஏற்றுள்ள புதிய அமைச்சுப் பதவி தேர்தல் சட்டத்தினை மீறும் செயற்பாடாகும்.

அதாவது தேர்தல் காலத்தில் ஒருவருக்கு அமைச்சுப் பதவி வழங்குவது தேர்தல் சட்டத்தினை மீறும் செயற்பாடாகும். எனவே இது தொடர்பிலும் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிட்டிருப்பதாகவும் அவரின் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.(இ-5)

## பதுளையில் மீண்டும் மண்சரிவு மூவர் மண்ணுக்குள் சிக்கி பலி!

பதுளை - கல்கந்த பிரதேசத்தில் வீடு ஒன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் வீட்டில் இருந்த தாய் மற்றும் மகன் ஆகியோர் மண்ணுக்குள புதைந்து உயிரிழந்துள் ளனர்.

54 வயது தாயும் 24 வயது மகனுமே இவ்வாறு நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, பதுளை - ஹேகொட பகுதியில் வீடு ஒன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் குறித்த தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை. (இ-5)

## தேர்தல் திணைக்கள அறிவித்தல் கிடைத்தபின் பிரதேசசபை உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர்

யாழ்.வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையில் நிலவும் இரண்டு உறுப்பினர்களுக்கான வெற்றிடங்களுக்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் தேர்தல் ஆணையாளரிடமிருந்து அறிவித்தல் வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், 16 உறுப்பினர்களை கொண்ட வலிகாமம் தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையில் 12 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் 4 ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களும் தெரிவாகினர். த.தே. கூட்டமைப்பை சேர்ந்த உறுப்பினர் கே.கௌரிகாந்தன் என்பவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிவுறுத்தலுக்கமைய யாழ். மாவட்ட தேர்தல் திணைக் கள அதிகாரியினால்இந்த வரு டத்தின் நடுப பகுதியில் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

அத்துடன் தவிசாளராக கடமையாற்றிய அஜேபநேசன் தனது பதவியை இராஜினாமா செய்ய, புதிய தவிசாளராக நியமிக்கப்பட்ட எஸ்.சிவகுமார் சுகயீனம் காரணமாக கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி உயிரிழந்தார். தற்போது, பிரதேச சபையின் இரண்டு உறுப்பினர்களுக்கான வெற்றிடங்கள் இருக்கின்றமையால், இந்த வெற்றிடங்களுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்களா என கேட்டபொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச சபையின் ஆட்சிக் காலம் முடிவதற்கு இன்னும் சில மாதங்களே இருக்கின்றன. இருந்தும் புதிய உறுப்பினர்களை நியமிப்பதில் நாங்கள் பின்நிற்கவில்லை. தேர்தல் ஆணையாளர் இது தொடர்பில் எங்களுக்கு அறிவித்தல் விடுத்தவுடன் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள. தற்போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பான விடயங்களை அவர் கவனித்துக்கொண்டு இருப்பதால், அது முடிந்த பின்னரே இதுபற்றி நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-4)

# நாம் இயேசுவின் விண்மீன்களாக மாறுவோம்



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

காலம் பூமியின் கரைகளில் பூக்கோலம் போட்டுக் கொண்டிருந்தது. நிலவைப் போல் நாமும் நடந்தால் ஒருவரையொருவர் இடறிக்கொள்வோமென்று நட்சத்திர நங்கைகள் நின்ற இடத்திலேயே நிதானமாகக் கணசிமிட்டிக் கொண்டிருந்த பின்னிரவுப் பொழுது அது. பூமி கடுங்குளிரில் கறுப்புக் கம்பளத்தைப் போர்த்தியபடி புரண்டு கொண்டிருந்தது. பனி மூட்டம் இரவை நனைத்து இறுக்கிக் கொண்டிருக்க, பகலெல்லாம் அசை போட்டுக் கொண்டிருந்த ஆடுகள், இரவெல்லாம்இருட்டின் அமைதியில் அடங்கிக் கிடந்தன. கிடைகளுக்கிடையே இடையர்களும் முடங்கிக் கிடந்தனர்.

பெத்லகேம் ஊருக்கப்பால் கவிந்த இருட்டும், கனத்த காற்றும் பனியில் நனைந்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தன. பேறு காலமாய் நின்று பேதலித்த மரியாவும், அவர் தம் அன்புத் துணைவர் யோசேப்பும் தங்க இடமின்றி தவித்து ஊருக்கு அப்பால் ஒதுங்கிக் கிடந்த மாட்டுக் குடிலில் மையமாகினர். பூமி ஒரு புனிதமான பிறப்பின் பரபரப்பை உணர்ந்தது. ஆநிரைத் தொழுவில் விதை ஒன்று பூக்கப் போவது சூசகமாகத் தெரிந்தது. வானவர் தோன்றி வாழ்த்து மழை தூவ, உன்னத கீதமாய் உறைந்த பனி உருக, மரியின் மணி வயிற்றுச் சீதனம், புனித மிக்க மனிதமாய் பூமிக்கு வந்தது.

கிறிஸ்துபிறப்பு விழா மனுக் குலத்தின் மகிழ்ச்சியின் பெரு விழா! சமாதானத்தின் நிறைவு விழா! மனிதனாகப் பிறந்த கடவுளின் சமாதானமும்,



அவர் தரும் மீட்பின் விழாவுமாக அமைந்துள்ளது. மனிதர்களைப் பாவ நிலையிலிருந்து விடுவித்துக் கடவுளின் உன்னத மகிமையில் கொண்டு சேர்க்க கடவுளே இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்தார். அவரை நம்பி அவரை ஏற்றுக்கொள்ளும் பொழுது மனிதர்களுக்கு நிறைவான சமாதானமும் நிரந்தர பேரின்பமும் கிடைக்கிறது. இவை மனிதர் அனைவரின் உள்ளத்திலும் மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் உருவாக்க இறைவன் ஏற்படுத்திக் கொடுத்த அற்புத நிகழ்வுகளாகும்.

ஆனால், கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டம் வெளிப்புறமாக நின்று விடாது, நமது அக வாழ்வில் மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தும்போதுதான் உண்மையாகவே இவ்விழா, நாம் கொண்டாடுவதில் அர்த்தம் பெறுகின்றது. வார்த்தையாகிய கடவுள் மனித உருவம் எடுத்து நம்மிடையே குடிகொண்டார் என்ற மாபெரும் மறை உண்மையை உலகில்உள்ள மனிதர் அனைவரும் அறிந்து கொள்வர். இயேசு நம் உள்ளக் குடிலில் பிறக்க வேண்டுமானால் அன்பு, சமாதானம், மகிழ்ச்சி, நீதி, மன்னிப்பு போன்ற நற்பண்புகளால் நம்மை நாம் அலங்கரித்துக் கொண்டால் இதுவே உண்மையான கிறிஸ்து பிறப்பு விழாவாகும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பே அதிசயமானது, அற்புதமானது. அவர் எப்படி பிறப்பார்? எங்கே பிறப்பார்? எதற்காக இவ்வுலகில் பிறக்கப் போகிறார் என்று அவர் பிறப்பதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே தீர்க்கதரிசிகளால் பைபிளில் எழுதப்பட்டிருப்பது அதிசயமாகும். ஏசாயா என்ற தீர்க்கதரசி ஏசாயா புத்தகம் 7: 14இல் 'இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார்." என தனது புத்தகத்தில் எழுதினார். அதன்படியே இந்தப் புத்தகம் எழுதப்பட்டு சில நூறு ஆண்டுகளுக்கு பின், இயேசு கிறிஸ்து கணவனை அறியாத கன்னி பெண்ணாகிய மரியாளின் வயிற்றில் பிறந்தார். அவர் எங்கே பிறக்கப் போகிறார் இந்த உலகத்தில் என்று ஆவலுடன் காத்திருந்த மக்களுக்கு மீகா என்ற தீர்க்கதரிசி தன் புத்தகத்தில் மீகா 5:2இல் 'எப்பிராத்தா எனப்பட்ட பெத்தலகேமே நீ யூதாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தாலும் இவ்வுலகை ஆளப்போகிறவர் உன்னிடத்தில் இருந்து புறப்பட்டு வருவார்." என்று எழுதப்பட்டதன்படி சில நூறு ஆண்டுகளுக்கு பின்பு பெத்லகேம் என்னும் ஊரிலே இயேசு பிறந்தார். அவர் கழுதை குட்டியின் மேல் ஏறி வருவார் என்றும், அவர் ஜாதிகளுக்கு சமாதானத்தைக் கூறுவார் என்றும் சகரியா தீர்க்கதரிசி புத்தகம் 9:9-10இல் கூறப்பட்டது போல, அவர் சமாதானத்தின் கர்த்தராய் இப்பூமியில் பிறந்தார்.

உலகில் அனைவரும் மீட்புப் பெறவேண்டும் என்பதறகாக உலகில் பிறந்த இறைவனின் மீட்பை உலகிற்குகு அறிவிக்கவேண்டியவர்கள் தாம் நாம் அனைவரும். அதற்காக விண்மீனாக மாற வேண்டியவர்கள்தாம் நாம் அனைவரும்.

பெத்லகேமில் பனிவிழும் இரவில் யூதரகளின் அரசராகப் பிறந்தவரைத் தேடி வந்த கீழைநாட்டைச் சார்ந்த ஞானிகள், தாங்கள் தேடி வந்த குழந்தையைக் காண அவர்களுக்கு உறுதுணையாக இருந்ததும், அவர்களுக்கு வழிகாட்டியதும் அந்த விண்மீன்தான். மாடடுத் தொழுவத்தில் மீட்பர் பிறந்துள்ளார் என்பதை வான தூதர்கள் அறிவித்த போது, தாங்கள் அறிந்ததைப் பிறரு க்கு அறிவித்தார்கள் அன்று அந்த இடையர்கள். அவ்வாறு அன்று அவர்கள் விண்மீனாக மாறினார்கள்.

'உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறை சாற்றுங்கள் என்று ஆண்டவர் தம் சீடர்களுக்குக் கட்டளையிட்டது அவர்கள் படைப்புகள் அனைத்தையும் கிறிஸ்துவிடம் அழைத்து வரும் விண்மீன்களாக்க வேண்டும் என்ற எண்ணதோடு தான். இயேசுவின் விண்மீன்கள் நமக்குத் தரும் செய்தி என்னவென்றால் நாம் ஒவ்வொருவரும் நாம் இருக்கும் நிலையில் இயேசுவின் விண்மீனாக மாற வேண்டும் என்பது தான். இயேசுவின் விண்மீனாக மாறுவோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைப்பதற்கு 21 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன

## வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

**வவுனியாவில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களைத் தங்கவைப்பதற்காக 21 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள என்று வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.**



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில நாட்களாக வவுனியாவில் பெய்து வரும் கன மழை காரணமாக மூவாயிரத்து 74 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 243 பேர் பாதிப்படைந்துள்ளனர். இவர்களில் 763 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 892 பேர் 21 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

செட்டிகுளம் பகுதியில் 14 நலன்புரி நிலையங்களும் வவுனியா பிரதேச செயலக பிரிவில் 6 நலன்புரி நிலையங்களும் வவுனியா வட க்கில் ஒரு நலன்புரி நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர இதுவரை 20 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

அவற்றில் ஓமந்தை, நறுவெளிக்குளம், செட்டிகுளம், கந்தக்குளம் என்பன நேற்று முன்தினம் உடைப்பெடுத்துள்ளதனால் விவசாய நிலங்கள் பாதிப்படைந்துள்ளன. இந்த அனர்த்தங்கள் காரணமாக 21 வீடுகள் முழுமையாகவும் 207 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மல்வத்து ஓயா நீர் பெருக்கெடுத்தமையால் மீடியாபாம் கிராமம் நீரில் மூழ்கியுள்ளது. இங்கு வசித்து வந்த மக்களின் வீடுகள் முழுமையாக நீரில் அகப்பட்டுக் கொண்டமையால் கொட்டும் மழைக்கு மத்தியில் காட்டுப் பகுதி யில் தறப்பால் கொட்டகைக்குள் இவர்கள் அவலநிலையில் வசித்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (2-250)

## இதுவரை உள்ளக வீதிகள் புனரமைக்கப்படவில்லை

திருவையாறு பிரதேசத்தில் உள்ள உள்ளக வீதி எவையும் இதுவரை புனரமைக்கப்படவில்லை என அப்பகுதி பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

திருவையாறு மூன்று பகுதிகளை உள்ளடக்கிய கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசமாகும். திருவையாறு சாந்தபுரம் படித்த மகளிர் திட்டம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 480 கிலோ மீற்றர் நீளமான உள்ளக வீதிகளே இதுவரை புனரமைக்கப்படாது காணப்படுகின்றது.

மக்கள் மீள்குடியேற்றப்பட்டதன் பின்னர் குறித்த வீதிகளினூடாக கனரக வாகனங்கள், விவசாயிகள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பல் வேறுபட்ட தரப்பினர் பயணித்து வருகின்றனர்.

எனவே காலம் தாழ்த்தாது உரியவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள முன்வர வேண்டுமென அப்பகுதி மக்களால் கோரிக்கை விடப்படுகின்றது. (2)




## பத்துரூபா நோட்டுக்கள், குற்றிகளுக்கு வியாபார நிலையங்களில் தட்டுப்பாடு




(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைக் காலமாக பத்து ரூபா பணத்திற்கு கடைகளில் தட்டுப்பாடு நிலவி வருவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பத்து ரூபா நோட்டுக்குப் பதிலாக வங்கிகளில் பத்து ரூபா நாணயக் குற்றிகள் இருக்கின்ற போதிலும் வாணிப நிலையங்களில் பொருட்களைக் கொள்வனவு செய்த பின்னர் பத்து ரூபா மீதிக்குப் பதிலாக இனிப்பு வகைகளும் மரக்கறி கடைகளில் தேசிக்காயும், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு தரிப்பிடங்களில் பத்து ரூபாய் பற்றுச்சீட்டிற்கு இருபது ரூபாய் கொடுத்தால் மீதியாக பத்து ரூபா வழங்குவதற்கு தம்மிடம் பணம் இல்லை என கைவிரிப்பதாகவும் பொதுமக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு மக்களின் விருப்பங்களுக்கு மாறாக பொருட்களை மிகுதி பணத்திற்கு திணிப்பதால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்திப்பதாக குற்றம் சாட்டுகின்றனர்.

ஆதலால் வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் வாடிக்கையாளர்களின் நலன் கருதி தமக்குத் தேவையான பத்து ரூபா நாணயக்குற்றிகளை வாங்கிகளில் சென்று பெற்று மிகுதி பத்து ரூபா பணத்தினை மக்களுக்கு பண மாக வழங்க வேண்டுமென பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (2-271)

## தமிழர்களின் அடையாளமாக வரலாற்றில் கொள்ளப்படுவது கல்வி ஒன்றுதான்

### கரைச்சி பிரதேசசபை தலைவர் தெரிவிப்பு

நாங்கள் தமிழர்கள். எமது அடையாளமாக நீண்ட வரலாற்றில் கொள்ளப்படுவது கல்வி ஒன்று தான். தமிழர்களிடம் என்றும் அழியாதபடி கல்வி காப்பாற்றப்பட்டு வந்திருப்பதால்தான் தமிழர்களையும் அழிக்க முயற்சி மேற்கொண்டவர்களால் அதை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. இவ்வாறு தெரிவித்துள்ளார் கரைச்சி பிரதேசசபை தலைவர் நாவை. குகராசா.

லண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தினர் கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்தில் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான உத விகளை தொடர்ந்து வழங்கி விருகின்றனர்.

இதன் இன்னொரு கட்டமாக கடந்த 21ஆம் திகதி பாரதிபுரம் ஒக்ஸ்போட் கல்வி நிலையில் நிலைய நிர்வாகி கே.எம்.கேதீஸ் தலைமையில் உதவி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சி பிரதேச சபை தலைவர் நாவை.குகராசா கலந்து கொண்டு உதவிகளை வழங்கி வைத்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்நது கூறுகையில்,

நாங்கள் தமிழர்கள்.எமது அடையாளமாக நீண்ட வரலாற்றில் கொள்ளப்படுவது கல்வி ஒன்று தான். தமிழர்களிடம் என்றும் அழியாதபடி கல்வி காப்பாற்றப்பட்டு வந்திருப்பதால்தான் தமிழர்களையும் அழிக்க முயற்சி கொண்டவர்களால் அதை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. கல்வியின் மூலமே நாம் எம்மை புதுப்பித்துக் கொள்கின்றோம்.

கிளிநொச்சியில் ஆரம்ப காலங்களில் வறுமையுடன் கூடிய கல்வியைத்தான் நம் மூத்தவர்கள் கற்றிருந்தார்கள். வறுமையிலும் அவர்கள் செம்மையை கடைப்பிடிக்கின்ற பாங்கை கற்றுக் கொண்டார்கள்.

இந்தக் கிராமங்கள் மிகவும் கடினமான ஏழை தொழிலாளிகன் வியர்வைகளால்தான் உருவாக்கப்பட்டது. 'அதில்தான் நாங்கள் நிற்கின்றோம். போர் எம்மை வாழ்வின் ஏராளம் சொத்து சுகங்களை அழித்தபோதும் மீண்டும் நாம் கைப்பிடித்து எழுவதற்கு கல்வியை நாம் மீள கொண்டுவந்தோம்.

அதன் அடையாளமாக லண்டன் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தின் உதவி பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கல்வி நலன் கருதி கிடைத்திருக்கின்றது. இதன் மூலம் நீங்கள் அறிவு எனும் பொக்கிசத்தை நன்றிக்கடனாக நம் இனத்திற்கு கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். (2)

## உணவு வழங்கல் துறையினரால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவு விநியோகம்




நாடளாவிய ரீதியில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் உள்ளனர்.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இப்போது பெய்து வரும் மழைகாரணமாக குளங்கள் நிரம்பியுள்ளதோடு, தாழ்நிலங்க [illegible] வர்களிற் பெரும்பா [illegible] ளில் குடியிருந்த [illegible] லானோர் இடம் பெயர்ந்து பாடசாலைகளிலும் பொதுமண்டபங்களிலும் தங்கியுள்ளனர். இவர்களில் மிகப்பெரும்பாலானோர் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழ்பவர்கள் என்பதோடு தொடர்மழைகாரணமாக வேலைவாய்ப்பின்றியும் உள்ளனர்.

இந்நிலையில் வடமாகாணத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கு வடக்கு விவசாய அமைச்சின் உணவு வழங்கல் துறையினரால் அவசர நடவடிக்கையாக வெள்ளத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கான உலர் உணவு அடங்கிய பொதிகளை விநியோகிக்க ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் இடம் பெயர்ந்தவர்களுக்கு உலர் உணவு விநியோகிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவ [illegible] ட்டத்தில் [illegible] வித்தியாலயம், புளியம் பொக்கணை நாகேந்திரா வித்தியாலயம், கரவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம், தர்மபுரம் பொதுமண்டபம், முரசுமோட்டை அ.த.க. பாடசாலை, பரந்தன் ராகுலன் முன்பள்ளி, பன்னங்கண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, ஆனை விழுந்தான் அ.த.க. பாடசாலை ஆகிய இடங்களில் தங்கியுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வடமாகாண உறுப்பினர் சு. பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபைத தலைவர் நா.வை.குகராஜா ஆகியோர் நேரடியாகச் சென்று பொதிகளை விநியோகித்துள்ளனர்.

இது தொடர்பாக விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவிக்கையில,

வடக்கு முதல்வரின் பணிப்பின் பேரில் எமது அமைச்சுக்கு உட்பட்ட உணவு வழங்கல் துறையால் அவசர வேலைத்திட்டமாக வெள்ளத்தால் இடம் பெயர்ந்தவர்க்ளுக்கான உலர் உணவு விநியோகம் இடம்பெற்று வருகிறது. முதலமைச்சரின் செயலகத்தால் ஏற்கனவே யாழ். மாவட்டத்துக்கான உலர் உணவு விநியோகம் கணிசமான அளவு இடம்பெற்றுள்ளது. வடமாகாண சபை உறுப்பினர்கள் அனைவரிடமும் அவர்களது மாவட்டங்களில் வெள்ளப்பாதிப்பால் இடம்பெயர்ந்துள்ளவர்களின் விபரங்களைச் சேகரித்துத் தருமாறு அவைத்தலைவரூடாகக் கோரியுள்ளோம். அதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்கள் பாதிப்பு விபரங்களை உடனடியாக எங்களது அமைச்சுக்கு அறிவித்ததன் அடிப்படையில் உலர் உணவு விநியோகம் இடம்பெற்றுள்ளது. ஏனைய மாவட்டங்களுக்கும் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசனைத் தேர்ந்தெடுத்த பறவைகள்!

முன்பு ஒரு சமயம் அன்னப் பறவை, கொக்கு, குயில், மயில், சாதகப் பறவை, ஆந்தை, மாடப் புறா, புறா, நீலக்குயில், கழுகு, வானம்பாடி, நாரை, மைனா, மரங்கொத்திப் பறவை என இன்னும் பல பறவைகள் எல்லாம் ஒன்றுகூடி யோசனை செய்யத் தொடங்கின.

"நமக்குக் கருடன் தான் ராஜா.

ஆனால் அவரோ மகாவிஷ்ணுவுக்குப் பணிவிடை செய்து வருகிறார்.

நம்மைக் கவனிப்பதிலலை.

ஆகவே அப்படிப்பட்ட போலி ராஜாவால் நமக்கு என்ன லாபம்? வலையில் சிக்கி விடுவது போன்ற துக்கங்கள் நமக்கு ஏற்படும் போது அது நம்மைக் காப்பாற்றுவதில்லை.

கஷ்டமான நிலைமையிலும், அதை விடக் கஷ்டமான நிலைமையிலும் யார் துயரத்தைப் போக்கிப் புத்துயிர் அளிக்கிறானோ அவனே எனக்கு ராஜா.

சந்திரனுக்குச் சூரியன் ஒன்றே ராஜா.

அதுபோல் அவன் ஒருவனுக்கே பணிவிடை செய்வேன்.

மற்றவன் பெயரளவில்தான் ராஜா.

சதா துயரத்தால் பீடிக்கப்பட்டு பயந்துள்ளவர்களைக் காப்பாற்றாத அரசன், உண்மையில் அரச உருக்கொண்ட யமனே ஆவான்.

அறிவு குறைவான பண்டிதன், வேதம் கற்காத புரோகிதன, மக்களைக் காக்காத அரசன், வெறுப்பாகப் பேசும் மனைவி, ஊரை விரும்பும் இடையன், பணத்தில் ஆசை கொள்ளும் நாவிதன் - இவர்களை ஓட்டை விழுந்த கப்பலை விட்டுச் செல்வதைப்போல் துறக்க வேண்டும்.

ஆகவே பறவைகளின் அரசனாக வேறு யாரையாவது நியமிக்க வேண்டும்" என்று பேசின.

ஆந்தை பெரிய உருவம் உடையது அல்லவா? அதைப் பார்த்து மற்ற பறவைகள், "இந்த ஆந்தை நமக்கு அரசனாக இருக்கட்டும்.

மகுடாபிஷேகத்துக்கு வேண்டிய எல்லாவிதமான பொருட்களையும் குவியல் குவியலாகக் கொண்டு வாருங்கள்" என்று சொல்லின.



அதன்பிறகு, எல்லா புனித நதிகளிலிருந்தும் நீர் கொண்டு வரப்பட்டது.

சக்கர அடையாளமுடைய பூ, மஞ்சள் தாமரை உள்ளிட்ட நூற்றெட்டு மலர்களாலான மாலை தயாரிக்கப்பட்டது.

சிம்மாசனம் அமைக்கப்பட்டது.

தரையில் ஏழு கண்டங்களும், சமுத்திரங்களும், மலைகளும் படமாக வரையப்பட்டன.

புலித்தோல் விரிக்கப்பட்டது. பொற்கலசங்களில் ஐந்துவிதத் தளிர்கள், மலர்கள், அட்சதைகளை நிரப்பினர்.

அர்க்கியங்கள் தயாரிக்கப்பட்டன.

ஸ்துதி பாடகர்கள் பாடினர்.

நான்கு வேதங்களையும் ஓதுவதில் நிபுணர்களான பிராமணர்கள் வேதம் ஓதினர்.

பெண்கள் மங்கல கீதங்கள் பாடினர்.

மஞ்சள் பூசிய அரிசி, வெண்கடுகம், பொரி, மஞ்சள்பொடி, பூமாலை, சங்கு ஆகிய வற்றால் அலங்கரிக்கப்பட்ட அட்சதைப் பாத்திரம் தயாரித்து முன்னால் வைதனர்.

ஆரத்தி எடுப்பதற்கு விதிப்படி தேவைப்பட்ட பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டன.

மங்கல வாத்தியங்கள் முழுங்கின.

ஆந்தை உருவம் பொறித்த மேடையின்மீது சிம்மாசனம் நிறுவப்பட்டது.

அபிஷேகத்தின் பொருட்டு ஆந்தையை அலங்கரித்துக் கொணடிருந்தன.

அந்த வேளையில், எங்கிருந்தோ கா கா என்று கொடூரமாகக் கத்தித்தன் வரவை அறிவித்தபடியே ஒரு காக்கை அங்கு வந்து சேர்ந்தது.

"ஓஹோ, என்ன இது?

எல்லாப் பறவைகளும் ஒன்று கூடி இருக்கின்றனவே! ஏதாவது உற்சவமோ?" என்று காக்கை எண்ணிற்று.

காக்கையைப் பார்த்ததும் மற்ற பறவைகள் தங்களுக்கிடையே பேசிக் கொண்டன.

"பறவைகளுக்குள்ளே காக்கை சாமர்த்தியசாலி என்று கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆகவே இவனுடைய பேச்சையும் கேட்கலாம.

மனிதர்களில் நாவிதன் கெட்டிக்காரன் பறவைகளில் காக்கை கெட்டிக் காரத்தன முள்ளது.

மிருகங்களில் நரி கெட்டிக்காரத் தனமுள்ளது.

தபஸ்விகளில் வெள்ளையுடை தரித்தவன் கெட்டிக்காரன்.

என்றொரு பழமொழி உண்டு.

மேலும், பல அறிவாளிகளையும் கூடிக் கலந்து பேசி, பல அத்தாட்சிகளையும் கொண்டு, பல கோணங்களிலிருந்து ஆலோசித்துச் செய்கிறகாரியம் ஒரு பொழுதும் வீணாவதில்லை.

என்றும் ஒரு பழமொழி இருக்கிறது" என்று பேசிக் கொண்டன.

ஆகவே, பறவைகள் காக்கையைப் பார்த்து, "காக்கையே, பறவைகளுக்கு ராஜா இல்லை என்பது உனக்குத் தெரியும்.

எனவே, எல்லாப் பறவைகளும் சேர்ந்து இந்த ஆந்தையை ராஜாவாக அபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கின்றன.

ஆகவே நீயும் உன் அபிப்பிராயத்தைச் சொல்.

நீ சரியான வேளையில் வந்திருக்கிறாய்" என்றன.

காக்கை சிரித்தபடியே, "கனவான்களே, இது சரியல்ல, அன்னப்பறவை, மயில், குயில், சகோரப்பறவை, சக்ரவாகம், புறா, கொகககு முதலியவை முக்கியமாக இருக்கும் போது, பயங்கரமான முகத்தை யுடைய இந்தப் பகல் குருடனை ராஜாவாக அபிஷேகம் செய்வது ,எனக்குச் சரியென்று தோன்றவில்லை.

ஏற்கனவே கருடன் உங்களுக்கு அரசனாக இருக்கையில், இவனால் உங்களுக்கு என்ன பிரயோஜனம்? ஒருவன் அரசனாக இருக்கையில் இன்னொருவனை அரசனாக்குவது நல்லதல்ல.

நிஜமான கருட ராஜாவின் பெயரைக் கேட்டாலே யாரும் உங்களைத் துன்புறுத்த அணுகுவதில்லை" என்றது காக்கை.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

12.2014
27

- 537 - ஹேகியா சோபியா கட்டி முடிக்கப்பட்டது.
- 1703 - இங்கிலாந்துக்கு வைன்களை இறக்குமதி செய்வதற்கு போர்த்துக்கீசருக்கு தனியுரிமை வழங்கு ஒப்பந்தம் இங்கிலாந்துக்கும் போர்த்துக்கல்லுக்குமடையில ஏற்பட்டது.
- 1845 - பிள்ளைப் பேறுக்கு ஈதர் மயக்க மருந்தாக முதற் தடவையாக ஐக்கிய அமெரிக்காவில் ஜோர்ஜியாவில் பயன்படுத்தப்பட்டது.
- 1864 - இலங்கையில் முதலாவது தொடருந்து சேவை கொழும்புக்கும், அம்பேபுசைக்குமடையில் ஆரம்பிக்கப்படடது.
- 1911 - இந்தியாவின் தேசியப் பண் ஜன கண மன முதன்முதலில் கொல்கத்தா நகரில் இசைக்கப்பட்டது.
- 1918 - ஜேர்மனியருக்கெதிரான பெரும் எழுச்சி போலந்தில் ஆரம்பமானது.
- 1922 - ஜப்பானின் ஹோஷோ உலகின் முதலாவது விமானம் தாங்கிக் கப்பலாக பாவிக்கப்பட்டது.
- 1934 - பேர்சியா ஈரான் என்ற பெயரைப் பெற்றது.
- 1945 - 28 நாடுகளின் ஒப்புதலுடன் உலக வங்கி உருவாக்கப்பட்டது.
- 1949 - இந்தோனீசியா ஒன்றுபட்ட விடுதலை பெற்ற நாடாக நெதர்லாந்து அறிவித்தது.
- 1956 - தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.
- 1968 - சந்திரனுக்கான முதலாவது மனித விண்வெளிப்பயணக் கப்பலான அப்பல்லோ 8 பாதுகாப்பாக பசிபிக் கடலில் இறங்கியது.
- 1978 - ஸ்பெயின் 40வருட கால சர்வாதிகார ஆட்சியின் பின்னர் ஜனநாயக நாடானது.
- 1996 - தலிபான்படைகள் ஆப்கானிஸ்தானில் பக்ராம் வான்படைத் தளத்தைக் மீளக் கைப்பற்றினர்.

### பிறப்புகள்

- 1571 - ஜொஹான்னெஸ் கெப்லர், ஜேர்மானிய அறிவியலாளர் (இ. 1630)
- 1654 - ஜேக்கப் பெர்னோலி, சுவிஸ் கணிதவியலாளர் (இ. 1705)
- 1796 - மிர்சா காலிப், உருதுக் கவிஞர் (இ. 1869)
- 1822 - லூயி பாஸ்டர், பிரெஞ்சு அறிவியலாளர் (இ. 1895)
- 1901 - மர்லீன் டீட்ரிக், அமெரிக்க நடிகை, பாடகி (இ. 1992)
- 1945 - டேவிட் ராஜேந்திரன், ஈழத்து வானொலி, மேடை நாடகக் கலைஞர் (இ. 2013)
- 1965 - சல்மான் கான், இந்தி நடிகர்

### இறப்புகள்

- 1922 - தொமஸ் வில்லியம் ரைஸ் டேவிட்ஸ், பாளி அறிஞர் (பி. 1843)
- 1923 - அலெக்சாந்தர் கஸ்டவ் ஈபல், பிரெஞ்சுப் பொறியியலாளர் (பி. 1832)
- 1979 - ஹஃபிசுல்லா அமீன், ஆப்கானிஸ்தான் முன்னாள் அதிபர் (பி. 1929)
- 2007 - பெனசீர் புட்டோ, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் (பி. 1953)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்



வைரமுத்து - 32

...வாழக்கா வாங்கப் போனவன மசங்கியும் காணமேன்னு தெருவெல்லாம் தேடிச் திருஞ்சு கடைசியில நடந்த கதையைக் கேட்டு நாசமாப் போகன்னு கட்டையனுக்கு ஒரு சாபம் விட்டுட்டு ஊருக்குத் தெக்க ஒத்தப் புளியமரக் கல்கட்டுல காயத்தோட மோனாக்கிப் படுத்திருந்த கொண்ணவாயன் வாடா தங்கம்ன்னு வீட்டுக்குக் கூட்டிட்டு வந்து காயத்துக்கெல்லாம் மஞ்சப் பத்துப் போட்டுவிட்டு கவுண்டர் வீட்ல காப்படி அரிசி மொறக் கடன் வாங்கிக் கஞ்சிகாச்சி காணத் தண்ணியில ரசம் வச்சுக்குடுத்து படுறா மகனே படுன்னு படுக்க வச்சுட்டா பெரியமூக்கி.

பொத்திப் படுத்தா வேட்டி பட்டுக் காயம் காந்தும்ன்னு அதையும் ஒதறிட்டு ஒறக்கம் வராமக் கெடந்த கொண்ணவாயனுக்கு ரத்தக் கசிவு நின்னு போச்சு; கண்கசிவு நிக்கல பாவம்.

கரட்டியில பெரியமூக்கி புருசன் துரைச்சாமிக்குப் பாத்தியப்பட்ட பூர்வீகக்காடு மூணு குறுக்கம் இருக்கு. வருசம் ரெண்டாச்சு மருந்துக்குக் கூட மழை பெய்யல. வெவசாயம் காணாத பூமியில வீட்டடுப்புக்கு வெறகு வெட்டிக்கிட்டிருக்காக பெரியமூக்கியும் கருவாச்சியும்.

கருவேலமுள்ளு எலந்தமுள்ளு காஞ்சகள்ளி கத்தாழமட்ட எல்லாத்தையும் பெரியமூக்கியும் கருவாச்சியும் வெட்டிப் போட கொண்ணவாயன் கவட்டைய வச்சுக் கட்டி அடைய ஈசானிய மூலையில ஏறிவருது மேகம். கொச்சக்கயித்த வச்சு முள்ளக் கட்டி முடிச்சுப் போடறதுக்குள்ள அண்ணா



ந்து பாத்தா ஆகாயத்தக் காணோம்.

மாசம் ஆடிமாசம் எந்த நேரமும் அந்து விழுந்திருவேன்னு மின்னிச் சொல்லுது மேகம். ஒன்னிய ஒரு அண அணச்சுக்கிறேனாத்தான்னு பூமாதேவியப் பாத்து வளஞ்சு எறங்கி வருது ஆகாயம்.

வருதுடா.....

வரப்போகுதடா.....

வந்திருச்சுடா.....

சட சடன்னு எறங்குன மழையில காடு தெரியல, காரடு தெரியல, மல தெரியல, வழி தெரியல, வேலியோரம் இருந்த வேலாமரமும் தெரியல, சும்மா சவட்டு சவட்டுன்னு சவட்டுது மழை.

ஒவ்வொரு துளியும் எத்தம்பெருசுங்கிறீங்க! கால்ரூவா அரரூவாயாச் சில்லரை மாத்தி ஆளுக மேல எறியிற மாதிரி எறியுதய்யா மழை.

முள்ளுக் கட்ட அங்கயே போட்டுட்டு வேலாமரத்தடியில ஓடிப்போயி ஒதுங்கறதுக்குள்ள மூணு பேரும் நனைஞ்சு போனாக.

காடு நனையுது; கல்லு நனையுது. பூமிக்குள்ள வேர் நனையுது; புத்துக்குள்ள பாம்பு நனையுது. காட்டுப்புதருக்குள்ள காடா மூட்டை நனையுது. பறவை ஒண்ணு எப்பவோ இட்டுப் போன எச்சத்துல பாற இடுக்குல போயி விழுந்த வெத நனையுது. நனையாம வாராது மேயப்போயி வீடு வாரா பசுமாட்டுக் காம்புதான்.

தறி கெட்டு ஆடுதுக தன்னால மொள ச்ச காட்டு மரங்க எல்லாம் தலைவழி யாத் தண்ணி குடிச்சு சந்தோஷம்தான். பெருங்கொண்ட மழை ஓடைக்கா டெல்லாம் ஒடக்கு எடுத்திருச்சு மாடு நடந்த தடத்துல தண்ணீர் ஊறுதுன் னாப் பாருங்களேன். சொக்கத்தேவன் பட்டியும் சுத்துப்பட்டு ஊர்களும் குளுந்து போச்சு குளுந்து.

விடிய... ஊரே ஏர்மாடு பூட்டி ஓடுது ஒழவுக்காடு தேடி. காடு வெதைக்கணும்.. கையில துட்டில்ல. ஆடிக்காத்துல அரசஞ்சருகு மாதிரி அங்கிட்டும் இங்கிட்டுமா அலையிறா பெரியமூக்கி. பஞ்சாயத்துக்கு வந்த ஆளுகளுக்கு கஞ்சி காச்சி ஊத்தியே கரஞ்சு போச்சு கையில இருந்த காசு. வெதத்தானியம் வாங்கணும் ... உழுகணும் முப்பது நாளைக்குள்ள களையெடுக்கணும் எங்க போவா துட்டுக்கு? சீதனம் போயித் திரும்ப வந்த ஆண்டாவா அடகுவச்சா முத்துக் கருப்பு வீட்ல.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவலைகள் இன்றி வாழ்தல்!

அவை எல்லாவற்றையும் சேர்த்துப் பிடித்து வைத்துக் கொண்டிருப்பது இந்த இழை தான்.

சொல்லுங்கள்....?

ஆனால் ஸ்வாமிஜி நாங்கள் வேண்டுமென்றே கவலைப்பட வில்லை. பிறகு எங்கள் கவலைகளுக்கு நாங்கள்தான் காரணம் என்று எவ்வாறு சொல்கிறீர்கள்?

கவலை உங்கள் மனதில் விழிப்பற்ற நிலையாகிவிட்டது. அது வெறுமனே இருக்கிறது. அவ்வளவு தான். நீங்கள் முயற்சி ஏதும் செய்ய வேண்டியதில்லை. அது எப்பொழுதும் உங்களிடம் இருக்கிறது.

ஒரு சின்னக் கதை...,

ஒரு பெண் ஹோட்டலின் வரவேற்பாளரை அழைத்து உதவுமாறு கத்தினாள். வரவேற்பாளர் அவளது அறைக்கு வந்தாள். மற்றொரு அறையில் ஒரு மனிதர் நிர்வாணமாக நிற்பதை ஜன்னல் வழியாக என்னால் பார்க்க முடிகிறது என்று அந்தப் பெண் கத்தினாள். வரவேப்பாளரும் ஒரு மனிதன் மேல் பாதி வெற்றுடம்புடன் நின்று கொண்டு இருப்பதை ஜன்னல் வழியாகப் பார்த்தாள். அவள் சொன்னாள் மேடம் அவர் உடம்பின் மேல் பாகம் மட்டும்தான் வெற்றுடம்பாக இருக்கிறது. எப்படி நீங்கள் அவர் நிர்வாணமாக இருக்கிறார் என்ற முடிவுக்கு வரலாம்? அந்தப் பெண் கத்தினாள். அந்த அலமாரியின் மேல் ஏறிப் பாருங்கள் தெரியும்?.

(பலத்த சிரிப்பு)

எல்லாம் சரியாக இருந்தாலும் ஒரு மின் விளக்குடன் நாம் கவலைகளைத் தேடிக்கொண்டிருக்கிறோம்.



நாம் இதை வேண்டுமென்றே செய்வதில்லை. நாம் அதை முன் எப்போதும் இல்லாத வகையில் மிகவும் இயல்பாகச் செய்கிறோம். அதுதான் பிரச்சினையே நமது மனநிலை $180^0$ மாற்றம் அடைய வேண்டும்.

ஒரு சின்னக் கதை...

ஒரு போலீஸ்காரர் இரவு ரோந்து போய்க்கொண்டு இருக்கும் பொழுது வழியில் ஒரு பசுமாடு ஒரு சந்தின் நடுவில் இறந்து கிடப்பதைப் பார்த்தார். அவர் அதை அருகிலுள்ள ஒரு தெருவை நோக்கி இழுத்துச் செல்ல ஆரம்பித்தார். ஒரு வழிப்போக்கர் அவரிடம் ஒரு செத்துப் போன பிராணியை ஏன் இவ்வளவுதூரம் இழுத்துக்கொண்டு சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அந்தப் பொலிஸ்காரர் சொன்னார்: அப்பொழுதுதான் நான் நாளைக்குப் புகார் செய்ய சுலபமாக இருக்கும். ஏனெனில் எனக்கு அந்தத் தெருவின் பெயர் தெரியும்.

(சிரிப்பு)

நமக்கு எப்படி தன்னிச்சையாக இயல்பாக இருப்பது என்பது தெரியாததால் நாம் எப்பொழுதும் கவ

### ஆன்மீகம் 117

லைப்பட்டு கொண்டிருக்கிறோம். நமது திட்ட வடிவப்படி பொருந்தி வருவதற்காக நாம் வாழ்க்கையில் விடயங்களைச் சிக்கலாக்கிக் கொண்டிருக்கிறோம்.. நாம் திரவத்தன்மையோடு வாழ்வதில்லை. நீங்கள் ஒரு திரவத் தன்மையோடு வாழ்ந்தால் வேலை செய்ய வேண்டிய தேவையில்லை. நீங்கள் வெறுமனே மகிழ்ச்சியுடன் சென்று கொண்டிருக்கலாம்.

உதாரணத்திற்கு நீங்கள் எப்பொழுதும் ஆனந்தமயமாக இருப்பது என்று கவலைப்பட ஆரம்பித்து விடுவீர்கள். உங்களுக்கு எதையும் கவலையுடன் மட்டுமே ஆரம்பிக்க தெரியும்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் உரும்பிராய் தெற்கு சாட்டுபத்தூர் சபரிபீடம் அருள்வளர் சிவதர்மசாஸ்த்தா தேவஸ்தான ஐயப்பன் ஆலயத்தில் ஐயப்பவிரத ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது... (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)



யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட விரிவுரையாளர் ரட்ணம் மற்றும் அவரது மகனுடையதுமான இரண்டு நூல்கள் அண்மையில் பல்கலைக் கழகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்ட போது... (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)



சம்பத் வங்கியின் யாழ்.சுன்னாகம் வங்கிக்கிளையின் சமூகப் பொறுப்பு வேலைத் திட்டத் தின் கீழ் கீரிமலைப் பிரதேசத்தில் நூறு நிழல்தரு மரக்கன்றுகள் அண்மையில் நாட்டப் பட்டன. இந்நிகழ்வில் வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் ந.சுகிர்தன், தெல் லிப்பழை பிரதேச செயலர் க.ஸ்ரீமோகன், சம்பத் வங்கியின் வடபிராந்திய முகாமை யாளர் ப.சங்கர், சுன்னாகக் கிளையின் முகாமையாளர் ச.சுரேஸ்குமார் மற்றும் வங்கி ஊழியர்கள் கலந்து கொண்டனர்.




தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்துக்கு லயன்ஸ் கழகங்களின் வலயத் தலைவர் லயன் சி.ஹரிகரன் அண்மையில் சென்று தந்தையரை இழந்த குடும்பங் களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார். இதன்போது கற்றல் உபகரணங்களை பெற்றுக் கொண்ட மாணவர்களையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.



யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் 135 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.இந்திய பிரதித் துணைத்தூதுவர் எஸ்.தட்சணாமூர்த்தி உட்பட கலந்து கொண்ட பிரமுகர்களைப் படத்தில் காணலாம்.





நிகழ்வின்

## நிழல்கள்

யா/அல்வாய் அம் பாள் வித்தியாலயத்தின் பாடசாலை வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய 35 பெற்றோர்களை கௌ ரவிக்கும் விழா அண் மையில் நடைபெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த இரட்டைவேடம்; கருணாநிதி குற்றச்சாட்டு



(சென்னை)

**இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக மகிந்த ராஜபக்ஷ இரட்டைவேடம் போடுகிறார் என தி.மு.க. தலைவரும் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருமான மு.கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.**

இது தொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் இந்தியா நடுநிலை வகிக்க வேண்டும். ஆனால் மாறாக மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற வேண்டும் என்று பிரதமர் மோடி வாழ்த்துக் கூறியுள்ளார்.

இது கண்டனத்துக்குரியது. இந்தத் தேர்தலில், தமிழர்களின் வாக்குகளைப் பெற மகிந்த ராஜபக்ஷ ஒரு சில புதிய வாக்குறுதிகளை வழங்க முன் வந்துள்ளார். இறுதிக் கட்டப் போரில் ஆயிரக்கணக்கான தமிழர்களை இராணுவம் கொனறு குவித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக ஒரு புதிய வெளிபடையான நீதி விசாரணை நடத்தப்படும் என்று அவர் தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளார்.

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நான் உடபட தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சியினரும் வலியுறுத்தினர். ஆனால் மகிந்த ராஜபக்ஷ அதற்கு இணங்கவில்லை. சர்வதேச விசாரணை என்ற ஒன்றே தேவையில்லை என்றும் அப்போது அவர் கூறினார். தற்போது தேர்தல் என்றதும் போர்க் குற்றத் தவறுகளுக்கு விசாரணை நடத்தத் தான் தயாராக இருக்கிறார் என மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார். இது அவரின் இரட்டை வேடம் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை என்று கருணாநிதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## நூறு கோடி ரூபா கொடுத்தாலும் மகிந்த அரசில் இணையமாட்டேன்

தான் மீண்டும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளதாக வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமனற உறுப்பினருமாகிய பி.திகாம்பரம் தெரிவித்துள்ளார். மலையக மக்களே என் உயிர். அதனால் மலையக மக்களை காட்டிக் கொடுத்துவிட்டு மீண்டும் அரசாங்கத்தில் ஒருபோதும் இணைந்து கொள்ளமாட்டேன். 100 கோடி ரூபா பணத்தை கொண்டு வந்து வீட்டில் வைத்துவிட்டு வரச் சொன்னாலும் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளமாட்டேன். மலையக மக்களின் தனிவீடு, காணி உரிமைககாக தொடர்ந்தும் குரல் கொடுப்பேன். தோல்வி பயத்தில் சிலர் நான் அரசாங்கத்துடன் இணைந்து கொளளவுள்ளதாக வதந்தியை பரப்புகின்றனர். ஆனால் நான் தொடர்ந்து மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியை உறுதி செய்ய பாடுபடுவேன் என்று பி.திகாம்பரம் தெரிவித்துள்ளார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 230 | 240 | 240 | 200 |
| உருளைக்கிழங்கு | 80-100 | 100 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 400-420 | 450 | 400 | 350 |
| தக்காளி | 250 | 300 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50-60 | 40 | 50 | 60 |
| கோவா | 120 | 120 | 140 | 140 |
| கரட் | 120 | 200 | 200 | 240 |
| பூசணி | 35-40 | 60 | 40 | 60 |
| புடோல் | 80-100 | 140 | 120 | 160 |
| வாழைக்காய் | 70 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100-110 | 110 | 100 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 120 | 130 | 130 | 140 |
| பாகற்காய் | 400 | 350 | 300 | 280 |
| வெண்டிக்காய் | 120 | 160 | 140 | 100 |
| கருணைக் கிழங்கு | 35-40 | 60 | 50 | 60 |
| பயற்றங்காய் | 220-250 | 260 | 240 | 240 |
| லீக்ஸ் | 200 | 350 | 300 | 300 |
| பீற்றூட் | 150 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 350 | — | 250 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 120-140 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 170 | — | 140 |
| கீரை - 1 பிடி | 20 | 50 | 50 | 50 |
| தேசிக்காய் | 60-70 | 140 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 35 | 30-40 |
| இராசவள்ளி | 150 | 150 | — | 140 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 233

டொறின் மன்மதநாயகம்




மயந்தினி சுதன்




தசா ஜெயா




கீர்த்து கரன்




சிவா சக்தி




ராகுலன் பாலா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் தனியொரு குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டுமா?

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜனவரி 08 தேர்தலில் வெற்றி பெற்றால், இலங்கையானது மேலும் பொருளாதாரத் தேசியவாதம் மற்றும் சீனாவில் தங்கியிருகக வேண்டிய பொருளாதாரத்துடன் இணைந்த அதிகாரத்துவம், சிங்கள-பௌத்த பேரினவாதம் மற்றும் இனவாதம் போன்றவற்றைக் கொண்ட ஒரு நாடாக மாறும்.



**இவ்வாறு அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட The Wall Street Journal ஊடகத்தில் Razeen Sally எழுதியுள்ள கட்டுரையின் மொழியாக்கம்......**

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கடந்த மாதம் ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டி நடாத்தவுள்ளதாக அறிவித்ததானது இவர் மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாகப் பதவியேற்பதை நோக்காகக் கொணடிருந்தது. ஆனால் ஜனவரி 08 அன்று இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவை எதிர்த்து எதிரணியின் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டதானது தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான சாத்தியத்தை குறைத்துள்ளது.

ஒரு மாதத்திற்கு முன்னர் மைத்திரிபால சிறிசேன தற்போதைய மகிந்த ராஜபக்சவின் நாடாளுமன்ற அமைச்சராகவும் தற்போதைய ஆளுங்கட்சியின் பொதுச் செயலராகவும் கடமையாற்றியிருந்தார். ஆனால் கடந்த பத்தாண்டாக இலங்கையை மகிந்த ராஜபக்ச ஆட்சி செய்துவரும் அரசியல் நடவடிக்கையில் மைத்திரிபால சிறசேனவின் கட்சித் தாவலும் எதிரணியின் பொது வேட்பாளராக இவர் அறிவிக்கப்பட்டமையும் ஒரு திடீர்த் திருப்பமாக அமைந்துள்ளது.

2009 இல் தமிழ்ப் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் தற்போதைய இலங்கை ஜனாதிபதி பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பரப்புரையை மேற்கொண்டு வருகிறார். இந்த அடிப்படையில், இலங்கையானது மகிந்த ராஜபக்சவின் தலைமைத்துவத்தைப் பெரிதும் வரவேற்றுள்ளது. இலங்கையில் கால் நூற்றாண்டாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் பின்னர், தற்போது மக்கள் அச்சமின்றி தமது நாளாந்தத்தைக் கழிக்க முடிகிறது.

வீதிகள், பாலங்கள், தொடரூந்துப் பாதைகள், மின்சக்தித் திட்டங்கள் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. கொழும்பு மற்றும நாட்டின் பெரும்பாலான பட்டிணங்கள் மேலும் அழகுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான ஒரு சூழலில் இலங்கையில் வாழும் மக்களின் நிலை அரசியல் காரணங்களால் சீர்குலைந்துள்ளது. இலங்கையின் அரசியல், இனங்களுக்கிடையிலான நல்லுறவு, பொருளாதாரம் மற்றும் வெளியுறவுக் கொள்கை போன்றன மிகவும் மோசமடைந்துள்ளன.

அரசியல் ரீதியாக நோக்கில், இலங்கையானது தனியொரு குடும்பத்தால் நிர்வகிக்கப்படும் ஒரு நாடாகக் காணப்படுகிறது. இது தற்போது நான்கு சகோதரர்களால் மட்டும் ஆளப்படுகிறது. அதாவது இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இவரது இரு சகோதரர்களான கோத்தபாய மற்றும் பசில் மற்றும் நாமல் ராஜபக்ச ஆகிய நான்கு பேரால் ஆட்சிசெய்யப்படுகிறது. இதைவிட, மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய உறவுகள், நண்பர்கள் போன்றவர்களும் பிரதான பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இலங்கையின் கொள்கைத் தீர்மானமானது குறித்த ஒரு சில நபர்களால் மட்டும் வரையப்படுகிறது. பொது நிர்வாகம், சட்டசபை, நீதிச் சேவை, பிரதேச சபைகள், காவற்துறை, இராணுவம் போன்றவற்றை நிர்வகிப்பவர்கள் மகிந்த ராஜபக்சவின் செல்வாக்கின் அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர். இதேபோன்று வர்த்தகம், ஊடகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றனவும் மகிந்த ராஜபக்சவின் கையாட்களால் அச்சுறுத்தப்படுகின்றன.

மிகச்சுருக்கமாகக் கூறில், இலங்கையானது தற்போது சர்வதிகாரப் போக்குள்ள ஒரு நாடாக மாறியுள்ளது. அதாவது ரஸ்யா மற்றும் வெனிசுலா போன்ற நாடுகளை விடவும் இந்திய உபகண்ட நாடுகளை விடவும் சர்வதிகாரப் போக்குள்ள நாடாக இலங்கை மாறி வருகிறது. இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததிலிருந்து இங்கு வாழும் இனங் களுக்கிடையிலான உறவு முன்னேற்றப்படவில்லை. தமிழர்கள் பெரும பான்மையாக வாழும் வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தம் தீவிரமடைந்திருந்தது. இவர்கள் தற்போது கட்டுமான வசதிகள், புதிய வீடுகள் போன்ற வற்றைப் பெற்றிருந்தாலும் கூட, இங்கு போரால் ஏற்பட்ட வறுமை மற்றும் உளவியல் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இராணுவம் தொடர்ந்தும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கில் இராணுவ ஆதிக்கம் அதிகரித்துள்ளது. பௌத்த பிக்குகளால் தலைமை தாங்கப்படும் பொதுபல சேனா என்கின்ற அமைப்பானது பள்ளிவாசல்கள், முஸ்லீம் கடைகள் மற்றும் கத்தோலிக்கத் தேவாலயங்கள் போன்றவற்றின் மீது தாக்குதல் நடாத்தி வருகிறது. இலங்கையில் என்றுமில்லாதவாறு சிங்கள-பௌத்த இனவாதம் தீவிரமடைந்துள்ளது. இதற்கு மகிந்த ராஜபக்ச அரசாங்கமும் தனது ஆதரவையும் உந்துதலையும் வழங்கி வருகிறது.

அதாவது போர் முடிவடைந்ததிலிருந்து தற்போது வரை இலங்கையின் பொருளாதாரமானது ஏழு சதவீதத்தை விட அதிகரித்துள்ளது. விலையேற்றம், கடன், வட்டிவீதம் போன்றன குறைந்துள்ளன. நாட்டில் தற்போது வறுமை அதிகரித்துள்ளது. இதனால் வேலையற்றோர் வீதம் அதிகரித்துள்ளது. இலங்கை அரசாங்கம் தனது பொருளாதார் வளர்ச்சியை பெருமிதமாகப் பேசுவதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். போருக்குப் பின்னான வளர்ச்சியானது நாட்டின் உற்பத்தி வீதம் அதிகரித்ததால் ஏற்பட்டதல்ல. அதாவது அனைத்துலக நாடுகளிடமிருந்து மானியமாகவும் கடனாகவும் அதிகளவு நிதியைப் பெற்றுக் கொண்டமையே இதற்குக் காரணமாகும்.

உள்நாட்டு தொழிற்துறைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. இதற்குப் பதிலாக நுண் பொருளாதாரக் கோட்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. வர்த்தகப் பாதுகாப்பு நடைமுறைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. போட்டித்தன்மை குறைவடைந்துள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் தடைப்பட்டுள்ளன. கட்டுமானத் திட்டங்கள் மிக அதிகளவான நிதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளையில், இலங்கையின் பாதுகாப்புச் செலவீனம் அதிகரித்துள்ளது. இராணுவத்தினர் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். நாட்டில் ஜனநாயகம் வீழ்ச்சியடைவதற்கும் பொருளாதார தேசியவாதம் அதிகரிப்பதற்கேற்ப வெளியுறவுக் கோட்பாடு வரையறுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் மேற்குலக நாடுகளுடனான உறவுநிலை மோசமடைந்துள்ளது. இந்தியாவுடனான இலங்கையின் உறவுநிலையில் விரிசல் ஏற்பட்டுள்ளது. ஆனால் சீனா, இலங்கையின் 'முதலாவது நண்பனாக' செல்வாக்குச் செலுத்துகிறது. இலங்கையின் புதிய கட்டுமானத் திட்டங்கள் மற்றும் மகிந்த ராஜபக்சவின் பெருமையைப் பாறைசாற்றும் திட்டங்களுக்கு சீனா அதிக கடன்களை வழங்குகிறது.

இலங்கையின் பூகோள பொருளாதார நலன்களை அடைந்து கொள்வதற்கேற்ற வெளியுறவுக் கோட்பாட்டை மகிந்த ராஜபகச வரையறுத்துள்ளார். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்றன இலங்கையின் ஏற்றுமதியின் மூன்றில் இரண்டு பங்கிற்குப் பொறுப்பாக உள்ளன. இலங்கை இந்தியாவுடன் பொருளாதார உறவைப் பேணுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக, தென்னிந்தியாவுக்கு அருகிலுள்ள 300 மில்லியன் மக்களைக் கொண்ட நான்கு நாடுகளுடன் இலங்கை பொருளாதார உறவைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜனவரி 08 தேர்தலை வெற்றி பெற்றால், இலங்கையானது மேலும் பொருளாதாரத் தேசியவாதம் மற்றும் சீனாவில் தங்கியிருக்க வேண்டிய பொருளாதாரத்துடன் இணைந்த அதிகாரத்துவம், சிங்கள-பௌத்த பேரினவாதம் மற்றும் இனவாதம் போன்றவற்றைக் கொண்ட ஒரு நாடாக மாறும்.

ஜனாதிபதியாகப் பதவியேற்று 100 நாட்களில் நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பேன் எனவும், அனைத்துக் கட்சி அரசாங்கத்தை உருவாக்குவேன் எனவும் மேல்மந்திரியைக் கொண்ட நாடாளுமன்ற முறைமையை மீண்டும் நடைமுறைப்படுத்துவேன் எனவும் காவற்துறை, நீதிச்சேவை, பொதுச் சேவை போன்ற சுயாதீன நிறுவகங்களை மீளவும் நிறுவுவேன் எனவும் திரு.சிறிசேன வாக்குறுதி வழங்கியுள்ளார். இவையெல்லாம் வரவேற்கத்தக்க மாற்றங்களாகும். இலங்கையானது நம்பகமான பொது நிறுவகங்களைக் கொண்ட ஒரு நாடாகவும் சட்ட ஆட்சி மதிக்கப்படும் ஒரு நாடாகவும் மாறவேண்டிய தேவையுள்ளது. ஆனால் மகிந்த ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிடும் எதிரணியிலும் அதிகாரத்துவ சக்திகள் அங்கம் பெற்றுள்ளன.

எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இன உறவு தொடர்பாக எவ்வித கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை. ஏனெனில எதிரணியில் சிங்கள-பௌத்த இனவாதிகள் அங்கம் வகிக்கின்றனர். இதயசுத்தியுடன் கூடிய இன மீளிணக்கப்பாட்டை விரும்புவோர் இதற்காகச் சண்டையிட வேண்டியிருக்கும். வடக்கு கிழக்கு உட்பட மாகாண சபைகளுக்கு வழங்கப்படாது நீண்டகாலமாகத் தாமதிக்கப்படும் அதிகாரப் பரவலாக்கம் நாட்டின் இன மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான ஒரு தீர்வாகும்.

சிறிலங்காவில் தாராளவாதப் பொருளாதாரம் நிலைநிறுத்தப்பட வேண்டும். பொது முதலீடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். தனியார் துறை செயற்படுவதற்கு வழிவகுக்கப்பட வேண்டும். வர்த்தக தாராளவாதம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு உந்துதல் அளிக்கப்பட வேண்டும். பொதுத் துறை மளவும் சீர்திருத்தப்பட வேண்டும். பாதுகாபபுச் செலவீனம் குறைக்கப்பட வேண்டும். இவையனைத்தும் இலங்கையின் வெளியுறவுக் கோட்பாட்டில் மாற்றம் ஏற்படுத்தப்படுவதன் மூலம் சீரமைக்கப்பட வேண்டும். அத்துடன் இலங்கையானது மேற்குல நாடுகளுடனும் இந்தியாவுடனும் நல்லுறவைப் பேணுவதற்கான அழுத்தம் வழங்கப்பட வேண்டும்.

நடைமுறை ரீதியாக நோக்கில் சிறிலங்காவுக்கு பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் சுதந்திரம் பேணப்பட வேண்டும். ஜனவரி 08 இல் இடம்பெறவுள்ள தேர்தலில் எதிரணி வெற்றி பெறுமாயின் இது இலங்கையின் அரசியலில் ஏற்படக் கூடிய வரவேற்கத்தக்க திசைதிருப்பமாகக் காணப்படும். ஆனால் இது சுதந்திர இலங்கையைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டத்தின் ஆரம்பமாக மட்டுமே அமையும்.

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு.காவின் ஆதரவு மகிந்தவுக்குத்தான்

### பசில் நம்பிக்கை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவளிக்கும் என்று அமைச்சர் பசில் ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அதிகமான முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி என்ற வகையில். முஸ்லிம் காங்கிரஸின் முடிவு ஜனாதிபதிக்கு சாதகமாகவே இருக்கும் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

ஏனைய கட்சிகள் பெரும்பாலும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தமது நிலைப்பாடுகளை வெளியிட்டுள்ள நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமது நிலைப்பாடுகளை வெளியிடாமல் இருந்துவருகின்றன.

இதேவேளை ஜனாதிபதிக்கு மிகவும் நம்பிக்கையானவராக திகழ்ந்த முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் பொதுவேட்பாளர் மைத்திரிபாலவுக்கு ஆதரவளிக்க முன்வந்தமையானது அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு பாரிய சவாலை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## எமது சமூகமே முக்கியம்

அமைச்சுப்பதவி முக்கியம் அல்ல என்பதுடன், தமது சமூகமே முக்கியம் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

இதனாலேயே, அனைத்தையும் தூக்கி எறிந்துவிட்டு சமூகத்துக்காக அரசாங்கத்தை விட்டு வெளியேறியுள்ளதாகவும் அவர் கூறினார்.

சமூகத்துக்கு நடந்த அநீதியை பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. இதனால், வெளியேறுவதற்கு தருணம் பார்த்துக்கொண்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

காத்தான்குடியில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர், பொறியியலாளர் சிப்லி பாறூக்கின் இல்லத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

# 13 ஆவது திருத்தச்சட்டம் குறித்து மைத்திரியின் நிலைப்பாடு என்ன?

### அரசு மீண்டும் கேள்வி

(கொழும்பு)

**ரணில் - மைத்திரி ஒப்பந்தம் போலியானது எனில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலான தனது உண்மையான நிலைப்பாட்டை நாட்டிற்கு வெளியிட வேண்டும் என அரச தரப்பு வலியுறுத்தியுள்ளது.**



மேலும் வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படுமா? இல்லையா? 13 ஆவது திருத்தத்தில் உள்ளடங்காத எல்லை மீறிய அதிகாரம் கொண்டு வரப்படுமா? இல்லையா? என்பதற்கான பதிலை உடனடியாக வெளியிட வேண்டும் என சவால் விடுத்த தேசிய சுதந்திர முன்னணி தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச, ரணில்-மைத்திரி ஒப்பந்தம் உண்மையாகும் வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பொது வேட்பாளருக்கே விரைவில் ஆதரவு வழங்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ரணில் - மைத்திரிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டதாக அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கவினால் வெளியிடப்பட்ட ஒப்பந்தம் போலியானது என கூறுகின்றனர். எனினும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ள, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் கையொப்பம் உண்மையானதா? என்பதனை பொலிஸாரே தீர்மானிப்பர்.

குறித்த ஒப்பந்தம் போலியானது எனில் அந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட கூற்றுக்களை நிறைவேற்றுவதா? இல்லையா? என்பதனை பொது வேட்பாளரோ அல்லது வேறு எவருமோ நாட்டுக்கு கூறவில்லை. மேற்குறித்த கேள்வியிலிருந்து தப்பித்து கொள்ளவே எதிரணியினர் முயற்சி செய்கின்றனர். எனவே வடக்கிலிருந்து இராணுவம் குறைக்கப்படுமா? இல்லையா? அதி பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேற்றம் செய்யப்படுமா? இல்லையா? அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் பலப்படுத்தப்படுமா? இல்லையா? என்ற கேள்விகளுக்கு எவரும் பதில் கூறுவதாக தெரியவில்லை.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாட்டின் தேசிய பாதுகாப்பு ஐக்கியம் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எந்தவொரு நிலைப்பாட்டினையும் கூறவில்லை.

இதற்கு பதிலாக இரகசிய ஒப்பந்தத்தின் ஊடாக அவற்றினை உள்ளடக்கியுள்ளனர். இந்த ஒப்பந் தத்தினை வெளியிட்டால் பெரும் பான்மையினரின் வாக்கு கிடைக்கப் பெறாமல் போய்விடும் என்ற அச்சமே அதன் காரணமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மக்களுக்கு சேவையாற்ற இ.தொ.கா. தடை விதிப்பு!

(கொழும்பு)

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் வழிநடத்தலின் கீழ் இயங்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்துகொண்டு மலையக மக்களுக்கு சுதந்திரமாகவும், நேர்மையாகவும் சேவை செய்ய முடியவில்லை.

அரசியல் ரீதியாக அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. அதனால் தான் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்டேன். இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான எம்.உதயகுமார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மலையக மக்களுக்கு சேவை செய்வதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவில்லை. சில இடையூறுகள், தடங்கல்கள் ஏற்பட்டன. தங்களுக்கு சேவை செய்யத்தான் தமது பிரதிநிதியாக மக்கள் என்னைத் தெரிவுசெய்துள்ளனர். ஆனால், மக்களுக்கு சேவைசெய்ய இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டதுடன், கட்டுப்பாடுகளும் விதிக்கப்படுகின்றன. அதனால்தான், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து மக்களுக்கு சேவை செய்யத் தீர்மானித்துள்ளேன். மலையகத்தில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இனனும் இறுதித் தீர்வு வழங்கப்படவில்லை. கல்வி, சுகாதார அபிவிருத்தி இல்லை. இவ்வாறான நிலையில், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையக மக்களுக்கு காணி உரிமையுடன்கூடிய வீடு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார். (இ-5)

அஸ்வர் எம்.பி

## சிங்கள சமூகத்திடம் மன்னிப்பு கோருகிறார்

பெரும்பான்மை சிங்கள சமூகத்திடம் மன்னிப்பு கோருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஊடக விவகார ஆலோசகருமான ஏ.எச். எம். அஸ்வர் தெரிவித்துள்ளார். தேசிய பட்டியல் ஆசனத்தைப் பெற்றுக் கொண்டு ஆளும் கட்சியிலிருந்து எதிர்க்கட்சியில் இணைந்து கொண்ட அமீர் அலிக்கு வழக்கை வைக்க வேண்டியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். முஸ்லிம் வரலாற்றில் இடம்பெற்ற மிகப் பெரிய துரோக செயலை அமீர் அலி மற்றும் றிசாத் பதியுதீன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

வெளிநாட்டு விடயங்களை மேற்கொண்டு சகல வரப்பிரசாதங்களையும் அனுபவித்து இறுதியில் கட்சிதாவுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. நன்றி மறந்து இவ்வாறு இறுதித் தருணத்தில் கட்சிதாவுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. முஸ்லிம் சமூகத்தவன் என்ற ரீதியில் [illegible] சிங்கள மக்களிடம் மன்னிப்பு கோருகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### எது தகுதி

ஓர் ஆட்சித் தலைவர் இருந்தார்.

அவருடைய தேசத்தில் மாநிலங்களை நிர்வாகம் செய்வதற்காக ஆளுநர்கள் இருந்தார்கள். ஒரு மாநிலத்தில் ஆளுநர் பதவி வெற்றிடமாக இருந்தது. அந்தப் பதவிக்கு இரண்டு பேரைப் பரிந்துரை செய்திருந்தார்கள்.

அவர்களிருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்காக அவர்களைத் தன் வீட்டிற்கு வந்து சந்திக்குமாறு கட்சித் தலைவர் அழைத்திருந்தார்.

குறித்த நேரத்தில் ஒருவர் மட்டும் வந்து சேர்ந்தார். வணக்கம் சொல்லி அருகில் அமர்ந்தார். அன்பாக பேசினார். அவருடைய முகம் தெளிவாக இருந்தது. போட்டிருந்த உடையும் மிகவும் அழகாக சுத்தமாக இருந்தது.

அளவுக்கு அதிகமாக எந்த வார்த்தையும் அவர் உபயோகப்படுத்தவில்லை. அவர் எல்லா வகையிலும் ஒரு நல்ல தலைவராக இருப்பதாக அந்த ஆட்சித் தலைவர் உணர்ந்தார். அவர்கள் இருவரும் சம்பாசித்துக் கொண்டிருந்தினர்.

இன்னொருவர் இன்னும் வந்து சேரவில்லை.

குறிப்பிட்ட நேரம் கடந்து விட்டது.

சிறிது நேரத்தில் அவசர அவசரமாக அவர் ஓடி வந்து சேர்ந்தார். வந்ததும் காலதாமதமானதற்கு மன்னிப்பு கேட்டுக்கொண்டார். அப்படி கேட்டுக் கொண்டு தன்னுடைய உடையில் படிந்திருந்த புழுதியை கையால் தட்டி சுத்தப்படுத்திக்கொண்டார்.

அதன்பின் சொன்னார்.

தலைவரே! தாமதமாக வந்ததற்கு என்னை மன்னிக்க வேண்டும். நான் முன்னாடியே புறப்பட்டு வந்து கொண்டிருந்தேன். வரும் வழியில் வயதான அம்மா ஒருத்தரை பார்த்தேன். அவருடைய கழுதையின் கால்கள் இரண்டும் பாறைகளுக்கு நடுவில் மாட்டிக்கொண்டிருந்தன. அதை வெளியே எடுப்பதற்கு அந்த அம்மா மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்.

அதைப்பார்த்த பின்னரும் விட்டிட்டு வர முடியவில்லை. ஒரு வழியாக அதை மீட்டு அவரிடம் ஒப்படைத்து விட்டு வருவதற்கு நேரமாகி விட்டது என்றார்.

இவர் சொன்னதை ஆட்சித்தலைவர் புன்னகையுடன் கவனித்துக்கொண்டிருந்தார்.

ஆனால் முதல் வந்து சேர்ந்தவர் வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தார்.

அதன்பின் "உங்களுக்கு எது முக்கியம்? ஆளுநரின் பதவியா, கழுதையின் காலா? என்று கேட்டார்.

இந்தச் சமயத்தில் ஆட்சித்தலைவரின் குழந்தைகள் ஓடி வந்து மடியில் உட்கார்ந்து விளையாட ஆரம்பித்தனர். அவர் அந்தக் குழந்தைகளுக்கு அன்பாக முத்தமிட்டார். இதைப்பார்த்ததும் அந்த முதல் நபர் சொன்னார்.

"ஐயா... எனக்கு பத்து குழந்தைகள். இப்படியெல்லாம் அருகில் வரமாட்டார்கள். என்னைப்பார்த்தாலே பயந்து ஒதுங்கிப் போய்விடுவார்கள்"

"அப்படியானால் அவர்களுக்கு முத்தமே கொடுத்ததில்லையா?"

"இல்லை"

இப்போது அந்த ஆட்சித்தலைவர்

"படைப்புக்கள் மீது கருணை காட்டாதவர் மீது படைப்பாளன் கருணை காட்டமாட்டான்" என்றார்.

அதற்கு "அந்த ஐந்து குழந்தைகள் வீட்டுக்குப் போனால் எல்லோரும் என் மேல் வந்து விழுந்து விளையாடுவார்கள். என் உடை கசங்கி இருப்பதற்கு அதுவும் ஒரு காரணம்" என்றார்.

அழகான உடை, இனிமையான பேச்சு, பொலிவான தோற்றம். இதனால் மட்டும் ஒருவர் தலைவராகி விட முடியாது. கருணை வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் வேண்டும். இந்தக் குணங்கள் தாமதமாக வந்த இரண்டாவது நபரிடம் இருப்பதை ஆட்சித் தலைவர் புரிந்து கொண்டார்.

ஆழ்ந்த சிந்தனைக்கு பின் அந்த ஆட்சித்தலைவர் தமது செயலாளரைக் கூப்பிட்டு "இந்த இரண்டாவது நபருக்கு பதவி நியமனக் கடிதத்தை அனுப்பி வையுங்கள்" என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2014-14.01.2015



**ஏழரைச்சனி தொடங்கும் நேரம்! உதவிக்கரம் நீட்டுவதன் மூலம் உள்ளத்தில் இடம் பிடிக்கும் தனுசு இராசி அன்பர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே ஏழரைச் சனியின் ஆதிக்கம் உங்கள் ராசிக்கு வந்துவிடுகிறது. உங்கள் ராசிக்கு தனாதிபதியாகவும், சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் சனி யோகத்தை வழங்குபவர் என்பதால் பெரியளவில் பாதிப்புகளை கொடுக்க மாட்டார். முறையாக சனி வழிபாட்டை வைத்துக் கொள்வதன் மூலம் முன்னேற்றத்திற்கு வித்திடுவார்.

ஒரு சிலருக்கு ஏழரைச் சனி மூன்றுமுறை வாழ்க்கையில் இடம்பெறும். ஒரு சிலருக்கு நான்கு முறை ஏழரைச் சனி வருவதுமுண்டு. மங்கு சனி, பொங்கு சனி, நிறைவு சனி, நீடித்த சனி என்று இதை வர்ணிப்பது வழக்கம். மங்கு சனியாக வரும் முதல் சுற்றில், தங்கு தடைகள் அதிகரிக்கும். தனவிரயம் ஏற்படும். பங்காளிப் பகையும், பக்கத்தில் இருப்பவரின் பகையும் உண்டாகும்.

ஆனால் இரண்டாவது சுற்றாக வரும், பொங்குசனிக் காலம் புதிய திருப்பங்களைத் தரும். பொருளாதார நிலை உயரும். மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். மற்றவர்களின் ஒத்துழைப்போடு வெற்றிக்கொடியை நாட்டுவீர்கள். பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். மனதில் 24 மணி நேரமும் மகிழ்ச்சி குடிகொள்ளும்.

மூன்றாவது, நான்காவது சுற்றாகச் சனியின் ஆதிக்கம் நடப்பவர்கள் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது வழக்கம். குறிப்பிட்ட சில ராசிக்காரர்களுக்கு அமோகமான பலன் கிடைக்கும். சனி நட்புக் கிரகத்தின் காலில் சஞ்சரித்தாலும், சுப கிரகங்களின் பார்வை பதிந்தாலோ, திட்டமிட்ட காரியங்களை தட்டமிட்டபடி செய்ய இயலும். செல்வ நிலையும் உயர்ந்துகொண்டே செல்லும். டிசம்பர் 22 ஆம் திகதி கடகத்தில் சஞ்சரிக்கப் போகும் குரு சனியைப் பார்ப்பதால் வரும் துயரங்கள் வாயிலோடு நிற்கும். வரவிற்கேற்ற செலவைக் கொடுக்கும்.

பன்னிரெண்டான வீட்டில்
பகலவன் மைந்தன் நின்றால்
எண்ணிலா மாற்றம் சேரும்!
ஏமாற்றம் நட்பால் சேரும்.
புண்ணியம் வந்து சேர
புகழ்மிக்க வாழ்வும் காண
எந்நாளும் சனியின் முன்னால்
எள்தீபம் ஏற்றுவீரே!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. சனியின் சன்னிதியில் ஒளி தீபம் ஏற்றினால் எளிதாக வழி காட்டுவார்.




**புத-சுக்ர பெயர்ச்சிக் காலம்!**

டிசம்பர் 28 ஆம் திகதி புதனும், 30 ஆம் திகதி சுக்ரனும் மகர ராசியில் சஞ்சரிக்கப் போகிறார்கள். 7,10 இற்கு அதிபதி 2 இல் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளம் சிறப்பாக இருக்கும். பண நெருக்கடி அகலும். வாழ்க்கைத் துணையின் தொழில் மற்றும் உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளால் உதிரி வருமானங்கள் கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இடமாற்றங்களில் கவனம் செலுத்தினால் முன்னேற்றத்தின் முதல் படிக்குச் செல்ல முயற்சிப்பீர்கள்.

6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் விரயாதிபதி செவ்வாயோடு இணைவதால், சகோதரர்களை சார்ந்து இருப்பவர்கள் கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. முன்கோபத்தின் விளைவாக மூத்த சகோதரர்கள் விலகிச் செல்லலாம். ஆபரண சேர்க்கை மட்டுமல்ல, அடகு வைத்த நகைகளை மீட்கும் வாய்ப்பும் கிட்டும். வைகுண்ட ஏகாதசி திருநாளில் விரதமிருந்து விஷ்ணுவையும், லட்சுமியையும் வழிபாடு செய்தால் வாழ்க்கை வளமாகும்.

**கும்ப செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜனவரி 1 ஆம் திகதி அன்று கும்ப ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். அப்பொழுது செவ்வாயும், சனியும் பரிவர்த்தனை யோகம் பெறுகிறார்கள். விரயாதிபதியும், சகாய ஸ்தானாதிபதியும் பரிவர்த்தனை யோகம் அடைவதால் சுப விரயங்கள் அதிகரிக்கும். குறிப்பாக பஞ்சமாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். பூர்வீகச் சொத்துக்களின் பாகப்பிரிவினையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். வாகன யோகம் உண்டு. இம்மாதம் சனிக் கிழமை தோறுமம சனீஸ்வரரை வழிபட்டு, அவரது சன்னிதியில் எள்தீபம் ஏற்றுங்கள். வளர்ச்சி அதிகரிக்கும்.

# சஞ்சலங்கள் அகலும் சந்தோஷங்கள் கூடும்

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஏழரைச் சனி தொடங்கும் மாதமாகும். இருப்பினும் சனிப் பெயர்ச்சியான ஒரு வாரத்திலேயே, குரு வக்ர இயக்கத்தில் கடகத்திற்கு சென்று சனியைப் பார்க்கப் போகின்றார். எனவே, சஞ்சலங்கள் அகலும். சந்தோஷங்கள் கூடும். குடும்பத்தினர்களின் குறைகளைக் களைந்து, அவர்கள் மனதில் இடம் பிடிப்பீர்கள். கணவன்- மனைவிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகாமாற்றம் உருவாகலாம். வரும் மாற்றத்தை ஏற்றுக் கொள்வதே புத்திசாலித்தனமாகும்.

வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வுது நல்லது.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**வருமானப் பற்றாக்குறை அகலும் நேரம்! உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து உன்னத வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் மகர இராசி அன்பர்களே!**

இதுவரை 10 இல் சஞ்சரித்து வந்த சனிபகவான், மார்கழிமாதம் முதலாம் திகதியன்று லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக செல்வ நிலையிலிருந்த தேக்க நிலை மாறும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். பார்க்கும் தொழிலிலிருந்த தொய்வு நிலை அகலும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர்.

பத்தல்சனி சஞ்சரிக்கும்பொழுது. பல விதங்களில் கவலையைக் கொடுத்திருக்கலாம். முத்தான பெறறோரின் உடல் நலத்தில் தாக்குதல், தொழிலில் சில ஏமாற்றங்களைச் சந்தித்தல் போன்றவற்றை சனி வழங்கியிருக்கலாம். இனி இந்த நிலை மாறும். இடர்பாடுகள் தீரும. நோக்கத்தைப் புரிந்துகொண்டு மற்றவர்கள் செயற்படுவர். எந்த விதத்திலும் இனி முன்னேற்றம் தான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

சனிப்பெயர்ச்சியான ஒரு வாரத்திலேயே குரு வக்ர கதியில் கடக ராசிக்குச் செல்கிறார். கடகத்தில் உச்சம் பெறும் குருவின் பார்வை உங்கள் ராசியிலும், சனியின்மீதும் பதிகிறது. எனவே, மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். வழக்குகளில் வெற்றி கிட்டும். இழப்புகளை ஈடு செய்ய யாரேனும் ஒருவரை தொழில் பங்குதாரர்களாக இணைத்துக் கொள்வீர்கள்.

குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசிக்கு 3 ஆம் இடத்திலும் பதிவதால் சகோதர ஒற்றுமை பலப்படும். உடல் ஆரோக்கியம் சீராகும். கடன்சுமை பாதிக்கு மேல் குறைந்து மகிழ்ச்சியை வழாங் கும். இழந்த சொத்துக்களைப் பெறுவதில் கவனம் செலுத்துவீர்கள். பணப் பொறுப்புகள் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை இப்பொழுது தானாகவே வந்து சேரும்.

லாபத்தில் சனிதான் வந்தால்
நல்லதோர் தொழில்கள்
வாய்க்கும்!
தேகத்தில் இருக்கும் நோய்கள்
சீக்கிரம் விலகுதற்கு
காகத்தை வரவழைத்துக்
கனிவுடன் சாதம் வைப்பீர்!
மேக வண்ணச் சனியை
நீங்கள் மிகப்
பணிந்து வணங்குவீரே!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. எனவே, சனியை வணங்கினால் சகல நலனும் வந்துசேரும. ஆரோக்கியத் தொல்லைகளும் அகலும்.




**புத, சுக்ர பெயர்ச்சிக்காலம்!**

டிசம்பர் 28 ஆம் திகதி புதனும், 30 ஆம் திகதி சுக்ரனும் மகரத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரப் போகின்றன. தொழில் முயற்சிகள் வெற்றிபெறும். தொகை வரவு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகள் நலன்கருதி எடுத்த முயற்சிகள் நல்ல முடிவிற்கு வரும். பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் முடிவடையும். அரசுவழி அனுகூலம் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும்.

பெண் குழந்தைகளின் திருமண முயற்சிகளை நடத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அதற்குரிய ஆபரணச் சேர்க்கைக்கும் வழி பிறக்கும். குடும்பத்திலுள்ள குழப்பங்கள் அகல விஷ்ணு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. வைகுண்ட ஏகாதசியன்று விரதமிருந்து வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பூமி விற்பனையால் லாபம் கிடைக்கும் நேரமிது.

# இம்மாதம் உங்களுக்கு வளர்ச்சி கூடும் மாதம் என்றே சொல்லலாம்!

**கும்ப செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜனவரி 1 ஆம் திகதி கும்ப ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். சகாய ஸ்தானத்திற்கும், தொழில் ஸ்தானத்திற்கும் அதிபதியான செவ்வாய், தன ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். எனவே, இனி வாழ்க்கை பாதையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். மதிப்பும், மரியாதையும் உயரும். கூடப் பிறந்தவர்கள் உங்கள் குரலுக்கு செவி சாய்ப்பார்கள். தேடி சேமித்த செல்வத்தை கூட்டாளிகளிடம் கொடுத்து உதிரி வருமானத்திற்கு வழி வகுத்துக் கொள்வீர்கள்.

இம்மாதம் சனிபகவான் சன்னிதிக்குச் சென்று சனிக்கிழமை தோறும் விரதமிருந்து எள்தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து வழிபாடு செய்து வாருங்கள். காக வாகனத்தான் உங்களுக்கு கேட்ட வரம் தருவார்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு வளர்ச்சி கூடும் மாதமென்றே சொல்லலாம். உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். உயர் அதிகாரிகளால் ஏற்பட்ட மனக்கலக்கம் அகலும். பணப்பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். பல நாட்களாக முடிவடையாத காரியம் முடிவடையும். கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். அடுத்த வாரிசு பிறப்பதற்கான அறிகுறி தோன்றும. உங்கள் பெயரிலேயே பூமி வாங்கும் யோகம் உண்டு. அங்காரக வழிபாடும், அனுமன் வழிபாடும் அமைதிக்கு வித்திடும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத ரீதியான படுகொலைகளுக்கு முடிபுகாண்பது மிகவும் அவசியம்

## இந்த ஆண்டு கிறிஸ்மஸ் ஏகப்பட்ட சோகங்களைத் தந்துள்ளதாக போப்பாண்டவர் கவலை



(வத்திக்கான்)

**சிரியா,ஈராக் படுகொலைகள் எபோலா பலி, பாகிஸ்தானில் தீவிரவாத தாக்குதலில் குழந்தைகள் பலி என ஏகப்பட்ட சோகங்கள் நிறைந்ததாக இந்தாண்டு கிறிஸ்மஸ் இருந்து விட்டது என கவலை தெரிவித்த போப்பாண்டவர் மத ரீதியான கொலைகளுக்கு முடிவு ஏற்பட வேண்டும் என பிரார்த்தனை செய்வதாகவும் தெரி**



இயேசு கிறிஸ்து பிறந்த தினமான டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி உலகம் முழுவதும் கிறிஸ்தவர்களால் கிறிஸ்மஸ் பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. இதை யொட்டி உலகம் முழுவதிலும் கிறிஸ்மஸ் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

120 கோடி கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமை மத குருவான போப் ஆண்டவர் பிரான்சிஸ், வத்திக்கான் நகரில் உள்ள செயிண்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தில் சிறப்பு பிரார்த்தனையில் ஈடுபட்டார். இதில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இங்கு உரைநிகழ்த்திய போப்பாண்டவர்,

கிறிஸ்மஸ் நமக்கு கடவுளின் நற்செய்தியான அமைதியை நினைவுகூரும் தினமாகும். அது இருள் சூழ்ந்த உலகையும், இலஞ்சத்தையும விட மிகவும் வலிமையானது. இவற்றில் இருந்து மக்களை மீட்பதற்கு கடவுளை அனுமதியுங்கள்.

நமக்கு நெருக்கமானவர்கள் கஷ்டத்துடன் போராடுகிறபோது அவர்களுக்கு கருணை மனதுடன் உதவி செய்யவேண்டும் என்கிற தைரியத்தை இன்று நாம் கொண்டிருக்கிறோமா? நம்மில் எத்தனை பேரிடம் இரக்கமும், கருணையும் இருக்கிறது? கருணை குணமும், மென்மையான தன்மையும் நமக்கு வேண்டும் என தெரிவித்தார்

பின்னர் ஈராக்கில் குர்திஷ்தான் தன்னாட்சி பகுதியில் தீவிரவாதிகளின் தாக்குதல் காரணமாக இடம் பெயர்ந்த ஒன்றரை இலட்சம் கிறிஸ்தவர்களுக்காக தொலைபேசி மூலம் உரையாற்றினார்.

அப்போது அவர் பேசும் போது, சகோதரர்களே உங்களுக்கு அருகாமையில் நான் இருக்கிறேன். இதயத்தில் மிக மிக நெருக்கமாக இருக்கிறேன். குழந்தைகளும், முதியவர்களும் என் இதயத்தில் இடம் பிடித்து இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

இயேசு கிறிஸ்து பிறந்த இடமான மேற்கு கரையில் உள்ள பெத்லகேமிலும் கிறிஸ்மஸ் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு, இந்த பகுதியில் இஸ்ரேல்-பாலஸ்தீனத்தின் தீவிரவாதிகளுக்கு இடையே நடந்த கடும் சண்டையால் பெத்லகேமுக்கு வரும் வெளிநாட்டு பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தது.

ஆனால் அண்மைக் காலமாக இப்பகுதியில் சண்டை எதுவும் நடக்காததால் பெத்லகேமில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான கிறிஸ்தவர்கள் திரண்டனர். பலர் கிறிஸ்மஸ் தாத்தா உடையணிந்து வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு பரிசு பொருட்களையும் வழங்கி மகிழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## விமானம் விபத்துக்குள்ளானதில் 7 பேர் சம்பவ இடத்தில் மரணம்

ஸ்பெயின் நாட்டில் சிறிய ரக பயணிகள் விமானம் ஒன்று கொலம்பியாவின் தெற்குப் பகுதியில் விபத்துக்குள்ளானது. இதில் விமானி மற்றும் விமானத்தில் பயணித்த பயணிகள் உட்பட 7 பேரும் பலியானார்கள்.

இவ்விபத்து நடப்பதற்கு சில நிமிடங்கள் முன் விமான போக்குவரத்து கண்காணிப்பகத்திடம் இயந்திரக் கோளாறு ஏற்பட்டிருப்பதாக விமானி எச்சரிக்கை செய்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆலஸ் என்ற சிறிய உள்ளூர் விமான சேவை நிறுவனத்திற்குச் சொந்தமான செஸ்னா எனப்படும் இந்த விமானம், புக்காரமங்காவிலிருந்து மலாகா வழியாக போய்க் கொண்டிருந்தது. அப்போது திடீரென விமானம் தன் கட்டுப்பாட்டை இழப்பதை உணர்ந்தார். போகோடாவிலிருந்து 395 கி.மீ. வடகிழக்கில் விமானம் பயணித்துக் கொண்டிருந்த நிலையில், விமானத்தை உடனடியாக புக்காரமங்காவிறகு திருப்பிக் கொண்டு போக விமானி முயற்சி செய்தார்.

விமான இயந்திரத்தில் 'ஆயில் பிரஷர்' இல்லாமல் போனதை உணர்ந்த அவர் உடனடியாக விமான போக்குவரத்து கண்காணிப்பகத்திடமும் தகவல் அளித்தார். சில நிமிடங்களில் விமானத்தை தரையிறக்க அவர் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்து, அங்குள்ள தரிசு நிலத்தில் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதாக தெரிய வந்துள்ளது.

ஆனால் இத்தகவலை அந நாட்டு விமான போக்குவரத்து ஆணையம் இதுவரை உறுதிப்படுத்தவில்லை. (இ-5)




## 6 பிள்ளைகளை கழுத்து நெரித்து கொலை செய்த இராணுவ வீரர்!

### தடுத்த மனைவியையும் விட்டு வைக்கவில்லை

மெக்சிக்கோ நகரின் புறநகர் பகுதியான எகோடபெக் பகுதியில் நேற்று இராணுவ வீரர் ஒருவர், தனது 6 குழந்தைகளையும் கழுத்தை நெரித்து கொலை செய்தார். இதனை தடுக்க முயன்ற தனது மனைவியை வயிற்றில் அடித்து கொலை செய்ததோடு, தானும தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இறந்த குழந்தைகளில் 2 பேர் பெண் குழந்தைகள்.

தகவல் அறிந்ததும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று சடலங்களை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகிறார்கள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் உயிரிழந்த சம்பவம் மெக்சிக்கோவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவத்திற்கான காரணம் உடனடியாக தெரியவரவில்லை. (இ-5)

## அமெரிக்காவுக்கு எதிராக கடல் மார்க்கமாக அணுஆயுத தாக்குதலுக்கு தயாராகும் சீனா

(பீஜிங்)

அமெரிக்காவை கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் ஏவுகணைகள் மூலம் மட்டுமே தாக்குதல் நடத்த தயாராக இருந்த சீனா, தற்போது கடல் வழியாக அணு ஆயுதத் தாக்குதல் நடத்தத் தயாராகியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தங்களது நீர்மூழ்கிக் கப்பல்களிலிருந்து கடல் வழியாக தாக்கும் பேலிஸ்டிக் அணு ஆயுத ஏவுகணைகளைத் தயாரிப்பதில் முன்னேறியிருப்பதாக அமெரிக்க-சீனா பாதுகாப்பு மறு-ஆய்வு கமிஷன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவழித் தாக்குதல் தொடுக்கும் ஏவுகணைகளை அமெரிக்கா சுலபமாக அடையாளம் கண்டு முதல் ஏவுதலிலேயே முறியடிக்கும் திறன் கொண்டுள்ளதால் சீனா தற்போது எளிதில் அழிக்க முடியாத கடல்வழி அணு ஆயுதத் தாக்குதலுக்கான தயாரிப்பு முயற்சியில் இறங்கியுள்ளது.

ஜே.எல்.2 ஏவுகணைகளை சீனா கடல் வழியாக தயார் நிலையில் வைக்க ஏற்பாடுகள் செய்து வருவதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இந்த ஏவுகணைகள் சுமார் 7,350 கி.மீ. தூரம சென்று தாக்குதல் நடத்தக் கூடிய திறன் கொண்டது.

ஏற்கனவே அணுத் திறன கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்களை 2007ஆம் ஆண்டே சீனா அறிமுகம் செய்துள்ளது.

ஆனால்இப்போதுஜேஎல்2 கடலடி ஏவுகணைகள் அடி ஆழத்திலிருந்தும் கூட தாக்குதல் செய்யும் திறன் கொண்டது. அமெரிக்காவில் உள்ள அலாஸ்கா இதனால் சீனாவின் தாக்குதல் வட்டத்திற்கு அருகில் உள்ளது.

ஜப்பானுக்கு தெற்கே கடலிலிருந்து இந்த ஆயுதங்கள் மூலம் தாக்குதல் தொடுத்தால் ஹவாய் இலக்காகும். பசுபிக் கடற்பகுதியில் சீனாவின் சுற்றுப்புற எல்லைகளில் சுமார் 3,60,000 அமெரிக்க கடற்படையினர் நிறுத்தப்பட்டுள்ளமை சீனாவின் கவலைகளை அதிகரித்துள்ளது. இப்பகுதியில் அமெரிக்கக் கடற்படையின் சுமார் 200 கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்தப் புதிய கடல்வழி அணு ஆயுத முயற்சியினால் அமெரிக்க அணு ஆயுதத் தாக்குதலிலிருந்து சீனா தன்னை முழுமையாக தற்காத்துக் கொண்டுள்ளதாக அந்த நாட்டு நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.(இ-5)

## ஸ்பெயினில் அதிகரித்து வரும் ஊழல் குறித்து மன்னர் கவலை

ஸ்பெயினில் ஊழல் அதிகரித்து வருவது குறித்து நாட்டின புதிய மன்னர் கவலை வெளியிட்டுள்ளார். நாட்டு மக்களுக்கான தனது முதல் கிறிஸ்மஸ தின உரையில், மன்னர் ஆறாவது ஃபெலிப்பே, ஸ்பெயினில் ஊழல் முடிவில்லாமல் தொடருவது போலத் தோன்றுகிறது என்று கூறியுள்ளார்.

பொதுவாழ்விலும், அரசு அதிகார பொறுப்புகளில் உள்ளவர்களும், தமது பதவி மற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்தி இலாபம் ஈட்டி செல்வந்தர்களாவதற்கு உரிமை கிடையாது என்றும் மன்னர் வலியுறுத்தியுள்ளார்.

எனினும் தனது உரையில் வரிமோசடிகள் செய்தார் என்று இரண்டு குற்றச் சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கும தனது சகோதரி குறித்து ஏதும் குறிப்பிட்டு சொல்லவில்லை.

இளவரசி கிறிஸ்ட்டினா அவரது கணவருடன்இணைந்து வரிமோசடிகளில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்

அவர்கள் மீதான குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமாயின், இருவருக்கும் எட்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கலாம்.

ஆனால்மன்னர்தனது சகோதரியை குறிவைத்தே நாட்டில் ஊழல் தொடர்பான கருத்துக்களை வெளியிட்டுள்ளார் என்ற கேள்விக்கே இடமில்லை என்று அரச குடும்பச் செயற்பாடுகளை கூர்மையாக கவனித்து வரும் விமர்சகர்கள் கூறுகிறார்கள். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் துப்பாக்கியினால் சுட்டு வெற்றியை கொண்டாடிய எம்எல்ஏ

ஜம்மு காஷ்மீரில் தேர்தல் முடிவுகள் வெளியான தினம் அன்று சோன்வார் தொகுதியில் அம்மாநில முன்னாள் முதலமைச்சர் உமர் அப்துல்லாவை எதிர்த்து போட்டியிட்ட பா.ஜ.கவைச் சேர்ந்த முகம்மது ஆஷ்ரப்மிர் என்ற நபர், தான் வெற்றி பெற்றது தெரிந்ததும் கையில இருந்த தானியங்கி துப்பாக்கி மூலம் சில ரவுண்டுகள் சுட்டு தனது வெறறியை கொண்டாடியதால் புதிய சர்ச்சை எழுந்துள்ளது.

வாட்ஸ் அப்" போன்ற சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வரும் இந்த வீடியோவில் மக்கள் ஜனநாயக கட்சி (PDP) தலைவர்களில் ஒருவரான முகம் மது ஆஷ்ரப் மிர் வெற்றியை கொணடாடும் வகையில ஏகே-47 ரக துப்பாக்கி மூலம் வானத்தை நோக்கி சில ரவுண்டுகள் சுட்டு கொண்டாடுகிறார். அப்போது அவரது ஆதர வாளர்களும் அவரை தோளில் சுமந்தபடி கொண்டாடி வருகின்றனர்.

இருந்த போதிலும், எம்.எல்.ஏ மிர் இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளார். தனது அரசியல் எதிரிகள் போலியாய் இந்த வீடியோவை உருவாக்கி உள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார். பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில், "நான் துப்பாக்கியால் ஒருமுறை கூட சுடவில்லை. எனது வெற்றிக்கு பிறகு எனது தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தனது துப்பாக்கியை கீழே தவறி போட்டு விட்டார் நான் அதை மீட்டு பாதுகாபபு அதிகாரியிடம் மீண்டும் ஒப்படைத்தேன்" என்று தெரிவித்துள்ளார்.

சோன்வார் தொகுதியில் மக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டியிட்ட அஷ்ரப் மிர், 47 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் உமர் அப்துல்லாவை வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# அசாம் கலவரத்தை தடுக்க மத்திய அரசு தவறிவிட்டது

## சிவசேனா குற்றச்சாட்டு

**அசாம் பழங்குடியின மக்கள் மீது போடோ தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை தடுத்து நிறுத்த மத்திய அரசு தவறி விட்டது என்று சிவசேனா குற்றம் சாட்டியுள்ளது.**

அசாமில் போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணி (என்.டி.எப்.பி) என்ற தீவிரவாத அமைப்பு, அருணாச்சல பிரதேச எல்லையில் இருக்கும் அசாமின் சோனித் பூர், கோக்ரஜார், சிராங் ஆகிய மாவட்டங்களில் 5 கிராமங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தினர். இந்த கண்மூடித்தனமான தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 81 ஆக உயர்ந்துள்ளது.

இதனால் அருணாச்சல பிரதேச - அசாம் எல்லைப் பகுதியில் பதற்றமான சூழல் நிலவுகிறது. இந்த நிலையில் அசாமில் பழங்குடியின மக்கள் மீதான தாக்குதலை குறிப்பிட்டு சிவசேனா தனது அதிகார பூர்வ பத்திரிகையான சாம்னாவில் மத்திய அரசை கண்டித்து தலையங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், அசாமில் பல ஆண்டுகளாக வன்முறைகளும் அத்துமீறல்களும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் மத்தியில் ஆட்சி அமைக்கும் எந்த தலைமையும் அந்த மக்களின் பிரச்சினைகளை புரிந்துகொள்ளவும் இல்லை, அவர்கள் நலனுக்காக செயற்படவும் இல்லை.

ஏனென்றால் அசாம் மாநில மக்களின் துயரங்களை யாரும் கண்டுகொள்வதில்லை. கொத்து கொத்தாக மக்கள் கொல்லப்படுவது குறித்து யாரும் கவலை கொள்வதும் இல்லை. அரசியல் கட்சிகள் தங்களது அரசியல் ஆதாயத்துக்காக அத்துமீறி நுழையும் வங்க தேசத்தவர்களை கண்டும் காணாமல் விட்டுவிடுகின்றனர். இதனால் தான் அசாம் போன்ற மாநிலங்கள் தீவிரவாதிகளின் தாக்குதலில் பேரிழப்பை சந்திக்க நேரிடுகிறது.

1971இலிருந்து அசாம் மாநில மக்களின் துயரங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இதற்கு யாரும் முடிவு கொண்டு வர தயாராக இல்லை. ஆட்சியாளர்கள் அனைவரும் அவர்களது அரசியல் சுயநலத்தில் மட்டுமே குறியாக இருக்கின்றனர். வங்கதேசத்தவர்களை அத்துமீறி உள்ளே நுழைய அனுமதித்து வாக்குகளை வாங்கியவர்கள், அதற்கு பின்னர் கூட தங்களது செயலுக்காக வருந்தவில்லை. வட கிழக்கு மாநிலங்களின் நிலை குறித்து இங்கு யாருக்கும் கவலை இல்லை எனறு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (இ-5)

# கேரளாவிலும் 58 பேர் இந்துக்களாக மாற்றம்

கேரள மாநிலம், கோட்டயத்தில் நேறறுமுன்தினம் வியாழக்கிழமை 58 பேர் இந்து மதத்துக்கு மாறியுள்ளதாக விஷ்வ இந்து பரீஷத் அமைப்பு தெரிவித்துள்ளது. கேரளாவில் கிறிஸ்மஸ தினமான நேற்று முன்தினம் வியாழக்கிழமை, பல்வேறு இடங்களில மதமாற்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. வைக்கம், குமரகம், தஞ்சிரப்பள்ளி உள்ளிட்ட இடங்களைச் சேர்ந்தவர்கள், தாங்களாகவே விருப்பப்பட்டு இந்து மதத்துக்குத் திரும்பியுள்ளனர். அதில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்கள். ஒருவ[illegible] முஸ்லிம். பொன்குன்னம் பகுதியிலுள்ள புதிய காவுதேவி கோயிலில் 42 பேரும், திருவானைக்கரையிலுள்ள ஸ்ரீகிருஷ்ண சாமி கோயிலில் 16 பேரும் மதம் மாற்றம் செய்து கொண்டனர் என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# கோட்சேவுக்கு சிலை வைப்பது தேசத்துரோகமாகும்-ராமதாஸ்

கோட்சேவுக்கு நாடு முழுதும் சிலை அமைக்கும் இந்து மகாசபைக்கு பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் கடும் கண்டனங்களை தெரிவித்துள்ளார. நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிககையில், தேசத்தந்தை மகாத்மாகாந்தியை உலகமே போற்றிக் கொணடிருக்கும் நிலையில், அவரது புகழைக் குலைக்கும் வகையிலும் இந்துத்துவத்தின் அடையாளத்தை உயர்த்திப் பிடிக்கும் வகையிலும் காந்தியை படுகொலை செய்த நாதுராம் கோட்சேவின் சிலையை நாடு முழுவதும் அமைக்க அகில பாரதிய இந்து மகாசபை தீர்மானித்திருக்கிறது.

சங்க பரிவாரங்களின் ஆதரவு அமைப்புகளில் ஒன்றான அகில பாரதிய இந்து மகாசபையின் இந்த தேச விரோத திட்டம் கடும் கண்டனத்திற்கு உரியதாகும்.

மத்தியில் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சி அமைந்த பின் நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்கள் வேகம் பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இதற்கு மாறாக ஆட்சியாளர்களின் மறைமுக ஆதரவுடன் இந்துத்துவ அமைப்புகள் தங்களின் நீண்ட நாள் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ளும் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன. இந்தியாவின் பல்வேறு மாநில ங்களில் கட்டாய மத மாற்றத்தைத் தீவிரமாகத் தொடங்கியுள்ள இந்து அமைபபுகள், அடுத்தகட்டமாக நாதுராம் கோடசேவுக்கு தேச பக்தர் என்ற முலாம் பூசும் பணிகளைத் தொடங்கியுள்ளன. இதன் ஒரு கட்ட மாக மக்களவையில் பேசிய பா.ஜ.க. உறுப்பினர் சாக்ஷி மகராஜ் கோட்சேவை தேச பக்தர் தேசியவாதி என்று புகழ்ந்தார். இதற்கு கடும எதிர்ப்பு எழுந்ததையடுத்து தமது கருத்தை அவர் திரும்பப்பெற்றுக் கொண்ட நிலையில, அவருக்கு சிலை அமைக்கும் இயக்கத்தை இநது மகாசபை தொடங்கியுளளது. உத்தர பிரதேசத்தின் மீரட் நகரில் கோட்சேவுக்கு சிலை அமைக்க அடிககல் நாட்டப்பட்டுள்ளது என ராமதாஸ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பீகாரில் 200 தலித்துகள் கிறிஸ்தவத்தை தழுவினர்

போத் கயாவின் அடியா என்ற கிராமத்தில் 40 குடும்பங்களைச் சேர்ந்த மகாதலித்துகள் உள்ளூர் பாடசாலை ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் கிறித்தவ மதத்திற்கு மாறியுள்ளனர்.

முதல்வர் ஜீதன் ராம் மஞ்சி, இதே வகுப்பைச் சேர்ந்தவர், இதே மாவட்டத்தைச் சேர்ந்தவர். இருப்பினும இது குறித்து விசாரணை க்கு கோரியுள்ளார்.

இதற்கு முன்னர் 2008ஆம் ஆண்டு இதே கிராமத்தைச் சேர்ந்த 35 குடும்பங்கள் கிறித்தவ மதத்தை தழுவியதும் குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கையில் முன்னேற்றம் காணவே கிறித்தவ மதத்தை தழுவியதாக அவர்கள் கூறியதாகத் தெரிகிறது. கிராமத் தலைவர் முனியா தேவி "பாடசாலையில் நிகழ்ச்சி நடந்தது உண்மை" என்று கூறிய போதும், மதமாற்றம் நடந்ததா? என்பது பற்றி தெரியாது என்று கூறியுள்ளார்.

இந்த மதமாற்றம், வலுக்கட்டாய மதமாற்றமா? என்பதை விசாரணை செய்ய மாநில முதல்வர் உத்தரவிட்டுள்ளார். (இ-5)

பாரதச் செய்தி

# ஜார்க்கண்ட் முதல்வராக ரகுவர்தாஸ் தேர்வானார்

ஜார்க்கண்ட் மாநில முதல்வராக பா.ஜ.க.தேசிய துணைத் தலைவர் ரகுவர்தாஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் பழங்குடிப் பிரிவைச் சேராத ஒருவர் ஜார்க்கண்ட் முதல்வராக பதவியேற்கவுள்ளார்.

நேற்று நடந்த பா.ஜ.க. சட்டமன்றக் கட்சிக் கூட்டத்தில் ரகுவர்தாஸ் முதல்வராக தேர்வு செய்யப்பட்டார். பா.ஜ.க.அரசியல் நோக்கர் நட்டா கூறுகையில், இவரது பெயரை சராயுராய் மற்றும் சி.பி.சிங் ஆகியோர் முன்மொழிய அனைத்து எம்.எல்.ஏக்களும் இதனை வழிமொழிந்தனர்.



இவர் ஜார்க்கண்ட் மாநிலத்தின் முன்னாள் துணை முதல்வராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பா.ஜ.க-அனைத்திந்திய ஜார்கண்ட் மாணவர்கள் சங்க கட்சி கூட்டணி ஜார்க்கண்டில் ஆட்சியமைக்கிறது.

இந்தக் கூட்டணி மொத்தம் 81 இடங்களில் 42 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலையோடு அள்ளுண்டுபோய் ஆண்டுகள் 10 ஆனதுவோ!

2004ஆம் ஆண்டு சுனாமி பேரலையினால் அள்ளுண்டு போன உறவுகளின் ஒரு தசாப்த நினைவு தினம் நேற்றைய தினம் நாடு பூராகவும் அனுஷ்டிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதியன்று கடலில் எழுந்த பேரலையினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் காவு கொள்ளப்பட்டனர். யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டம், கிழக்கு மாகாணம் உட்பட பல்வேறு கரையோர இடங்களில் சுனாமி ஆழிப் பேரலை பாரிய அழிவுகளை ஏற்படுத்தியிருந்தது.

இவ் அழிவின் ஒரு தசாப்தகால நினைவு நிகழ்வுகள் யாழ்.மாவட்டத்தில் உடுத்துறை, மணற்காடு உட்பட பல்வேறு இடங்களில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. கடல் கொண்டு சென்ற தமது உறவுகளை நினைத்து கல்லறைகளில் சாய்ந்து உறவினர் கதறியழுதனர்.

மெழுகுவர்த்தி ஏற்றி, மலர் மாலை அணிவித்து தமது உறவுகளை நெக்குருகி வழிபட்ட காட்சி அனைவரது மனங்களையும் கனக்க வைத்தது.

இந்நினைவு நிகழ்வுகளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் உட்பட அருட் தந்தையர்கள் எனப்பல நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர்.

ஆழிப்பேரலையின் அனர்த்தம் நடைபெற்று 10 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் தற்போதும் அழிவின் எச்சங்கள் சுனாமி நினைவேந்தல் பகுதியில் காட்சியளிக்கின்றன.

இவ் அழிவுகள் இன்னமும் சீர் செய்யப்படாத நிலையிலேயே சுனாமியின் 10 ஆண்டு கால நினைவு நிகழ்வுகள் வடக்கில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளன.

மேலும் உடுத்துறையில் அமைந்துள்ள சுனாமி நினைவுச் சதுக்கம் பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாமல் உள்ளது எனவும் அதனை பொது இடமாகவும் புனித இடமாகவும் மாற்ற நடவடிக்கையெடுக்குமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அங்குள்ள தேவாலயங்களில் பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தன.

மேலும் சுனாமி அனர்த்தத்தின் 10 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு நேற்று காலை 9.15 மணியளவில் உடுத்துறையில் அமைந்துள்ள சுனாமி நினைவுச் சதுக்கத்தில் இடம்பெற்றது. முதல் மாலையை கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பொதுக்கல்லறைக்கு அணிவித்தார். தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் மற்றும் ஈபிடிபி கட்சியினரின் முக்கியஸ்தர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் மாலையணிவித்தனர். தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றும் நிகழ்வு இடம்பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்கள உதவித் திட்டப் பணிப்பாளர் ஆகியோர் இணைந்து பொதுச் சுடரினை ஏற்றி வைத்தனர். அதேவேளை உறவினர்களும் தமது உறவுகளின் கல்லறைகளுக்கு சுடரினை ஏற்றினர்.

இந் நிகழ்வுகளைத் தொடர்ந்து மருதங்கேணி கிராம சேவையாளர் தவராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரமுகர்கள் நினைவுரையாற்றியிருந்தனர்.

(இ-4-64-250)



















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புகையிரத பாதுகாப்பு கடவை அமைக்கப்படவில்லை



கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட ஏ-9 வீதியின் 145 ஆவது மைல்கல் பகுதியில் இருந்து மேற்குப் பக்கமாக செல்லும் கிளி/சிவபாத கலையக பாடசாலை வீதியை குறுக்கறுத்து செல்கின்ற புகையிரதக் கடவைக்கு இதுவரை பாதுகாப்பு கடவை அமைக்கப்படாமையால் அவ்வழியாக பயணிப்போர் அச்சத்துடன் செல்வதாக தெரிவிக்கின்றனர்.

தினமும் இக்கடவையால் பாடசாலை மாணவர்கள், முதியவர்கள் அலுவலர்கள், விவசாயிகள் எனப் பலதரப்பட்ட நூற்றுக்கணக்கானவர்கள் பயணித்து வருகின்றனர்.

அத்துடன் புகையிரத வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் கிளி/சிவபாத கலையக பாடசாலை அமைந்துள்ளது. இங்கு 400 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இம்மாணவர்களில் பெரும்பாலானோர் தினமும் குறித்த பாடசாலைக்கு செல்வதற்கு இப் புகையிரத கடவையை கடந்தே சென்று வருகின்றனர்.

அத்தோடு இப்புகையிரதக் கடவையில் ஏறி மறுபக்கம் இறங்கும் இரு பகுதியும் செப்பனிடப்படாமையால் அதனைக் கடப்போர் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

உயிராபத்தை ஏற்படுத்தும் இவ்வாறான இடங்களில் ஏன் பாதுகாப்பு கடவை அமைக்கப்படவில்லையென பொதுமக்களால் கேள்வி எழுப்பப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட புகையிரத அதிகாரிகள் காலம் தாழ்த்தாது புகையிரத கடவைக்கு ஏறி இறங்கும் இரு பகுதிகளையும் செப்பனிடுவதோடு புகையிரதப் பாதுகாப்புக் கடவையையும் அமைத்துத்தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (2-282)

## உள்நுழைந்த திருடர்கள் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை களவாடிச் சென்றனர்

வீட்டின் முன் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருட்டுப்போயுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கிளிநொச்சி திருநகர் தெற்கு, திருநகர் பகுதியிலுள்ள வீடொன்றில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வீட்டின் முன்பக்க வேலியை பிரித்து வளவினுள் நுழைந்த திருடர்கள் முன்வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த TVS-50XL ரக மோட்டார் சைக்கிளை தம்வசம் எடுத்துக் கொண்டு பின்பகுதி வேலியூடாகதப்பியோடியுள்ளதாக வீட்டு உரிமையாளரினால் தெரிவிக்கப்படுகின்றது.

காலைவேளை வீட்டின் முன் கதவை திறந்து பார்த்த வேளை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் களவுபோனமை தெரிய வந்தது.

இந்நிலையில் வீட்டு உரிமையாளர் குறித்த வாகனத்தை திருடர்கள் எடுத்துச் சென்ற பாதை வழியை தொடர்ந்த போது திருடர்களால் ஒரு சோடி செருப்பு கழற்றி விடப்பட்டிருந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

இதனையடுத்து கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு அவ்விடத்திற்கு மோப்ப நாயுடன் வருகை தந்த பொலிஸார் செருப்புக்களை அந்நாயிடம் வழங்கி தேடுதல்நடவடிக்கையினை ஆரம்பித்தனர்.

மோப்ப நாய் கனகபுரம் விளையாட்டு மைதானம் வரை சென்று திரும்பியது.

இதன்பின்னர் மேலதிக விசாரணையினை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இளைஞன் ஒருவரை அழைத்துச் சென்றனர் என வீட்டு உரிமையாளரால் தெரிவிக்கப்படுகின்றது. (2)

# மழைகாலங்களில் இடம்பெயராது இருக்க மாற்றுக்காணி வழங்க நடவடிக்கை எடுங்கள்

### தம்பனைக்குளம், மடுக்கரை கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வினோ எம்.பியிடம் கோரிக்கை

(குருமன்காடு)

மன்னார் தம்பனைக்குளம் மற்றும் மடுக்கரை கிராமங்களில் வருடா வருடம் ஏற்படும் வெள்ளம் காரணமாக தாம் தொடர்ச்சியாக இடப்பெயர்வுகளை சந்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனவும் எதிர்வருங்காலங்களிலாவது இவ்வாறான இடப்பெயர்வை சந்திக்காது இருக்க மாற்றுககாணி மற்றும் வீட்டுத் திட்டத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு குறித்த இரு கிராம மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கின் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம் நேரில் சென்று பார்வையிட்டார்.




இச்சமயமே அப்பகுதி மக்கள் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர். மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட தம்பனைக்குளம் கிராம மக்கள் தற்போது சின்னப்பண்டிவிரிச்சான் ம.வியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை நேரில் சென்று நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்.

இதன்போது சின்ன பண்டிவிரிச்சான் பாடசாலையில் 6 மலசல கூடங்கள் மாத்திரமே காணப்படுகின்றன. அதனை சுமார் 150 பேர் மாத்திரமே பயன்படுத்த முடியும். ஆனால் குறித்த பாடசாலையில் ஆயிரத்து 200 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இப்பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் பல்வேறு சுகாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என அந்த மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறையிட்டுள்ளனர். இதேவேளை, நானாட்டன் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மடுக்கரை கிராமத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக அக்கிராம மக்கள் நானாட்டான் ம.வி பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அக்கிராம மக்களை பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அம்மக்களுக்கு தேவையான உதவிகள் மேற்கொள்ளுவது குறித்து உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துளளனர்.



இதனைத் தொடர்ந்து வவுனியா கணேசபுரம், கண்ணாட்டி ஆகிய கிராமங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களையும் அவர் பார்வையிட்டதோடு அந்த மக்களுக்கு தேவையான உதவிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார். (2-250)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம் பிரதான மின்கம்பத்துடன் மோதி விபத்து



படங்கள்:-கௌரிகாந்தன்

(நுணாவில்)

கைதடி நுணாவில் பகுதியில் ஏ-9 வீதியால் பயணித்துக் கொண்டிருந்த இராணுவ வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த பிரதான மின் கம்பத்துடன்மோதி விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் நடைபெற்றது.

இவ்விபத்தில் வாகனத்தில் பயணித்த இராணுவ அதிகாரி காலில் சிறுகாயங்களுக்குள்ளானார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்.நோக்கி பயணித்துக் கொண்டிருந்த குறித்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியைவிட்டு விலகி அருகில் இருந்த பிரதான மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது வாகனம் பலத்த சேதத்திற்குள்ளானதுடன் நுணாவில் சந்தியிலிருந்து கைதடி வரை மின்சாரம் தடைப்பட்டது.

உடனடியாக அவ்விடத்திற்கு வந்த மின்சார சபையினர் மீளமைப்புப் பணியில் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (2)

## நீர் நிரம்பிய பரலினுள் குழந்தை தவறுதலாக விழுந்து உயிரிழப்பு

(முக்கொம்பன்)

மழைநீர் சேகரித்து வைக்கப்பட்டிருந்த பரலினுள் குழந்தையொன்று தவறுதலாக விழுந்து உயிரிழந்தது.

இப்பரிதாப சம்பவம் நேற்று காலை 7.30 மணியளவில் தர்மக்கேணி பளையில் நடைபெற்றுள்ளது. இச்சம்பவத்தில் இராஜசேகர் வினியன் (வயது 3) என்ற குழந்தையே மரணமடைந்துள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

பரலில் இருந்த நீரை அள்ளுவதற்கு முற்பட்டவேளை பிரஸ்தாப குழந்தை அதனுள் தவறுதலாக தவறி விழுந்து பலியானது.

இச்சம்பவம் நடைபெற்று நீண்ட நேரத்தின் பின்னர் தாயார் குழந்தையைத் தேடிய போது பரலின் மேற்பகுதியின் வாயிலில் கால் தெரிந்தது.

இதனையடுத்து குழந்தை மீட்கப்பட்டு பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. (2-283)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவனாவது உன்னை ஒரு முறை காட்டிக் கொடுத்தால் அது அவன் குற்றம்.

–ருமேனியப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஜனவரி எட்டு எப்படி முடியும் யார் அறிவார் அச்சோவே!

2015 ஜனவரி 8 ஆம் திகதி நெருங்க நெருங்க நெஞ்சிடி வேகமெடுக்கிறது. ஜனவரி 8 ஆம் திகதி நடக்கும் ஜனாதிபதித் தேர்தலின் முடிவு எப்படி அமையுமோ? ஏது நடக்குமோ? என்ற ஏக்கம் பொதுமக்களை ஆட்டிப்படைக்கிறது.

தேர்தலில் யார் வெல்லுவார்? யார் தோற்பார்? என்று அபிப்பிராயம் சொல்லக்கூட முடியாத அளவில் தேர்தல் நிலைமை உள்ளது.

மகிந்த – மைத்திரிக்கிடையேயான கடும் போட்டியில் யார் வென்றாலும் ஒரு குறிப்பிட்ட சிலர் கைது செய்யப்படுவர் என்பது தவிர்க்க முடியாத உண்மை.

அதேநேரம் தேர்தல் வன்முறைகளும், கலவரங்களும் ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் நிறையவே உண்டு.

தேர்தலைக் குழப்பி விட்டால் என்ன என்று நினைப்போரும் உளர்.

எதுவாயினும் பொலிஸ் மற்றும் படைத் தரப்பினரின் நேர்மைத் தன்மையிலேயே இலங்கையின் எதிர்கால ஜனநாயகம் தங்கியுள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

ஒழுங்கான தேர்தலை நடத்த வேண்டுமென தேர்தல் ஆணையாளர் விரும்பினாலும் அந்த ஒழுங்கை – சட்டத்தை நிலைநாட்டவேண்டிய பொறுப்பு பொலிஸாரைச் சார்ந்ததாகும்.

ஆக, பொலிஸார் பக்கம் சார்பவர்களாக இருந்தால் இலங்கையில் ஜனநாயகம் என்பது வேரறுந்து போகும்.

எனவே, பொலிஸாரினதும் படைத்தரப்பினதும் கைகளில் நாட்டின் ஜனநாயகம் இப்போது உள்ளது என்று கூறலாம்.

இந்த நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையின் விளைவு ஜனநாயகத்திற்கு ஆபத்தானதென்ற உண்மையை இப்போதாவது தென்பகுதி மக்கள் உணர்வார்களா? என்பது கேள்விக்குரியது.

எதுவாயினும் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவா? மைத்திரியா? வெல்வார்கள் என்று பட்டிமன்றம் நடத்துவது தேவையற்றது. நம்மைப் பொறுத்தவரை ஜனவரி 8 ஆம் திகதி தேர்தல் முடிந்த கையோடு அறிவிக்கப்படும் தேர்தல் முடிவுகளின்படி தோற்றுப் போனவர்களைப் பாதுகாப்பது அல்லது தேர்தல் முடிவுக்குப் பின்னர் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படும் கலவரங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கூர் நடவடிக்கை எடுப்பது என்பதே இப்போதிருக்கக்கூடிய ஏக்கமாகும்.

அதாவது ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன தோற்றால் நிலைமை எப்படியாக இருக்கும் என்று ஒரு கணம் கற்பனை செய்து பாருங்கள்.

அந்தக் கற்பனையில் உங்களுக்குக் காட்சியாகத் தெரியக்கூடியவற்றைப் பட்டியலிடுங்கள்.

மாறாக தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோற்று விட்டார் என்று கற்பனை செய்யுங்கள்.

இந்தக்கற்பனையில் உங்கள் மனக்கண் தெரியும் காட்சிகளை வரிசைப்படுத்துங்கள்.

இந்த இரண்டு கற்பனைகளும் ஒரு சுமூகமான முடிவாக – காட்சிகளாக நிச்சயம் இருக்காது என்று அடித்துக்கூறலாம்.

கற்பனையில் மிக மோசமான சம்பவங்கள் தென்படுகின்றன. எனவே, இங்கு கற்பனைகள் எதிர்வுகூறல்களாக மாற்றப்படக்கூடியவை என்பதால், ஒழுங்கான முறையில் தேர்தல் நடைபெறுவதை தேர்தல் திணைக்களமும் தேர்தலைக் கண்காணிக்கும் அமைப்புகளும் முன்கூட்டியே உறுதி செய்ய வேண்டும்.

பொலிஸாருக்கும் படைத்தரப்புக்கும் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் குறித்து சீரமைப்புச் செய்வதும் இங்கு அவசியமான விடயமாகும்.

பொதுவில் சோதிடத்தில் எட்டாம் நம்பர் சிக்கலானது என்று கருதப்படுவதுண்டு. ஜனாதிபதித் தேர்தலும் எட்டாந் திகதியில் (8–ம் நம்பர்) நடத்தப்படுவதால் என்ன? நடக்கும் என்பதை யார் அறிவார் அச்சோவே.

# நூல்கள் வெளியீட்டுவிழா

சபரிமலை ஐயப்பனிடம் 18ஆம் மலை ஏறும் பெருமைக்குரிய குரு சுவாமி அகோரசிவம் சாம்பசிவதாஸன் கலாநிதி அருள்ஜோதிஸ்கந்த சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சார்யாரின் தொகுப்பான மிருக யாத்ரா விஜயம் என்னும் இறுவெட்டும் ஸ்ரீபூத நாத கீதை ஸ்ரீசபரீசன் பஜனாமிருதம் ஆகிய இரண்டு நூல்களும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி கல்யாணமண்டபத்தில் வாழ்நாள் பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது.

வரவேற்புரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ ச. பத்மநாப சர்மாவும் அருளுரையை நல்லைஆதீன முதல்வர், சின்மயாமிஷன் சுவாமிகளும் ஆசியுரைகளை குருசிஷ்யர்களும் வாழ்த்துரையினை சமயப் பெரியார்களும் சிறப்புரையினை சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்களும் மதிப்புரையினை சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக்குருக்களும் நன்றியுரையினை குருசுவாமி இ.அதிஹரசுத சிவாச்சாரியாரும் நிகழ்த்துவர்.

வெளியீட்டு விழா நிகழ்வுகளை வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி. அருள்ஆனந்தன் நெறியாள்கை செய்வார். கோண்டாவில் ஈழத்து சபரி மலை ஐயப்ப தேவஸ்தான விழாக் குழுவினர் ஏற்பாட்டில் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ)

# விபத்துக்களில் 10 மாதங்களில் 1972 பேர் பலி

(கொழும்பு)

கடந்த பத்து மாதங்களில் ஆயிரத்து 972 பேர் வாகன விபத்துக்களில் கொல்லப்பட்டு ள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

நாள் தோறும் ஆபத்தான வாகன விபத்துக்கள் ஏழு அல்லது எட்டு இடம் பெறுகின்றன.

பண்டிகைக் காலங்களில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கின்றது.

பண்டிகைக் காலத்தில் மது போதையில் வாகனம் செலுத்திய அதிகளவானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சாரதிகளின் கவனயீனம், மது போதையில் வாகனம் செலுத்துவது போன்ற காரணிகளே அதிகளவில் விபத்துக்கள் இடம்பெறக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. (எ)

# தண்டப்பணம் செலுத்தினாலும் குணரட்ணம் நாட்டுக்குள் நுழையமுடியாது

இந்த நாட்டின் சட்டங்களை மீறி வெளிநாட்டில் தங்கியுள்ள முன்னிலை சோஷலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்ணம் விசாவுக்கான தண்டப் பணத்தைக் கட்டினாலும் அவருக்கு இந்நாட்டுக்குள் வர இடமளிக்கப்பட மாட்டாது என அரச அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவர் அவுஸ்திரேலியாவின் குடியுரிமை பெற்ற ஒருவராவார். பல்வேறு பெயர்களில் அடையாளப்படுத்தப்படும் இவருக்கு அவுஸ்திரேலிய அரசு அரசியல் புகலிடம் வழங்கியுள்ளது.

இவருக்கு நாட்டின் உள்விவகாரங்களில் ஈடுபட முடியாது. அத்துடன், இலங்கை இராணுவம் வடக்கில் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக சுவிட்சர்லாந்தில் வைத்து இவர் அறிவித்தல்களையும் விடுத்துள்ளார் என சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் அறிவித்துள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, குமார் குணரட்னம் ஜனாதிபதி தேர்தல் முடிவடைய முன்னதாக இலங்கைக்கு விஜயம் செய்வார் என முன்னிலை சோசலிச கட்சி அறிவித்துள்ளது.

அத்துடன், விசா காலம் முடிவடைந்து தொடர்ந்தும் நாட்டில் தங்கி யிருந்தமைக்கான தண்டப் பணம் நேற்று முன்தினம் இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் செலுத்தப்பட்டதாகவும் அக்கட்சி தெரிவித்திருநதமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# படகு கவிழ்ந்து 30பேர் உயிரிழப்பு

வடகிழக்கு கொங்கோவில் படகு ஒன்று ஆற்றில் மூழ்கியதில் குறைந்தது 30 பேர் இறந்திருக்கலாம் என செய்திகள் வெளியாகியுள்ளன.

பயணிகளையும் பொதியையும் ஏற்றிச் சென்ற இந்தப் படகு மூழ்கிய சம்பவத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் தப்பி உயிர் பிழைத்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமையன்று கிஸன்கனி என்ற ஊரின் வடக்கே நடந்த இந்த விபத்தின் விபரங்கள் இப்போது தான் வெளிவந்துள்ளன.

இந்த விபத்தை அடுத்து இந்தப் படகு சென்றுகொண்டிருந்த இசங்கி என்ற ஊரில் இளைஞர்கள் ஆத்திரம் கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்போது நடந்த வன்முறையில் பல அரசு கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# திருவெம்பாவை

**திருச்சிற்றம்பலம்**
**ஆதியும் அந்தமும் இல்லா அரும்**
**பெரும்**
**சோதியை யாம்பாடக் கேட்டேயும்**
**வாள்தடம்கண்**
**மாதே வளருதியோ வன்செவியோ**
**நின்செவிதான்**
**மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய**
**வாழ்த்தொலிபோய்**
**வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி**
**மெய்ம்மறந்து**
**போதார் அமளியின் மேல் நின்றும்**
**புரண்டு இங்ஙண்**
**ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே**
**என்னே**
**ஈதே எம்தோழி பரிசுஏலோர்**
**எம்பாவாய்**
**திருச்சிற்றம்பலம்**

பொருள்: ஒளிபொருந்திய நீண்ட கண்களையுடைய பெண்ணே! முதலும் முடிவும் இல்லாத அரிய பெரிய சோதிப்பிழம்பானவன் இறைவன். அவ்விறைவனை நாம் பாடுவதைக் கேட்டிருந்தும் உறங்குகின்றனையே! உன் காது என்ன? சொல்வதைக் கேளாத வலிய காதோ? பெரியகடவுளது நெடிய சிலம்பணிந்த திருவடிகளை நாங்கள் புகழ்ந்து பாடிய வாழ்த்துப் பாடல்களின் ஒலி தெருவின் கண்கேட்ட அளவிலேயே எங்கள் தோழி ஒருத்தி பொருமி அழுதாள். உடம்பை மறந்தாள். மலர் நிறைந்த படுக்கையின் மீதிருந்து புரண்டு விழுந்தாள். இந்நிலத்தே ஒன்றுக்கும் ஆகாதவள் போல் மூர்ச்சித்துக் கிடந்தாள். இது அவள் தன்மை. அவள் இவ்வாறு இருக்க உன் தன்மை என்னே வியப்புடையது!

கே.கே.கே. சிவபாலன்

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



**ஞானத்திலிருந்து விடுதலை**

ஞானத்திலிருந்து விடுதலை என்பது சிந்தனையளவில் மட்டுமே உள்ள அனுபவ பூர்வமாகக் கிடைக்காத ஞானத்திலிருந்து வெளிவருதல் என்பதாகும். குவிந்துள்ள ஞானத்தின் அனுபவமே நம்மிடம் இல்லை. இது நமது சொந்த அனுபவமாக ஆகும்வரை இத்தகைய ஞானத்தின் குவியல் என்பது நமது ஆன்மீக வளர்ச்சிக்குத் தடையாகவே ஆகிவிடும். ஆகவே அனைத்து கற்றலுமே கல்லாதது ஆகிவிடுகின்றது. நாம் ஞானத்திலேயே அடைபட்டு விடக்கூடாது. ஆனால் அதனை அனுபவிப்பது நோக்கியே நமது குறிக்கோள் இருக்கவேண்டும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ கடவுள் இருந்தால் அவனை நாம்காணவேண்டும், ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும், அப்படியில்லையென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்குபோடுவதை விட நாத்திகனாக இருப் பதே மேல்.

❖ உலகின் குறைகளை பற்றி பேசாதே. குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்கும் நீ குறைகளைகாண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விருப்பினால் உலகை தூற்றாதே.குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே. உலகின்குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா.

❖ சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த இலடசியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து அதிலிருந்து நல் செயல்கள் விளையும்.

❖ வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும், அறிவும் அறியாமையும் ஆகியவற்றின்கலவைதான் மாயா, அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு. இவ் மாயத்துள் நீஎல்லையற்று மகிழ்ச்சிக்காக அலையலாம், ஆனால் நீ தீமையையும் காண்பாய்.தீமையின்றி நன்மை இருக்குமென்பது சிறுபிள்ளை தனம்.

❖ இளைஞர்களே, உங்களுக்குஎன்னிடம் நம்பிக்கை இருக்குமானால், என்னை நம்புவதற்குரிய தைரியம்இருக்குமானால், ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கிறதுஎன்பேன்.மூபலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும்அமைகிறது.

❖ பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தானகாரியம் எதையும் செய்ய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆஸி 259 ஓட்டங்கள் குவிப்பு



இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டின் முதல் நாள் முடிவில் அவுஸ்தி ரேலியா 5 விக்கெட் இழப்பிற்கு 259 ஓட்டங்கள் குவித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. 4 டெஸ்ட் போட்டி கொண்ட இந்த தொடரில் முதல் 2 ஆட்டத்தில் இந்தியா தோற்றது. இதனால் இந்தியா 0-2 என்ற கணக்கில் பின் தங்கி உள்ளது.

3 ஆவது டெஸ்ட் போட்டி நேற்று மெல்பேர்னில் தொடங்கியது. தொடரை இழக்காமல் இருக்க இதில் வெல்ல வேண்டிய கட்டாயத்தில் இந்தியா இருக்கிறது. இந்திய அணியில் வருண் ஆரோன், ரோகித் சர்மாவுக்கு பதில் முகமது ஷமி, லோகேஷ்ராகுல் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். லோகேஷ் ராகுல் அறிமுக வீரர் ஆவார்.

அவுஸ்திரேலிய அணியில ஸ்டார்க், மிச்சேல் மார்சுக்கு பதிலாக ஹாரிஸ், அறிமுக வீரர் ஜோபர்ன்ஸ் சேர்க்கப்பட்டனர். நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய கப்டன் ஸ்டீ வ ன் சுமித் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். தொடக்க வீரர்களாக டேவிட் வார்னர், ரோஜர்ஸ் களம் இறங்கினர். 2 ஆவது ஓவர் கடைசி பந்தில டேவிட் வார்னர் ஓட்டம் எதுவும்எடுக்காமல்அவுட் ஆனார். உமேஷ் யாதவ் பந்தில் தவானிடம் கேட்ச் கொடுத்தார்.

அடுத்து ரோஜர்சுடன் வாட்சன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி பொறுப்புடன் விளையாடியது. இதனால் அவுஸ்திரேலியாவின் ஓட்டங்கள் மளமள வென்று உயர்ந்தது. உணவு இடைவேளையின் போது ஒரு விக்கெட்டுக்கு 92 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. இடைவேளைக்கு பின் அவுஸ்திரேலியா 30 ஆவது ஓவரில் 100 ஓட்டங்களை தொட்டது. ரோஜர்ஸ், வாட்சன் அரை சதம் அடித்தனர். இந்த ஜோடியை முகமது ஷமி பிரித்தார். அவரது பந்தில் ரோஜர்ஸ் அவுட் ஆனார். அவர் 57 ஓட்டங்கள் (126 பந்து, 5 பவுண்டரி) எடுத்தார.

அதற்கு அடுத்த ஓவரில் வாட்சன் (52ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார். அவரது விக்கெட் அஸ்வின் கைப்பற்றினார். அப்போது அவுஸ்திரேலியா 3 விக்கெட்டுக்கு 115 ஓட்டங்களில் இருந்தது. அதன்பின் ஜோடி சேர்ந்த கப்டன் ஸ்டீவன சுமித் ஷான் மார்ஷ் இருவரும் பொறுமையுடன் விளையாடினர். இதனால் அவுஸ்திரேலியாவின் ஓட்டத்தின் வேகம் குறைந்தது. 52 ஆவது ஓவரில 150 ஓட்டங்களை கடந்தது. தேநீர் இடைவேளையின் போது 3 விக்கெட்டுக்கு 174 ஓட்டங்கள் எடுத்தது. சுமித் 34 ஓட்டமும், மார்ஷ் 32 ஓட்டமும் எடுத்து இருந்தனர்.

தேநீர் இடைவேளைக்கு பின் ஷான் மார்ஷ் அவுட் ஆனார். முகமது ஷமி பந்தில் டோனியிடம் கட்ச் கொடுத்தார். அவர் 32 ஓட்டங்கள் எடுத்தார். ஸ்கோர் 4 விக்கெட்டுக்கு 184 ஓட்டங்கள் இருந்தது. அடுத்து புதுமுக வீரர் ஜோபர்ன்ஸ் சுமித்துடன் ஜோடி சேர்நதார். சுமித் அரை சதம் அடித்தார். 66 ஆவது ஓவரில் அவுஸதிரேலியா 200 ஓட்டங்களை கடந்தது.

ஜோபர்ன்ஸ் 13 ஓட்டங்கள் அவுட் ஆனார். அவரது விக்கெட்டை உமேஷ் யாதவ் கைப்பறறினார்.

அடுத்து சுமித்துடன் விக் கெட் கீப்பர் ஹாடின் ஜோடி சேர்ந்தார். இருவரும் விக்கெட் விழாமல் இருக்கும் வகையில் பொறுமையுடன் விளையாடினார்கள். நேற்றைய ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலியா 5 விக்கெட் இழப்புக்கு 259 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சுமித 72 ஓட்டத்திலும், ஹாடின் 23 ஓட்டங்களிலும் களத்தில் உள்ளனர் போட்டியின் இரண்டாம் நாள்ஆட்டம் இன்றாகும். (க)



SPORTS
விளையாட்டுச் செய்திகள்

## மக்கலம் சதம் வலுவான நிலையில் நியூசிலாந்து



மக்கலத்தின் அதிரடியான சதம் மூலம் இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்டின் முதல்நாள் முடிவில் நியூசிலாந்து அணி வலுவான நிலையிலுள்ளது.

நியூசிலாந்துக்கு சென்றுள்ள இலங்கை கிரிக்கெட் அணி 2 டெஸ்ட் மற்றும் 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்குமிடையிலான முதலில் டெஸ்ட் போட்டி கிறைஸ்ட் சர்ச் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

ஆடுகளம் புற்கள் நிறைந்ததாக முழுக்க முழுக்க வேகப் பந்து வீச்சுக்கு ஒத்துழைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மஹேல ஜெயவர்த்தனவின் ஓய்வுக்கு பிறகு இலங்கை அணி களம் இறங்கும் முதல் டெஸ்ட் இதுவாகும்.

[illegible] சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் இந்த டெஸ்டில் விளையாடவில்லை.

நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத்யூஸ் முதலில் களத்தடுப்பில்டுபட தீர்மானித்தார்.

இதன்படி நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அதிரடியாக துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணித் தலைவர் பிரண்டன் மக்கலம் 195 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

நேசம் 85 ஓட்டங்களையும் வில்லியம்சன் 54 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மத்யூஸ் 2 விக்கெட்டினை கைப்பற்றினார். நேற்றைய முதல் நாள் முடிவில் நியூசிலாந்து அணி 7 விக்கெட் இழப்பிற்கு 429 ஓட்டங்களை பெற்றது. போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

## உலகக் கிண்ணத்தில் பங்கேற்பேன் மைக்கல் கிளார்க் நம்பிக்கை



சத்திர சிகிச்சை செய்துள்ள மைக்கல் கிளார்க், தான் உலகக்கிண்ண தொடரில் விளையாட உடற் தகுதி பெற்றுவிடுவேன் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அவுஸ்திரேலியா பத்திரிகையில் அவர் எழுதிவரும் பத்தியில இதனை தெரிவித்துள்ளார்.

இந்திய அணியுடனான முதற் டெஸ்ட் போட்டியில் தசைப் பிடிப்பு ஏற்பட்டதை அடுத்து, தொடரில் இருந்து விலகி சத்திர சிகிச்சை மேற்கொண்டார். அப்போது தன்னால் இனி கிரிக்கெட் விளையாட முடியும் என்று தான் நம்பவில்லை எனவும், அந்த போட்டியே தன் கடைசிப் போட்டியாக அமைய வாய்ப்புக்கள் உள்ளதாகவும் மைக்கல் கிளார்க் தெரிவித்து இருந்தார். இருப்பினும், தனது காயம் சிறப்பாக குணமடைந்து வருவதாகவும், தான் நடக்கும் போது எந்த வலிகளையும் உணரவில்லை எனவும், எனவே மிக விரைவில் தன் காயம் சுகமடைந்துவிடும் எனவும், தன்னால் உலகக்கிண்ண தொடரில் விளையாட முடியும் எனவும் கிளார்க் கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்க கேள்வி அறிவித்தல்

கரைச்சிப் பிரதேச சபைக்குச் சொந்தமான இறைச்சிக்கடைகள் மற்றும், நிறுத்தல் கொட்டகைகள் (கேள்வி மற்றும் மீள் கேள்வி அறிவித்தல்களில் எடுக்கப்படாத நிலையங்கள்) பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன.

**பகிரங்க ஏலம் நடைபெறும் காலம்:-** 30.12.2014 (செவ்வாய்க்கிழமை) மு.ப.10.30 மணிக்கு

**பகிரங்க ஏலம் நடைபெறும் இடம் :-** கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம்

இதில் கேள்விகோர விரும்புவோர் இதற்கான விண்ணப்பப் படிவத்தினை 29.12.2014 திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு முன்னர் உப அலுவலகம், கரைச்சிப் பிரதேச சபையில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப கட்டணம் 1000 ரூபாய்.

குறிப்பு :- விண்ணப்ப படிவங்களை பெறாதவர்கள் பகிரங்க ஏலத்திற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதுடன் பிரதிநிதியாக கலந்து கொள்பவர்கள் விண்ணப்பதாரரால் அனுமதிக்கப்பட்ட கடிதத்தினை தம்வசம் கொண்டிருக்க வேண்டும். பகிரங்க ஏலத்தில் தீர்மானிக்கப்படும் கேள்வித்தொகையில் 1/3 பங்கினை உடனடியாக செலுத்தப்பட வேண்டும்.

| இல | குத்தகையின் பெயர் | கேள்விப்படிவக் கட்டணம் ( NBT, நீங்கலாக) (மீளளிக்கப்படமாட்டாது) |
|---|---|---|
| | **சேவைச் சந்தை - கிளிநொச்சி** | |
| 01. | தராசுக்கொட்டகை-மரக்கறி | 1,000.00 |
| 02. | தராசுக்கொட்டகை-பழம் | 1,000.00 |
| 03. | ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| 04. | தேங்காய் | 1,000.00 |
| 05. | கருவாடு,முட்டை | 1,000.00 |
| 06. | உயிர் இறைச்சிக்கோழி | 1,000.00 |
| 07. | வெற்றிலை,பாக்கு,புகையிலை,இஞ்சி | 1,000.00 |
| | **சேவைச் சந்தை - பரந்தன்** | |
| 01. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 1,000.00 |
| 02. | ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **சேவைச் சந்தை - வட்டக்கச்சி** | |
| 01. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 1,000.00 |
| 02. | மாட்டிறைச்சிக்கடை(இராமநாதபுரம்) | 1,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **சேவைச் சந்தை - இரணைமடு** | |
| 01. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 1,000.00 |
| 02. | மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **சேவைச் சந்தை - உருத்திரபுரம்** | |
| 01. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை | 1,000.00 |
| 02. | மாட்டிறைச்சிக்கடை (D/8) | 1,000.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **சேவைச் சந்தை - ஸ்கந்தபுரம்** | |
| 01. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை, துவிச்சக்கரவண்டி மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 1,000.00 |
| 02. | ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 1,000.00 |
| 04 | மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **சேவைச் சந்தை - தர்மபுரம்** | |
| 01. | தராசுக்கொட்டகை-மீன், மரக்கறி, பழம், வெற்றிலை,பாக்கு, முட்டை | 1,000.00 |
| 02. | மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| 03. | ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **கல்லாறு** | |
| 01. | மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **ஊற்றுப்புலம்** | |
| 01. | கோழியிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **வன்னேரி** | |
| 01. | மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **ஆனைவிழுந்தான்** | |
| 01. | மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **கண்டாவளை** | |
| 01. | மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **புன்னைநீராவி** | |
| 01. | மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **முரசுமோட்டை** | |
| 01. | மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| 02. | கோழியிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **அக்கராயன்** | |
| 01. | மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 |
| | **கல்மடு** | |
| 01. | மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 |

**வைத்திலிங்கம் குகராசா**
**தவிசாளர்.** (சி-9615)

**கரைச்சி பிரதேச சபை**
**கிளிநொச்சி.**

# ஆளும் கட்சியிலிருந்து வெளியேறுகிறார் பைசர்

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் 8ஆம திகதி நடைபெறவுள்ள நிலையில்,மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இருந்து முக்கிய அமைச்சர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை விலகுவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ பொது பல சேனாவின் ஆதரவுடன் போட்டி இடுவாரேயானால், தாம் அரசாங்கத்தில் இருந்து விலகுவேன என்று பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா ஏற்கெனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது (எ-11)

# மைத்திரிபால...

2004 ஆழிப் பேரலை அனர்த்தத்தின் போது அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டன.

இதேபோன்று, பல அரசியல் கட்சிகள் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளித்துள்ளதாகவும் இந்த ஒற்றுமை வெற்றியை உறுதி செய்யும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆழிப் பேரலை அனர்த்தம் ஏற்பட்ட போது ஹெல்பிங் அம்பாந்தோட்டை என்னும திட்டத்தின் ஊடாக பாரியளவு நிதி மோசடி இடம்பெற்றதாகவும் அதனை முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவும் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆழிப் பேரலை அனர்த்தத்தைப் போன்றே இன்று நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்தின் எதேச்சாதிகார நடவடிக்கைகளினால் அழுத்தங்களை எதிர் நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டை மீளக் கட்டியெழுப்ப அனைத்துதரப்பினரதும் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


**நீரிழிவு நோய்**
**கருத்தரங்கும் வைத்திய ஆலோசனையும்**
**யாழ்.வண் மேற்கு வைத்தியசாலை**
**(Dr.கெங்காதரன் வைத்தியசாலை)**



நீரிழிவு நோய்க்கான காரணங்களை விளக்கமான படங்களுடன் ஆலோசனை வழங்க வருகின்றார்.
நீரிழிவு சம்பந்தமான யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியரினால் நடைபெறும் இக்கருத்தரங்கில் இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு பயன்பெற வாருங்கள்.
விரும்பியவர்கள் வைத்திய சேவையையும் பெற்றுக் கொள்ளலாம். வைத்திய சேவையை பெற்றுக் கொள்பவர்க்கு மருந்து வில்லைகள் இலவசம்.

**திகதி - 28/12/2014** **நேரம் - காலை 9 AM**

**NO-60**
**வண் மேற்கு வைத்தியசாலை**
**ஜயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**
**நிர்வாகம்**
(8873)





**காரைநகர் ஈழத்துச் சிதம்பர**
**திருவெம்பாவை 1ம் நாள் உற்சவம்**

'அரும்பெரும் ஜோதியே, முப்போதும் உன் நினைவே'

ஆதி, அந்தம் இல்லாத இறை அருட் பரம்பொருளே,
பௌர்ணமி நிலவுபோல பார் எங்கும் நிறை இறையே,
பாவிகள் எங்களை ஈடேற்றிய அரும் தேடலே,
பிறவிப் பெரும் கடல் நீக்கும் பெரும் அணையே,
பார் எங்கும் போற்றும் பெருந்திருவிழா காரைநகரில்,
அதிகாலையில் எழுந்து, காரிருள் களைந்து,
உம் ஆலயம் நடந்து அருள் பெற்றுய்வோம்

**காரை.S.கெங்காதரன்** B.A (S.L)
(9966)

அனுசரணை:
**S.L.I** - சித்தங்கேணி
(SUCCESS LANGUAGE INSTITUTES)
(சிங்கள, ஆங்கில வகுப்புக்கள்
சகலரிற்கும் நடைபெறுகின்றது)
சிவன் கோவில் அருகில், யாழ்ப்பாணம்.



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,021 567 1532


# மரண அறிவித்தல்



## இராமலிங்கம் இராசரத்தினம்

தையிட்டிபுலம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் சக்கலாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராசரத்தினம் 25.12.2014 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்பையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கலாநிதி சிவகுமார் (பொறியியலாளர் U.K), நந்தினி (U.K), உதயகுமார் (ஜேர்மனி), திருக்குமார் (இ.போ.ச - பருத்தித்துறை), சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகநாதன் (U.K), சசிகலா (U.K), கார்த்திகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகம், செல்லத்துரை, கிளிப்பிள்ளை, செல்லம்மா, சிவபாக்கியம் மற்றும் சோதிப்பிள்ளை, நல்லபிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பரராஜசிங்கம், தவராஜசிங்கம் (பொது முகாமையாளர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் - உடுப்பிட்டி), குலசிங்கம், சங்கரப்பிள்ளை, தில்லைநாயகம், பூமலர், இராசமலர் மற்றும் காலஞ்சென்றவர்களான நடராஜா, மயில்வாகனம், சந்திரசேகரம், கந்தையா, வள்ளிப்பிள்ளை, உமாபதி ஆகியோரின் மைத்துனரும், ரூபிதா, வினிதா, சகானா, ஷர்சிகா, கேசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் எள்ளம்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சக்கலாவத்தை**
**கரணவாய் வடக்கு, கரவெட்டி.** (சி-9614)

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகுகளை...

னமும் 12 நாட்களே உள்ள நிலை யில், பெருவெள்ளம் ஏற்பட்டால் நிலைமையை சமாளிப்பதற்கு படகுகளைத் தயார் நிலையில் வைத்திருக்கும்படி மாவட்ட தேர்தல் அதிகாரிகளை தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கேட்டுக் கொண்டுள்ளார்.

வாக்குப் பெட்டிகளை கொண்டு செல்வது, வாக்களிப்பு நிலைய அதிகாரிகளை கொண்டு செல்வது, வாக்களிப்பு முடிந்த பின்னர் வாக்குப் பெட்டிகளை வாக்கு எண்ணும் நிலையத்துக்கு அனுப்பி வைப்பது உள்ளிட்ட தேவைகளுக்கு, படகுகளை பயன்படுத்த தயாராக இருக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன், வெள்ளத்தினால் பாதிக்காத வகையில், வாக்களிப்பு நிலையங்களை உயரமான கட்டடங்களில் அமைக்கவும் தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார். (எ-11)

# மிக மோசமான...

களும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு-குருணாகல் வீதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளமையால் இல-5, இல-06 வீதிகளின் ஊடாக போக்குவரத்து முற்றாக ஸ்தம்பித மடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியாவுக்கான நுழை வாயில்கள் யாவும் மூடப்பட்டுள்ளதாக நுவரெ லியா பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நுழைவாயில்களை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள மண்சரிவையடுத்தே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

# போர்க்குற்ற...

அவசியமானது என அவர் மீண்டும் வலியுறுத்தியிருந்தார். எனினும் செயலாளர் நாயகம் பான்கீமூனின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

உள்நாட்டு ரீதியில் விசாரணை நடத்தப்பட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் எனவும் சர்வதேச விசாரணைகளுக்கு இடமில்லை எனவும் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 2015-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் திகதி இலங்கை தொடர்பான சர்வதேச நிபுணர் குழுவின் அறிக்கை மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் சமர்ப்பிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. விசாரணைகளுக்கு இடமளிக்கப் போவதில்லை என அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் அறிவித்துள்ளதாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (எ-11)

# மோடிக்கு...

பாரதிய ஜனதாக் கட்சியின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் தலைவரான அரவிந்த் குப்தாவிடம் இதுபற்றிக் கேட்டபோது, இந்த சர்ச்சைக்குள் தான் தேவையற்ற வகையில் இழுக்கப்படுவதாகக் கூறி, இச்செய்தியை நிராகரித்துள்ளார்.

அதேவேளை, மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான பரப்புரையில் ஈடுபடும் தனிநபர்கள் குறித்த விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ள முயன்ற போது, அது குறித்த தகவல்களை வழங்க ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் மறுத்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் சிலர் சுயவிருப்பத்தின் அடிப்படையிலும், சிலர் கொடுப்பனவின் அடிப்படையிலும் பணியாற்றி வருவதாக இவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

அரவிந்த் குப்தா கடந்த நவம்பர் மாதம் கொழும்புக்கு வந்ததாகவும், இந்தப் பயணத்தின் போது அவர் ஜனாதிபதியின் தேர்தல் பரப்புரைக் குழுவில் தனிப்பட்ட ரீதியில் பணியாற்றி இருக்கலாம் என புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், இலங்கைப் பயணம் தொடர்பில் அரவிந்த் குப்தாவிடம் கேட்ட போது, தான் எந்த வணிக நோக்கத்துக்காகவும் இலங்கை செல்லவில்லை என்றும், அங்கு தேர்தல் நோக்கங்களுக்காக எந்தவொரு அரசியல் கட்சியும் தன்னை அணுகவில்லை எனவும் குறிப்பிட்டார் என த ஹிந்து மேலும் தெரிவித்துள்ளது. (எ-11)

# பதுளையில்...

சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 8 பேரின் சடலங்களை இனனும் மீட்கமுடிய வில்லை.

ஹாலிஎல பிரதேசசபைக்குட்பட்ட ரில்பொல என்ற இடத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கிய மூன்று பேரின சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

காணாமல்போன மேலும் பலர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

தொடர்ந்து தேடுதல் பணிகள் நடந்துவருவதாக பதுளை மாவட்ட பேரழிவு முகாமைத்துவ உதவி இயக்குநர் உதயகுமார் கூறினார்.

பதுளை மாவட்டத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் நடந்த பெரும் மண்சரிவில் தேயிலைத் தோட்டக் குடியிருப்புப் பிரதேசம் புதையுண்டு போனதில் கிட்டத்தட்ட 35 பேர் பலியானார்கள்.

இந்தப் பிரதே சத்தில் வசித்த பலர் தொடர்பான தகவல்கள் இல்லை என்று அதிகாரிகள் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பருத்தித்...

பெறுமதியான 25 கிலோக் கிராம் கேரளா கஞ்சாவை நேற்று வெள்ளிக் கிழமை காலை 7.00 மணியளவில் பருத்தித் துறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி நுவான் பி.டந்தநராயன தெரிவித்தார்.

தமக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி தானும் மற்றைய பொலிஸாரும் நேரில் சென்று பார்த்தபோது சந்தேகத்திற்கு இடமாக சாக்கு பொதி ஒன்று இருப்பதை கண்ட பொலிஸார் அதனை மீட்டு பிரித்து பார்த்தபோது அதற்குள் கேரளா கஞ்சா இருப்பதை கண்டு பருத்தித்துறை பொலிஸ்நிலையத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

இது தொடர்பாக எவரையும் கைது செய்யவில்லை என்றும் இது தொடர்பான மேலதிக விசாரணையை பருத்தித்தறை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் கூறினார். (எ-60)

# இராணுவம்...

வின் படத்துடனான சில கடிதங்கள் இராணுவத்தினால், இராணுவ சிப்பாய்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் அனுப்பப்பட்டதாக அது குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆனால், அதனை மறுத்துள்ள இராணுவத்தினர், அவை வருடாந்தம் வழமையாக அனுப்பப்படும் சாதாரண வாழ்த்துச் செய்திகளே என்று கூறியுள்ளனர்.

இது தொடர்பாக டிரான்ஸ்பரன்ஸி இண்டர்நஷனல் அமைப்பின் சார்பிலான ஷான் வீரதுங்க அவர்களை கேட்டபோது, இப்படியான ஆயிரக்கணக்கான கடிதங்கள் தபால் திணைக்களத்தின் மூலம் அனுப்பப்பட்டதாக தமக்கு தகவல் கிடைத்ததாக கூறினார்.

கடந்த சில வாரங்களாகவே இராணுவத்தினர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவான தேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்தப்பட்டதை தாங்கள் அவதானித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த கடிதங்களில் மகிந்த ராஜபக்ஷ அவர்களின் படங்களுடன், கடந்த பத்து வருடங்களாக செய்த சாதனைகள் குறித்து சிங்களத்தில் எழுதப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார். அவை தேர்தல் விதிகளுக்கு முரணானவை என்றார் அவர்.

அவை வெறுமனே வருடாந்தம் இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு அனுப்பப்படும் சாதாரண வாழ்த்து துண்டுப் பிரசுரங்கள் என்று இராணுவம் கூறுவதையும் அவர் நிராகரித்தார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையரிடம் தாங்களும் பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பும் முறைப்பாடு செய்திருந்ததாகவும், அவரும் இவை வெறுமனே வாழ்த்துச் செய்திகள் அல்ல என்பதை புரிந்துகொண்டார் என்றும் குறிப்பிட்ட ஷான் வீரதுங்க, அந்த கடிதங்கள் விநியோகிக்கப்படுவதை நிறுத்துமாறு தபால் மா அதிபருக்கு தேர்தல் ஆணையர் உத்தரவிட்டதாகவும் தெரிவித்தார். (எ-11)

# அரசு...

ரது உரிமைகள், ஜெனரல் பதவி, ஓய்வூதியம், உட்பட அனைத்தையும் வழங்க தயார் எனவும் அரசாங்கம் இந்த பேச்சுக்களின் போது உறுதியளித்துள்ளது.

இதேவேளை அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சில் எந்த பதவியும் வழங்கப்படாது என்றும் தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாகவே பொன்சேகாவின் மருமகன் உறவினரான தனுன திலகரட்ணவிற்குபிணை வழங்கப்பட்டதாகவும், அவரது மனைவியும், பிள்ளைகளும் அவரை அரசுடன் சேருமாறு அழுத்தம் கொடுப்பதாகவும், தகவல் வெளியாகியுள்ளன.

இது குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் சரத் பொன்சேகா தீவிரமாக ஆராய்ந்துள்ளார், இந்த பேச்சுக்களில் திருப்தி அடையாவிட்டால் அவர் கட்சியை கலைத்துவிட்டு அவர் அடுத்த சில நாட்களில் அரசாங்கத்துடன் இணையலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

# பிரபாகரன்...

கள் 2005இல் இந்த மாற்றம் நடக்கவில்லை என்றால் நீங்கள் எங்கே இருந்திருப்பீர்கள்? இந்த நாடு எப்படி இருந்திருக்கும்?

நான் முஸ்லிம்களிடம் கேட்கின்றேன் உங்களுக்கு 2005இல் இந்த மாற்றம் நிகழ்ந்திருக்கவில்லையெனில் நான் ஜனாதிபதியாகாமல் இருந்திருந்தால் தற்போது இந்த நாட்டின் நிலை என்ன? வடக்கில் தனி ராஜ்ஜியம் அமைக்கப்பட்டிருந்தால் நீங்கள் எங்கு இருந்திருப்பீர்கள் வடகிழக்கு என்று தனி இராஜ்ஜியம் ஒன்று உருவாகி அதில் பிரபாகரன் ஆட்சி செய்திருந்தால் இந்த முஸ்லிம் மக்களுக்கு நடந்திருக்கும் நிலை என்ன?

முஸ்லிம் மக்கள் தமது மதத்தை வணங்கும் நேரம் மதத்தலைவர்கள் சென்று கடவுளை வணங்கி விட்டு தமது மனசாட்சியிடம் கேளுங்கள் எங்களுக்கு என்ன நடந்தது? வடக்கில் எத்தனை மணித்தியாலத்திற்குள் நாங்கள்விரட்டப்பட்டோம்என்று. ஆனால்இவை அனைத்தும் உங்களுக்கு திரும்ப பெற்றுத் தரப்பட்டுள்ளது என்றார். (எ-11)

# புலனாய்வுப்....

கொண்டதாக சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்த நாயக்க குற்றம் சுமத்தியிருந்ததுடன் ஆவண மொன்றையும் வெளியிட்டிருந்தார்.

இந்த ஆவணமானது போலியாக தயாரிக்கபட்டது எனவும் இந்தக் கையொப்பங்கள் போலியானவை எனவும் மைத்திரிபாலவும், ரணில் விக்ரமசிங்கவும் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர ரணில் விக்ரமசிங்கபொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் பொலிஸ் மா அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆவணத்தின் மூலப் பிரதி தேடப்பட்டு வருவதாகவும் தம்மிடம் நகல் பிரதி ஒன்றே இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-11)

NEC
இரு இடத்திலும் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
A/L 2017 கலை, வர்த்தக, கணித, உயிரியல், தொழில்நுட்ப பிரிவுகள்
ஆரம்பம்: 03.01.2015
சனி காலை 9.00 மணி
புதிய அனுமதிகளை இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.
(சி-9612)

மாபெரும் புத்தக கண்காட்சியும் மலிவு விற்பனையும்
பாலர் முதல் பாடசாலை உயர்வகுப்பு வரை உள்ள மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்ய.
2015 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டங்கள் உள்ளடங்கலாக்கப்பட்ட பாடப்புத்தகங்கள், பயிற்சிப்புத்தகங்கள், மற்றும் அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள், காகிதாதிகள் பொருட்களையும் அனைத்து இந்திய வெளியீடுகளையும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து புத்தகங்களுக்கும் 20%, பாடசாலை உபகரணங்களுக்கு 10%, அப்பியாசக் கொப்பிகளுக்கு 30 - 40% விசேட விலைக் கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
காலம்:-29.12.2014 முதல் 15.02.2015 வரை
நேரம்:- காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை
யாழ். புத்தகசாலை
305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமையில்)
(சி-9453)
தொடர்புகளுக்கு:-0778349507, 0214525552

பெயர் மாற்றம்
முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவின் அளம்பில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட மரியதாஸ் அமலதாஸன் என்று இதுவரை வழங்கப்பட்டு வந்த எனது பெயரை இன்று தொடக்கம் மரியதாஸ் அமலதாஸ் என மாற்றம் செய்துள்ளேன் என்பதனையும் தொடர்ந்து இப்பெயரையே சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.
உண்மையுள்ள
மரியதாஸ் அமலதாஸ்
(சி-9616)

தேவை
டாடா (TATA) படிஒன்று தேவை. விற்பனைக்கு உள்ளவர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளவும்

விற்பனைக்கு
NP JM XXXX இலக்கத்தையுடைய பெசன் பிளஸ் பைக் ஒன்று சகல ஆவணங்களோடும் விற்பனைக்கு உண்டு.

T.P:-0773720154, 0772768022

வெளிவந்துவிட்டது
வரலாறு - தரம்-10
அலகு-01
வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள்
(புதிய பாட நூலுக்கு ஏற்ப எழுதப்பட்டுள்ளது.)
ஆசிரியர்: R.S. சந்திரன்
கிடைக்கும் இடங்கள்:
றோயல் அக்கடமி - யாழ் நகர்
பூபாலசிங்கம் - யாழ் நகர்
அன்னை புத்தகசாலை - யாழ் நகர்




(8874)
தொடர்புகளுக்கு: 0776649134

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org